தி:பு
2966

திருச்சிற்றம்பலம்

# தோத்திரக்கோவை

தோத்திரக் கோவை
சிவஸ்வாமி ஐயர்
1921

கக.எ. 94

54
தோத்
-|PR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

க.ப. 2966

# ...தோத்திரக்கோவை.

2954 ... 54PR

இது

யாழ்ப்பாணம் பருத்தித்துறை

...சிவஸ்வாமிஐயர் அவர்களால்

...ரம், திருவாசகம், திருவிசைப்பா,

...ல்லாண்டு, புராணம், திருப்புகழ்,

தாயுமானசுவாமிபாடல்,

...பட்டணத்துப்பிள்ளையார்பாடல்,

இராமலிங்கசுவாமிபாடல்

...இவைகளினின்றும் தெரிந்தெடுத்துத்திரட்டப்பட்டு,

2966

தங்கள்

கலாநிதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

விலை ரூபா 1 சதம் 25.

1921.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C. Thillaiampalam

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தோத்திரக்கோவை.

## திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிச்செய்த தேவாரப்பதிகங்கள்.

### திருப்பிரமபுரம். பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௧)

முற்றலாமையிளநாகமோடேனமுளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகலனாப்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௨)

நீர்பரந்தநிமிர்புன்சடைமேலோர்நிலாவெண்மதிசூடி
யேர்பரந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வ
னூர்பரந்தவுலகின்முதலாகியவோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௩)

விண்மகிழ்ந்தமதிலெய்ததுமன்றிவிளங்குதலையோட்டி
லுண்மகிழ்ந்துபலிதேரியவந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவரவம்மலர்க்கொன்றைமலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௪)

ஒருமைபெண்மையுடையன்சடையன்விடையூரும்மிவனென்ன
வருமையாகவுரைசெய்யவமர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல்கொள்ளமிதந்ததோர்காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே (௫)

மறைகலந்தவொலிபாடலொடாடலராகிமழுவேந்தி
யிறைகலந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடியார்பொழினீடுயர்சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௬)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடைமுயங்குபுனலன்னனலன்னெரிவீசிச்சதிர்வெய்தி
யுடைமுயங்குமரவோடுழிதந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழிசூழ்குளிர்கானல்பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௭)

வியரிலங்குவரையுந்தியதோள்களைவீரம்விளைவித்த
வுயரிலங்கையரையன்வலிசெற்றெனதுள்ளங்கவர்கள்வன்
றுயரிலங்கும்முலகிற்பலவூழிகடோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௮)

தாணுதல்செய்திறைகாணியமாலொடுதண்டாமரையானும்
நீணுதல்செய்தொழியந்நிமிர்ந்தானெனதுள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்ம்மகளிர்முதலாகியவையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௯)

புத்தரோடுபொறியில்சமணும்புறங்கூறநெறிநில்லா
வொத்தசொல்லவுலகம்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறுகவ்வுரிபோர்த்ததோர்மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௧௦)

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை
யொருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்பழனம். பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வேதமோதிவெண்ணூல்பூண்டுவெள்ளைஎருதேறிப்
பூதஞ்சூழப்பொலியவருவார்புலியினுரிதோலார்
நாதாவெனவுநக்காவெனவுநம்பாவெனநின்று
பாதந்தொழுவார்பாவந்தீர்ப்பார்பழனநகராரே. (௧)

கண்மேற்கண்ணுஞ்சடைமேற்பிறையுமுடையார்காலனைப்
புண்ணாறுதிரமெதிராறோடப்பொன்றப்புறந்தாளா
லெண்ணாதுதைத்தவெந்தைபெருமானிமவான்மகளோடும்
பண்ணார்களிவண்டறைபூஞ்சோலைப்பழனநகராரே. (௨)

பிறையும்புனலுஞ்சடைமேலுடையார்பறைபோல்விழிகட்பே
யுறையுமயானமிடமாவுடையாருலகர்தலைமக
ளறையுமலர்கொண்டடியார்பரவியாடல்பாடல்செய்
பறையுஞ்சங்கும்பலியுமோவாப்பழனநகராரே. (௩)

உரமன்னுயர்கோட்டுலறுகூகையலறுமயானத்தி
லிரவிற்பூதம்பாடவாடியெழிலாரலர்மேலைப்



பிரமன்றலையினறவமேற்றபெம்மானெமையாளும்
பரமன்பகவன்பரமேச்சுவரன்பழனநகராரே. (௪)

குலவெஞ்சிலையான்மதின்மூன்றெரித்தகொல்லேறுடையண்ணல்
கலவமயிலுங்குயிலும்பயிலுங்கடல்போற்காவேரி
நலமஞ்சடையநறுமாங்கனிகள்குதிகொண்டெதிருந்திப்
பலவின்கனிகள்திரைமுன்சேர்க்கும்பழனநகராரே. (௫)

வீளைக்குரலும்விளிசங்கொலியும்விழவின்னொலியோவா
மூளைத்தலைகொண்டடியாரேத்தப்பொடியாமதிலெய்தா
ரீளைப்படுகிலிலையார்தெங்கிற்குலையார்வாழையின்
பாளைக்கமுகின்பழம்வீழ்சோலைப்பழனநகராரே. (௬)

பொய்யாமொழியார்முறைநயாலேத்திப்புகழ்வார்திருமேனி
செய்யார்கரியமிடற்றார்வெண்ணூல்சேர்ந்தவகலத்தார்
மையாடலினார்புனலான்மல்குசடைமேற்பிறையோடும்
பையாடரவமுடனேவைத்தார்பழனநகராரே. (௭)

மஞ்சோங்குயரமுடையான்மலையைமாறாயெடுத்தான்றோ
ளஞ்சோடஞ்சுமாறுநான்குமடரவூன்றினார்
நஞ்சார்சுடலைப்பொடிநீறணிந்தநம்பான்வம்பாரும்
பைந்தாமரைகள்கழனிசூழ்ந்தபழனநகராரே. (௮)

கடியார்கொன்றைச்சுரும்பின்மாலைகமழ்புன்சடையார்விண்
முடியாப்படிமூவடியாலுலகமுழுதுந்தாவிய
நெடியானீடாமரைமேலயனுந்தேடிக்காணாத
படியார்பொடியாடகலமுடையார்பழனநகராரே. (௯)

கண்டான்கழுவாமுன்னேயோடிக்கலவைக்கஞ்சியை
யுண்டாங்கவர்களுரைக்குஞ்சிறுசொல்லோரார்பாராட்ட
வண்டாமரையின்மலர்மேனறவமதுவாய்மிகவுண்டு
பண்டான்கெழுமவண்டியாழ்செய்யும்பழனநகராரே. (௧௦)

வேய்முத்தோங்கிவிரைமுன்பரக்கும்வேணுபுரந்தன்னு
ளுவய்த்தனையதிறலால்மிக்கஞானசம்பந்தன்
பேசற்கினியபாடல்பயிலும்பெருமான்பழனத்தை
வாயிற்பொலிந்தமாலைபத்தும்வல்லார்நல்லாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவண்ணாமலை. பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பூவார்மலர்கொண்டடியார்தொழுவார்புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்களெரித்தவன்றுமூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின்றதிரவெருவித்தொறுவின்னிரையோடு
மாமாம்பிணைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (௧)

மஞ்சைப்போழ்ந்தமதியஞ்சூடும்வானோர்பெருமானார்
நஞ்சைக்கண்டத்தடக்குமதுவுநன்மைப்பொருள்போலும்

வெஞ்சொற்பேசும்வேடர்மடவாரிதணமதுவேறி
யஞ்சொற்கிளிகளாயோவென்னுமண்ணாமலையாரே. (௨)

ஞானத்திரளாய்நின்றபெருமானல்லவடியார்மே
லூனத்திரளைநீக்குமதுவுமுண்மைப்பொருள்போலு
மேனத்திரளோடினமான்கரடியிழியுமிரவின்க
ணானைத்திரள்வந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (௩)

இழைத்தவிடையாளுமையாள்பங்கரிமையோர்பெருமானார்
தழைத்தசடையார்விடையொன்றேறித்தரியார்புரமெய்தார்
பிழைத்தபிடியைக்காணாதோடிப்பெருங்கைமதவேழ
மழைத்துத்திரிந்தங்குறங்குஞ்சாரலண்ணாமலையாரே. (௪)

உருவிற்றிகழுமுமையாள்பங்கரிமையோர்பெருமானார்
செருவிலொருகால்வளையவூன்றிச்செந்தீயெழுவித்தார்
பருவிற்குறவர்புனத்திற்குவித்தபருமாமணிமுத்த
மருவித்திரளோடிழியுஞ்சாரலண்ணாமலையாரே. (௫)

எனைத்தோரூழியடியாரேத்தவிமையோர்பெருமானார்
நினைத்துத்தொழுவார்பாவந்தீர்க்குநிமலருறைகோயில்
கனைத்தமேதிகாணாதாயன்கைமேற்குழலூத
வனைத்துஞ்சென்றுதிரளுஞ்சாரலண்ணாமலையாரே. (௬)

வந்தித்திருக்குமடியார்தங்கள்வருமேல்வினையோடு
பந்தித்திருந்தபாவந்தீர்க்கும்பரமனுறைகோயில்
முந்தியெழுந்தமுழவினோசைமுதுகல்வரைகண்மே
லந்திப்பிறைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (௭)

மறந்தான்கருதிவலியைநினைந்துமாறாயெடுத்தான்றோ
ணிறந்தான்முறியநெரியவூன்றிநிறையவருள்செய்தார்
திறந்தான்காட்டியருளாயென்றுதேவரவர்வேண்ட
வறந்தான்காட்டியருளிச்செய்தாரண்ணாமலையாரே. (௮)

தேடிக்காணார்திருமால்பிரமன்றேவர்பெருமானை
மூடியோங்கிமுதுவேயுகுத்தமுத்தம்பலகொண்டு
கூடிக்குறவர்மடவார்குவித்துக்கொள்ளவம்மினென்
றாடிப்பாடியளக்குஞ்சாரலண்ணாமலையாரே. (௯)

தட்டையிடுக்கித்தலையைப்பறித்துச்சமணேநின்றுண்ணும்
பிட்டர்சொல்லுக்கொள்ளவேண்டாபேணித்தொழுமின்கள்
வட்டமுலையாளுமையாள்பங்கர்மன்னியுறைகோயி
லட்டமாளித்திரள்வந்தணையுமண்ணாமலையாரே. (௧௦)

அல்லாடரவமியங்குஞ்சாரலண்ணாமலையாரை
நல்லார்பரவப்படுவான்காழிஞானசம்பந்தன்
சொல்லால்மலிந்தபாடலானபத்துமிவைகற்று
வல்லாரெல்லாம்வானோர்வணங்கமன்னிவாழ்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.



கோயில். பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கற்றாங்கெரியோம்பிக்கலியைவாராமே
செற்றார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
முற்றாவெண்டிங்கண்முதல்வன்பாதமே
பற்றாநின்றாரைப்பற்றாபாவமே. (௧)

பறப்பைபடுத்தெங்கும்பசுவேட்டெரியோம்புஞ்
சிறப்பர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
பிறப்பில்பெருமானைப்பின்றாழ்சடையானை
மறப்பிலார்கண்டீர்மையல்தீர்வாரே. (௨)

மையாரொண்கண்ணார்மாடநெடுவீதிக்
கையாற்பந்தோச்சுங்கழிசூழ்தில்லையுட்
பொய்யாமறைபாடல்புரிந்தானுலகேத்தச்
செய்யானுறைகோயில்சிற்றம்பலந்தானே. (௩)

நிறைவெண்கொடிமாடநெற்றிநேர்தீண்டப்
பிறைவந்திறைதாக்கும்பேரம்பலந்தில்லைச்
சிறைவண்டறையோவாச்சிற்றம்பலமேய
இறைவன்கழலேத்துமின்பமின்பமே. (௪)

செல்வநெடுமாடஞ்சென்றுசேணோங்கிச்
செல்வமதிதோயச்செல்வமுயர்கின்ற
செல்வர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
செல்வன்கழலேத்துஞ்செல்வஞ்செல்வமே. (௫)

வருமாந்தளிர்மேனிமாதோர்பாகமாந்
திருமாந்தில்லையுட்சிற்றம்பலமேய
கருமானுரியாடைக்கறைசேர்கண்டத்தெம்
பெருமான்கழலல்லாற்பேணாதுள்ளமே. (௬)

அலையார்புனல்சூடியாகத்தொருபாக
மலையான்மகளோடுமகிழ்ந்தானுலகேத்தச்
சிலையாலெயிலெய்தான்சிற்றம்பலந்தன்னைத்
தலையால்வணங்குவார்தலையானார்களே. (௭)

கூர்வாளரக்கன்றன்வலியைக்குறைவித்துச்
சீராலேமல்குசிற்றம்பலமேய
நீரார்சடையானைநித்தலேத்துவார்
தீராநோயெல்லாந்தீர்தறிண்ணமே. (௮)

கோணாகணையானுங்குளிர்தாமரையானுங்
காணார்கழலேத்தக்கனலாயோங்கினான்
சேணார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேத்த
மாணாநோயெல்லாம்வாளாமாயுமே. (௯)

பட்டைத்துவராடைப்படிமங்கொண்டாடு
முட்டைக்கட்டுரைமொழிவகேளாதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்டர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
நட்டப்பெருமானைநாளுந்தொழுவோமே. (௧௦)

ஞாலத்துயர்காழிஞானசம்பந்தன்
சீலத்தார்கொள்கைச்சிற்றம்பலமேய
சூலப்படையானைச்சொன்னதமிழ்மாலை
கோலத்தாற்பாடவல்லார்நல்லாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கழுமலம்-திருத்தாளச்சதி. பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பந்தத்தால்வந்தெப்பால்பயின்றுநின்றவும்பரப்
பாலேசேர்வாயேனோர்கான்பயில்கணமுனிவர்களுஞ்
சிந்தித்தேவந்திப்பச்சிலம்பின்மங்கைதன்னொடுஞ்
சேர்வார்நாணீள்கயிலைத்திகழ்தருபரிசதெலாஞ்
சந்தித்தேயிந்தப்பார்சனங்கணின்றுதங்கணாற்
றாமேகாணாவாழ்வாரத்தகவுசெய்தவனிடங்
கந்தத்தாலெண்டிக்குங்கமழ்ந்திலங்குசந்தனக்
காடார்பூவார்சீர்மேவுங்கழுமலவளநகரே. (௧)

பிச்சைக்கேயிச்சித்துப்பிசைந்தணிந்தவெண்பொடிப்
பீடார்நீடார்மாடாரும்பிறைநுதலரிவையொடு
முச்சத்தால்நச்சிப்போவொருடர்ந்தடர்ந்தவெங்கணே
றூராவூராநீள்வீதிப்பயில்வொடுமொலிசெயிசை
வச்சத்தானச்சச்சேர்வடங்கொள்கொங்கைமங்கைமார்
வாராநேரேமாலாகும்வசிவலவனிடங்
கச்சத்தான்மெச்சிப்பூக்கலந்திலங்குவண்டினங்
காரார்காரார்நீள்சோலைக்கழுமலவளநகரே. (௨)

திங்கட்கேதும்பைக்கேதிகழ்ந்திலங்குமத்தையின்
சேரேசேரேநீராகச்செறிதருசுரநதியோ
டங்கைச்சேர்வின்றிக்கேயடைந்துடைந்தவெண்டலைப்
பாலேமேலேமாலேயப்படர்வுறுமவனிறகும்
பொங்கப்பேர்நஞ்சைச்சேர்புயங்கமங்கள்கொன்றையின்
போதார்தாரேதாமேவிப்புரிதருசடையனிடங்
கங்கைக்கேயும்பொற்பார்கலந்துவந்தபொன்னியின்
காலேவாராமேலேபாய்கழுமலவளநகரே. (௩)

அண்டத்தாலெண்டிக்குமமைந்தடங்குமண்டலத்
தாறேவேறேவானாள்வாரவரவரிடமதெனா
மண்டிப்போய்வென்றிப்போர்மலைந்தலைந்தவும்பரு
மாறேலாதார்தாமேவும்வலிமிகுபுரமெரிய
முண்டத்தேவெந்திட்டமுடிந்திடிந்தவிஞ்சிசூழ்
மூவாமூதூர்மூதூராமுனிவுசெய்தவனிடங்
கண்டிட்டேசெஞ்சொற்சேர்கவின்சிறந்தமந்திரக்
காலேயோவாதார்மேவுங்கழுமலவளநகரே. (௪)



திக்கிற்றேவற்றற்றேறுதிகழ்ந்திலங்குமண்டலச்
சீரூர்வீரூர்போரார்தாருகனுடலவனெதிரே
புக்கிட்டேவெட்டிட்டேபுகைந்தெழுந்தசண்டத்தீப்
போலேபூநீர்தீகான்மீப்புணர்தருமுயிர்கடிறஞ்
சொக்கத்தேநிர்த்தத்தேதொடர்ந்தமங்கைசெங்கதத்
தோடேயாமேமாலோகத்துயர்களைபவனிடங்
கைக்கப்போயுக்கத்தேகனன்றுமீண்டுதெண்டலைக்
காடேயோடாவூரேசேர்கழுமலவளநகரே. (௫)

செற்றிட்டேவெற்றிச்சேர்திகழ்ந்ததும்பிமொய்ம்புறுஞ்
சேரேவாரார்நீள்கோதைத்தெரியிழைபிடியதுவா
யொற்றைச்சேர்முற்றற்கொம்புடைத்தடக்கைமுக்கண்மிக்
கோவாதேபாய்மாதானத்துறுபுகர்முகவிறையைப்
பெற்றிட்டேமற்றிப்பார்பெருத்துமிக்கதுக்கமும்
பேராநோய்தாமேயாமைப்பிரிவுசெய்தவனிடங்
கற்றிட்டேயெட்டெட்டுக்கலைத்துறைக்கரைசெலக்
காணாதாரேசேராமெய்க்கழுமலவளநகரே. (௬)

பத்திப்பேர்வித்திட்டேபரந்தவைம்புலன்கள்வாய்ப்
பாலேபோகாமேகாவாப்பகையறுவகைநினையா
முத்திக்கேவிக்கத்தேமுடிக்குமுக்குணங்கள்வாய்
மூடாவூடாநாலந்தக்கரணமுமொருநெறியாய்ச்
சித்திக்கேயுய்த்திட்டுத்திகழ்ந்தமெய்ப்பரம்பொருள்
சேர்வார்தாமேதானாகச்செயுமவனுறையுமிடங்
கத்திட்டோர்சட்டங்கங்கலந்திலங்குநற்பொருள்
காலேயோவாதார்மேவுங்கழுமலவளநகரே. (௭)

செம்பைச்சேரிஞ்சிச்சூழ்செறிந்திலங்குபைம்பொழிற்
சேரேவாராவாரீசத்திரையெறிநகரிறைவ
னிம்பர்க்கேதஞ்செய்திட்டிருந்தரன்பயின்றவெற்
பேரார்பூநேரோர்பாதத்தெழில்விரலவணிறுவிட்
டம்பொற்பூண்வென்றித்தோளழிந்துவந்தனஞ்செய்தாற்
காரார்கூர்வாள்வாணாளன்றருள்புரிபவனிடங்
கம்பத்தார்தும்பித்திண்கவுட்சொரிந்தமும்மதக்
காரார்சேறூர்மாவீதிக்கழுமலவளநகரே. (௮)

பன்றிக்கோலங்கொண்டிப்படித்தடம்பயின்றிடப்
பானுமாறானுமேயப்பறவையினுருவுகொள
வொன்றிட்டேயம்புச்சேருயர்ந்தபங்கயத்தவ
னோதானோதானஃதுணராதுருவினதடிமுடியுஞ்
சென்றிட்டேவந்திப்பத்திருக்களங்கொள்பைங்கணின்
றேசால்வேறாராகாரந்தெரிவுசெய்தவனிடங்
கன்றுக்கேமுன்றிற்கேகலந்திலன்கிறைக்கவுங்
காலேவாராமேலேபாய்கழுமலவளநகரே. (௯)

தட்டிட்டேமுட்டிக்கைத்தடுக்கிடுக்கிநின்றுணத்
தாமேபேணாதேநாளுஞ்சமணொடுமுழல்பவரு
மிட்டத்தாலத்தந்தானிதன்றதென்றுநின்றவர்க்
கேயாமேவாயேதுச்சொல்விலைமலிமருதம்பூப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புட்டத்தேயட்டிட்டுப்புதைக்குமெக்கொள்புத்தரும்
போல்வார்தாமோராமேபோய்ப்புணர்வுசெய்தவனிடங்
கட்டிக்கால்வெட்டித்திங்கரும்புதந்தபைம்புனற்
காலேவாராமேலேபாய்கழுமலவளநகரே. (௧௦)

கஞ்சத்தேனுண்டிட்டேகளித்துவண்டுசெண்பகக்
கானேதேனேபோராருங்கழுமலநகரிறையைத்
தஞ்சச்சார்சண்பைக்கோன்சமைத்தநற்கலைத்துறை
தாமேபோல்வார்தேனோரார்தமிழ்விரகனமொழிக
ளெஞ்சத்தேய்வின்றிக்கேயிமைத்திசைத்தமைத்தகொண்
டேழேயேழேநாலேமூன்றியலிசையிசையியல்பா
வஞ்சத்தேய்வின்றிக்கேமனங்கொளப்பயிற்றுவோர்
மார்பேசேர்வாள்வானோர்சீர்மதிநுதன்மடவரலே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருத்தருமபுரம். பண்-யாழ்முரி.

திருச்சிற்றம்பலம்.

மாதர்மடப்பிடியு-மட-வன்னமுமன்னதோர்-நடையுடைம்மலைமக-டுணையெனமகிழ்வர், பூதவினப்படைநின்-றிசை-பாடவுமாடுவ-ரவர்படர்சடைநெடு-முடியதோர்புனலர், வேதமோடேழிசைபா-டுவ-ராழ்கடல்வெண்டிரையிரைந்-நுரைகரைபொருது-விம்மிநின்றயலே, தாதவிழ்புன்னைதயங்-கும-லர்ச்சிறைவண்டறை-யெழில்பொழில்குயில்பயில்-தருமபுரம்பதியே. (௧)

பொங்குநடைப்புகலில்-விடை-யாமவரூர்தியெண்-பொடியணிதடங்கொண்மார்பு-பூணநூல்புரள, மங்குலிடைத்தவழு-மதி-சூடுவராடுவர்-வளங்கிளர்புனலரவம்-வைகியசடையர், சங்குகடற்றிரையா-லுதை-யுண்டுசரிந்திரிந்-தொசிந்தசைந்திசைந்துசேரும்-வெண்மணற்குவைமேற், றங்குகதிர்மணிநித்-தில-மெல்லிருளொல்கநின்-றிலங்கொளிநலங்கெழிற்-றருமபுரம்பதியே. ()

விண்ணுறுமால்வரைபோல்-விடை-யேறுவராறுசூ-டுவர்விரிசுரியொளிகொள்-தோடுநின்றிலங்கக்,கண்ணுறநின்றொளிருங்-கதிர்-வெண்மதிக்கண்ணியர்-கழிந்தவர்இழிந்திடு-முடைதலைகலனாப், பெண்ணுறநின்றவர்தம்-முருவம்மயன்மால்தொழ-வரிவையைப்பிணைந்திணைந்-தணைந்ததும்பிரியார், தண்ணிதழ்முல்லையொடெண்-ணிதழ்-மவ்வன்மருங்கலர்-கருங்கழிநெருங்குநற்-றருமபுரம்பதியே. (௩)

வாருறுமென்முலைநன்-னுத-லேழையோடாடுவர்-வளங்கிளர்விளங்குதிங்கள்-வைகியசடையர், காருறநின்றலரும்-மலர்க்-கொன்றையங்கண்ணியர்-கடுவுடைகொடுவெடிகொள்-காடுறைபதியர், பாருறவிண்ணுலகம்-பர-வப்படுவோரவர்-படுதலைப்பலிகொளல்-பரிபவந்நினையார்,தாருறுநல்லரவம்-மலர்-துன்னியதாதிர்-தழைபொழில்மழைந்துழை-தருமபுரம்பதியே. (௪)

நேருமவர்க்குணரப்-புகி-லில்லைநெடுஞ்சடைக்-கடும்புனல்படர்ந்திடப்-படுவதோர்நிலையர், பேருமவர்க்கெனையா-யிர-முன்னைப்பிறப்பிறப்-பிலா



தவருடற்றடாத-பெற்றியராசறிவா, ராரமவர்க்கழல்வா-யதோர்-நாகமழகெழுநறவெழுகொளுமலர்கொள்பொன்-னிதழிகல்லலங்கல்-தாரமவர்க்கிமவான்மகளூர்வதுபோர்விடை-கடிபடுசெடிபொழி-றருமபுரம்பதியே. (௫)

கூழையங்கோதைகுலா-யவ-டம்பிணைபுல்கமல்-குமென்முலைப்பொறிகொள்பொற்-கொடியிடைதுவர்வாய், மாழையொண்கண்மடவா-ளையோர்பாகமகிழ்ந்தவர்-வலம்மலிபடைவிடை-கொடிகொடும்மழுவாள், யாழையுமெள்கிடவே-ழிசை-வண்டுமுரன்றினந்-துவன்றிமென்சிறகறை-யுறந்நறவ்விரியுநற், குழையுஞாழலுந்-டிய-தானலிலன்னலி-சைபுள்ளினந்துயில்பயில்- தருமபுரம்பதியே. (௬)

தேமருவார்குழ- லன்ன- நடைப்பெடைமான்விழித்- திருந்திழைபொருந்துமேனி-செங்கதிர்விரியத், தூமருசெஞ்சடையிற்-றுதை-வெண்மதிதுன்றுகொன்றை-தொல்புனல்கிரங்காந்- துரிந்ததோலுடையர், காமருதண்கழிநீடிய-கானல்கண்டகங்-கடல்லடைகழியிழியமுண்டகத்தயலே, தாமரைசேர்குவளைப்-படுகிற்கழுநீர்மலர்-வெறிகமழ்செறிவயற்-றருமபுரம்பதியே. (௭)

தூவணநீறகலம்-பொலி-யவ்விரைபுல்கமல்- குமென்மலர்வரைபுரைதிரள்புயம்மணிவர், கோவணமும்முழையின்-ன த-ளும்முடையாடையர்-கொலைமலிபடையோர்சூல-மேந்தியகுழகர், பாவணமாவலறத்-தலை-பத்துடையவவ்வரக்க-னவ்வலியோர்கல்லைசெய்-தருள்புரிதலைவர், தாவணவேறுடையெம்மடிகட்கிடம்வன்றடங்-கடல்லிடுந்தடங்கரைத்-தருமபுரம்பதியே. (௮)

வார்மலிமென்முலைமா-தொரு-பாகமதாகுவர்-வளங்கிளர்மதியரவம்-வைகியசடையர்-கூர்மலிசூலமும்வெண்-மழு-வும்மலர்வெல்படை- குனிசிலைதனிமலைய-தேந்தியகுழகர், ஆர்மலியாழிகொள்செல்-வனு- பல்லிகொடாமரைம்-மிசையவனடிம்முடியளவுதாமறியார், தார்மலிகொன்றையலங்-கலுகந்தவர்தங்கிடந்தடங்கடல்லிடுந்திரைத்தருமபுரம்பதியே. (௯)

புத்தர்கடத்துவர்மொய்த்துறி- புல்கியகையர்பொய்- மொழிந்தழிவில்பெற்றியுற்ற-நற்றவர்புல்வோர், பத்தர்கள்த்தவமெய்ப்-பய- னாகவுகந்தவர்- நிகழ்ந்தவர்சவந்தவர்-சடலைப்பொடியணிவர், முத்தனவெண்ணகையொண்-வலைமாதுமைபொன்னணிபுணர்முலையிணைதுணை-யணைவதும்பிரியார், தத்தருவித்திரளுந்-திய-மால்கடலோதம்வந்-தடர்ந்திடுந்தடம்பொழிற்றருமபுரம்பதியே.

பொன்னெடுநன்மணிமா-ளிகை-சூழவிழவம்மலி-பொருபுனல்திருவமர்-புகலியென்றுலகிற், றன்னெடுநேர்பிறவில்-பதி-ஞானசம்பந்தனல்- தசெந்தமிழ்த்தடங்கடற்- றருமபுரம்பதியைப், பின்னெடுவார்சடையிற்-பிறை-யும்மரவம்முடையவன்பிணைதுணைகழல்கள்-பேணுதலுரியா, ரின்னெடுநன்னுலகெய்- தவ-ரெய்தியபோகமு-முறுவர்களிடர்பிணி-துயரணைவிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருச்சிக்கல். பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

வானுலாவும்மதிவந்துலாவும்மதின்மாளிகை
தேனுலாவும்மலர்ச்சோலைமல்குந்திகழ்சிக்கலுள்
வேனல்வேளைவிழித்திட்டவெண்ணெய்ப்பெருமானடி
ஞானமாகநினைவார்வினையாயினநையுமே. (௧)

மடங்கொள்வாளைகுதிகொள்ளுமணமலர்ப்பொய்கைசூழ்
திடங்கொண்மாமறையோரவர்மல்கியசிக்கலுள்
விடங்கொள்கண்டத்துவெண்ணெய்ப்பெருமானடிமேவியே
அடைந்துவாழுமடியாரவரல்லலறுப்பரே. (௨)

நீலநெய்தனிலவிம்மலருஞ்சுனைநீடிய
சேலுமாலுங்கழனிவளம்மல்கியசிக்கலுள்
வேலவொண்கண்ணியினாளையொர்பாகன்வெண்ணெய்ப்பிரான்
பாலகண்ணன்கழலேத்தநம்பாவம்பறையுமே. (௩)

கந்தமுந்தக்கைதைபூத்துக்கமழ்ந்துசேரும்பொழிற்
செந்துவண்டின்னிசைபாடன்மல்குந்திகழ்சிக்கலுள்
வெந்தவெண்ணீற்றண்ணல்வெண்ணெய்ப்பிரான்விரையார்கழல்
சிந்தைசெய்வார்வினையாயினதேய்வதுதிண்ணமே. (௪)

மங்குறங்கும்மறையோர்கண்மாடத்தயலேமிகு
தெங்குதுங்கப்பொழிற்செல்வமல்குந்திகழ்சிக்கலுள்
வெங்கண்வெள்ளேறுடைவெண்ணெய்ப்பிரானடிமேவவே
தங்குமேன்மைசரதந்திருநாளுந்தகையுமே. (௫)

வண்டிரைத்தும்மதுவிம்மியமாமலர்ப்பொய்கைசூழ்
தெண்டிரைக்கொள்புனல்வந்தொழுகும்வயற்சிக்கலுள்
விண்டிரைத்தமலராற்றிகழ்வெண்ணெய்ப்பெருமானடி
கண்டிரைத்துமனமேமதியாய்கதியாகவே. (௬)

முன்னுமாடம்மதின்மூன்றுடனேயெரியாய்விழத்
துன்னுவார்வெங்கணையொன்றுசெலுத்தியசோதியான்
செங்கெலாரும்வயற்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடி
உன்னிநீடமனமேநினையாய்வினையோயவே. (௭)

தெற்றலாகியதென்னிலங்கைக்கிறைவன்மலை
பற்றினான்முடிபத்தொடுதோள்கணெரியவே
சொற்றதேவனஞ்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடி
உற்றுநீநினையாய்வினையாயினவோயவே. (௮)

மாலினொடருமாமறைவல்லமுனிவனும்
கோலினார்குறுகச்சிவன்சேவடிகோலியும்
சீலந்தாமறியார்திகழ்சிக்கல்வெண்ணெய்ப்பிரான்
பாலும்பன்மலர்தூவப்பறையுநம்பாவமே. (௯)

பட்டைநற்றுவராடையினாரொடும்பாங்கிலாக்
கட்டமண்கழுக்கள்சொல்லினைக்கருதாதுநீர்
சிட்டன்சிக்கல்வெண்ணெய்ப்பெருமான்செழுமாமறைப்
பட்டசேவடியேபணிமின்பிணிபோகவே. (௧0)

கந்தமார்பொழிற்காழியுண்ஞானசம்பந்தனல்
செந்தண்பூம்பொழிற்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடிச்
சந்தமாச்சொன்னசெந்தமிழ்வல்லவர்வானிடை
வெந்தநீறணியும்பெருமானடிமேவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---



## திருப்புள்ளிருக்கும்வேளூர். பண் ஸ்ரீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கள்ளார்ந்தபூங்கொன்றைமதமத்தங்கதிர்மதிய
முள்ளார்ந்தசடைமுடியெம்பெருமானாருறையுமிடந்
தள்ளாயசம்பாதிசடாயென்பார்தாமிருவர்
புள்ளானார்க்கரையனிடம்புள்ளிருக்கும்வேளூரே. (௧)

தையலாளொருபாகஞ்சடைமேலாளவளோடு
மையந்தேர்ந்துழல்வானோரந்தணனாருறையுமிட
மெய்சொல்லாவிராவணனைமேலோடியீடழித்துப்
பொய்சொல்லாதுயிர்போனான்புள்ளிருக்கும்வேளூரே. (௨)

வாசநலஞ்செய்திமையோர்நாடோறுமலர்தூவ
வீசனெம்பெருமானாரினிதாகவுறையுமிடம்
யோசனைபோய்ப்பூக்கொணர்ந்தங்கொருநாளுமொழியாமே
பூசனைசெய்தினிதிருந்தான்புள்ளிருக்கும்வேளூரே. (௩)

மாகாயம்பெரியதொருமானுரித்தோலுடையாடை
யேகாயமிட்டுகந்தவெரியாடியுறையுமிட
மாகாயந்தேரோடுமிராவணனையமரின்கட்
போகாமேபொருதழித்தான்புள்ளிருக்கும்வேளூரே. (௪)

கீதத்தைமிகப்பாடுமடியார்கள்குடியாகப்
பாதத்தைத்தொழநின்றபரஞ்சோதிபயிலுமிடம்
வேதத்தின்மந்திரத்தால்வெண்மணலேசிவமாகப்
போதத்தால்வழிபட்டான்புள்ளிருக்கும்வேளூரே. (௫)

திறங்கொண்டவடியார்மேற்றீவினைநோய்வாராமே
யறங்கொண்டுசிவதன்மமுரைத்தபிரானமருமிட
மறங்கொண்டங்கிராவணன்றன்வலிகருதிவந்தானைப்
புறங்கண்டசடாயென்பான்புள்ளிருக்கும்வேளூரே. (௬)

அத்தியினீருரிமூடியழகாகவனலேந்திப்
பித்தரைப்போற்பலிதிரியும்பெருமானார்பேணுமிடம்
பத்தியினால்வழிபட்டுப்பலகாலந்தவஞ்செய்து
புத்தியொன்றவைத்திருந்தான்புள்ளிருக்கும்வேளூரே. (௭)

பண்ணொன்றவிசைபாடுமடியார்கள்குடியாக
மண்ணின்றிவிண்கொடுக்குமணிகண்டன்மருவுமிட
மெண்ணின்றிமுக்கோடிவாணாளதுடையானைப்
புண்ணொன்றப்பொருதழித்தான்புள்ளிருக்கும்வேளூரே. (௮)

வேதித்தார்புரமூன்றும்வெங்கணையால்வெந்தவியச்
சாதித்தவில்லாளிகண்ணாளன்சாருமிட
மாதித்தன்மகனென்னவகன்ஞாலத்தவரோடும்
போதித்தசடாயென்பான்புள்ளிருக்கும்வேளூரே. (௯)

கடுத்துவருங்கங்கைதனைக்கமழ்சடையொன்றாடாமே
தடுத்தவரெம்பெருமானார்தாமினிதாயுறையுமிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடைத்தவரு நிலங்கைக்கோன் மலங்கச்சென் றிராமற்காப்
புடைத்தவனைப்பொருதழித்தான் புள்ளிருக்கும்வேளூரே. (௧௦)

செடியாயவுடறீர்ப்பான் றீவினைக்கோர்மருந்தாவான்
பொடியாடிக்கடிமைசெய்த புள்ளிருக்கும்வேளூரைக்
கடியார்ந்தபொழிற்காழிக்கவுணியன் சம்பந்தன்சொன்
மடியாதுசொல்லவல்லார்க்கில்லையாமறுபிறப்பே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாலவாய் திருநீற்றுப்பதிகம். பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர்வாயுமைபங்கன் றிருவாலவாயான் றிருநீறே. (௧)

வேதத்திலுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந்தருவது நீறு புன்மைதவிர்ப்பது நீறு
ஓதத்தகுவது நீறு வுண்மையிலுள்ளது நீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்த திருவாலவாயான் றிருநீறே. (௨)

முத்திதருவது நீறு முனிவரணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர்புகழ்வது நீறு
பத்திதருவது நீறு பரவவினியது நீறு
சித்திதருவது நீறு திருவாலவாயான் றிருநீறே. (௩)

காணவினியது நீறு கவினைத்தருவது நீறு
பேணியணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பது நீறு
மாணந்தகைவது நீறு மதியைத்தருவது நீறு
சேணந்தருவது நீறு திருவாலவாயான் றிருநீறே. (௪)

பூசவினியது நீறு புண்ணியமாவது நீறு
பேசவினியது நீறு பெருந்தவத்தோர்களுக்கெல்லாம்
ஆசைகெடுப்பது நீறு வந்தமதாவது நீறு
தேசம்புகழ்வது நீறு திருவாலவாயான் றிருநீறே. (௫)

அருத்தமதாவது நீறு வவலமறுப்பது நீறு
வருத்தந்தணிப்பது நீறு வானமளிப்பது நீறு
பொருத்தமதாவது நீறு புண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்த திருவாலவாயான் றிருநீறே. (௬)

எயிலதுவட்டது நீறு விருமைக்குமுள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத்தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப்பொலிதருசூலத் தாலவாயான் றிருநீறே. (௭)

இராவணன்மேலது நீறு வெண்ணத்தகுவது நீறு
பராவணமாவது நீறு பாவமறுப்பது நீறு



தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங்குந்திருமேனி யாலவாயான் றிருநீறே. (௮)

மாலொடயனறியாத வண்ணமுமுள்ளது நீறு
மேலுறைதேவர்கடங்கண்மெய்யது வெண்பொடிநீறு
ஏலவுடம்பிடர்தீர்க்கு மின்பந்தருவது நீறு
ஆலமதுண்டமிடற்றெம் மாலவாயான் றிருநீறே. (௯)

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பது நீறு கருதவினியது நீறு
எண்டிசைப்பட்டபொருளா ரேத்துந்தகையது நீறு
அண்டத்தவர்பணிந்தேத்து மாலவாயான் றிருநீறே. (௧௦)

ஆற்றலடல்விடையேறு மாலவாயான் றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவு பூசுரன்ஞானசம்பந்தன்
தேற்றித்தென்னனுடலுற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கடவூரைக்காரோணம் பண்-செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

கூனற்றிங்கட்குறுங்கண்ணிகான் றநெடுவெண்ணிலா
வனற்பூத்தம்மராங்கோதையோடும்விராவுஞ்சடை
வானநாடனமரர்பெருமாற்கிடமாவது
கானல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. (௧)

விலங்கலொன் றுசிலையாமதின்மூன் றுடன்வீட்டினான்
இலங்குகண்டத்தெழிலாமைபூண்டாற்கிடமாவது
மலங்கியோங்கிவருவெண்டிரைமல்கியமால்கடல்
கலங்கலோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (௨)

வெறிகொளாருங்கடற்கைதைநெய்தல்விரிபூம்பொழில்
முறிகொண்ஞாழன்முடப்புன்னைமுல்லைமுகைவெண்மலர்
நறைகொள்கொன்றைநயந்தோங்குநாதற்கிடமாவது
கறைகளோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (௩)

வண்டுபாடல்வளர்கொன்றைமாலைமதியோடுடன்
கொண்டகோலங்குளிர்கங்கைதங்குங்குருள்குஞ்சியுள்
உண்டுபோலும்மெனவைத்துகந்தவ்வொருவர்க்கிடம்
கண்டல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. (௪)

வார்கொள்கோலம்முலைமங்கைநல்லார்மகிழ்ந்தேத்தவே
நீர்கொள்கோலச்சடைநெடுவெண்டிங்கணிகழ்வெய்தவே
போர்கொள்சூலப்படைபுல்குகையார்க்கிடமாவது
கார்கொளோதம்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடையதேறிவ்விடவரவசைத்தவ்விகிர்தரவர்
படைகொள்பூதம்பலபாடவாடும்பரமாயவர்
உடைகொள்வேங்கையுரிதோலுடையார்க்கிடமாவது
கடைகொள்செல்வங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (சு)

பொய்துவாழ்வார்மனம்பாழ்படுக்கும்மலர்ப்பூசனை
செய்துவாழ்வார்சிவன்சேவடிக்கேசெலுஞ்சிந்தையார்
எய்தவாழ்வாரெழினக்கரெம்மார்க்கிடமாவது
கைதல்வேலிக்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (எ)

பத்திரட்டிதிரடோளுடையான்முடிபத்திற
வத்திரட்டிவிரலாலடர்த்தார்க்கிடமாவது
வைத்திரட்டிவ்வருவெண்டிரைமல்கியமாகடல்
கைத்திரட்டுங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (அ)

நல்லபோதிலுறைவானுமாலுந்நடுக்கத்தினால்
அல்லராவரெனநின்றபெம்மாற்கிடமாவது
மல்லலோங்கிவருவெண்டிரைமல்கியமாகடல்
கல்லலோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே (கூ)

உயர்ந்தபோதினுருவத்துடைவிட்டுழல்வார்களும்
பெயர்ந்தமண்டையிடுபிண்டமாவுண்டுழல்வார்களும்
நயந்துகாணாவகைநின்றநாதர்க்கிடமாவது
கயங்களோதங்கழிசூழகடனாகைக்காரோணமே. (கo)

மல்குதண்பூம்புனல்வாய்ந்தொழுகும்வயற்காழியான்
நல்லகேள்வித்தமிழ்ஞானசம்பந்தனல்லார்கண்முன்
வல்லவாறேபுனைந்தேத்துங்காரோணத்துவண்டமிழ்
சொல்லுவார்க்குமிவைகேட்பவர்க்குந்துயரில்லையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## நமச்சிவாயத்திருப்பதிகம். பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

காதலாகிக்கசிந்துகண்ணீர்மல்கி, யோதுவார்தமைநன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினுமெய்ப்பொருளாவது, நாதனாமநமச்சிவாயவே. (க)

நம்புவார்நமர்நாவினவிற்றினால், வம்புநாண்மலர்வார்மதுவொப்பது
செம்பொனார்திலகம்முலகுக்கெலா, நம்பனாமநமச்சிவாயவே. (உ)

நெக்குளார்வமிகப்பெருகிநினைக், தக்குமாலைகொடங்கையிலெண்ணுவார்
தக்கவானவராய்த்தகுவிப்பது, நக்கனாமநமச்சிவாயவே. (ங)

இயமன்றூதருமஞ்சுவரின்சொலா, னயம்வந்தோதவல்லார்தமைநண்ணினு
னியமந்தானினைவார்க்கினியானெற்றி, நயனனாமநமச்சிவாயவே. (ச)

கொல்வாரேனுங்குணம்பலநன்மைக, ளில்லாரேனுமியம்புவராயிடி
னெல்லாத்தீங்கையுநீங்குவரென்பரா, னல்லார்நாமநமச்சிவாயவே. (ரு)



மந்தரம்மன்னபாவங்கண்மேவிய, பந்தனையவர்தாமும்பகர்வரேற்
சிந்தும்வல்வினைசெல்வமுமல்குமா, னந்திநாமநமச்சிவாயவே. (சு)

நரகமேழ்புகநாடினராயினு, முரைசெய்வாயினராயினுருத்திரர்
விரவியேபுகுவித்திடுமென்பரால், வரதனாமநமச்சிவாயவே. (எ)

இலங்கைமன்னனெடுத்தவடுக்கன்மேற், றளங்கொல்கால்விரல்சங்கரனூன்ற
லு, மலங்கிவாய்மொழிசெய்தவனுய்வகை, நலங்கொணாமநமச்சிவாயவே. ()

போதன்போதனகண்ணனுமண்ணறன், பாதந்தான்முடிநேடியபண்பரா
யாதுங்காண்பரிதாகியலந்தவ, ரோதுநாமநமச்சிவாயவே. (கூ)

கஞ்சிமண்டையர்கையினுண்கையர்கள், வெஞ்சொன்மிண்டர்விரவிலரென்ப
ரால்,விஞ்சையண்டர்கள்வேண்டவமுதுசெய், நஞ்சுண்கண்டனமச்சிவாயவே.

நந்திநாமநமச்சிவாயவெனுஞ், சந்தையாற்றமிழ்ஞானசம்பந்தன்சொற்
சிந்தையான்மகிழ்ந்தேத்தவல்லாரெல்லாம், பந்தபாசமறுக்கவல்லார்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாலவாய். திருவிராகம் பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழல்
பாடலாலவாயிலாய்பரவநின்றபண்பனே
காடலாலவாயிலாய்கபாலிநீள்கடிம்மதில்
கூடலாலவாயிலாய்குலாயதென்னகொள்கையே. (க)

பட்டிசைந்தவல்குலாள்பாவையாளோர்பாகமா
ஒட்டிசைந்ததன்றியும்முச்சியாளொருத்தியாக்
கொட்டிசைந்தவாடலாய்கூடலாலவாயிலாய்
எட்டிசைந்தமூர்த்தியாயிருந்தவாறிதென்னையே. (உ)

குற்றநீகுணங்கணீகூடலாலவாயிலாய்
சுற்றநீபிரானுநீதொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்துநீயருத்தமின்பமென்றிவை
முற்றநீபுகழ்ந்துமுன்னுரைப்பதென்முகம்மனே. (ங)

முதிருநீர்ச்சடைமுடிமுதல்வனீமுழங்கழல்
அதிரவீசியாடுவாயழகனீபுயங்கனீ
மதுரனீமணாளனீமதுரையாலவாயிலாய்
சதுரனீசதுர்முகன்கபாலமேந்துசம்புவே. (ச)

ஞாலமாயநீண்மதிற்கூடலாலவாயிலாய்
பாலனாயதொண்டுசெய்துபண்டுமின்றுமுன்னையே
நீலமாயகண்டனேநின்னையன்றிநித்தலும்
சீலமாயசிந்தையிற்றேர்வதில்லைதேவரே. (ரு)

பொன்றயங்கிலங்கொளிந்நலங்குளிர்ந்தபுன்சடை
பின்றயங்கவாடுவாய்பிஞ்ஞகாபிறப்பிலீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்றையம்முடியினாய்கூடலாலவாயிலாய்
நின்றயங்கியாடலேநினைப்பதென்நியமமே. (௬)

ஆதியந்தமாயினாயாலவாயிலண்ணலே
சோதியந்தமாயினாய்சோதியுள்ளொர்சோதியாய்
ஓதம்வந்தவாய்மையாற்கிளர்தருக்கினார்க்கலால்
ஓதிவந்தவாய்மையாலுணர்ந்துரைக்கலாகுமே. (௭)

கறையிலங்குகண்டனேகருத்திலாக்கருங்கடற்
றுறையிலங்கைமன்னனைத்தோளடரவூன்றினாய்
மறையிலங்குபாடலாய்மதுரையாலவாயிலாய்
நிறையிலங்குநெஞ்சினானினைப்பதேநியமமே. (௮)

தாவணவ்விடையினாய்தலைமையாகநாடொறும்
கோவணவ்வுடையினாய்கூடலாலவாயிலாய்
தீவணம்மலர்மிசைத்திசைமுகன்னுமாலுநின்
றூவணம்மளக்கிலார்துளக்கமெய்துவார்களே. (௯)

தேற்றமில்வினைத்தொழிற்றேரருஞ்சமணரும்
போற்றிசைத்துநின்கழற்புகழ்ந்துபுண்ணியங்கொளார்
கூற்றுதைத்ததாளினாய்கூடலாலவாயிலாய்
நாற்றிசைக்குமூர்த்தியாகிநின்றதென்னநன்மையே. (௧௦)

போயநீர்வளங்கொளும்பொருபுனற்புகலியான்
பாயகேள்விஞானசம்பந்தனல்லபண்பினால்
ஆயசொல்லின்மாலைகொண்டாலவாயிலண்ணலைத்
தீயதீரவெண்ணுவார்கள்சிந்தையாவர்தேவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்பரசுரம். பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்கவந்தணர்வானவரானினம், வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனாமமே, சூழ்கவையகமுந்துயர்தீர்கவே. (௧)

அரியகாட்சியராய்த்தமதங்கைசே, ரெரியரேறுகந்தேறுவர்கண்டமுங்
கரியர்காடுறைவாழ்க்கையராயினும், பெரியராரறிவாரவர்பெற்றியே. (௨)

வெந்தசாம்பல்விரையெனப்பூசியே, தந்தையாரொடுதாயிலர்தம்மையே
சிந்தியாவெழுவார்வினைதீர்ப்பரா, லெந்தையாரவரெவ்வகையார்கொலோ. ()

ஆட்பாலவர்க்கருளும்வண்ணமுமாதிமாண்பும், கேட்பான்புகிலளவில்லை
கிளக்கவேண்டா, கோட்பாலனவும்வினையுங்குறுகாமையெந்தை, தாட்பால்வ
ணங்கித்தலைநின்றிவைகேட்கதக்கார். (௪)

எதுக்களாலுமெடுத்தமொழியாலுமிக்குச், சோதிக்கவேண்டாசுடர்விட்டு
ளனெங்கள்சோதி, மாதுக்கநீங்கலுறுவீர்மனம்பற்றிவாழ்மின், சாதுக்கண்மிக்
கீறிறையேவந்துசார்மின்களே. (௫)



ஆடும்மெனவும்மருங்கூற்றமுதைத்துவேதம், பாடும்மெனவும்புகழல்
லதுபாவநீங்கக், கேடும்பிறப்பும்மறுக்கும்மெனக்கேட்டிராகில், நாடுந்திறத்தார்
க்கருளல்லதுநாட்டலாமே. (௬)

கடிசேர்ந்தபோதுமலரானகைக்கொண்டுநல்ல, படிசேர்ந்தபால்கொண்ட
ங்காட்டிடத்தாதைபண்டு, முடிசேர்ந்தகாலையறவெட்டிடமுக்கண்மூர்த்தி, யடி
சேர்ந்தவண்ணம்மறிவார்சொலக்கேட்டுமன்றே. (௭)

வேதம்முதல்வன்முதலாகவிளங்கிவையம், மேதப்படாமேயுலகத்தவ
ரேத்தல்செய்யப், பூதமுதல்வன்முதலேமுதலாப்பொலிந்த, சூதன்னொலிமா
லையென்றேகலிக்கோவைசொல்லே. (௮)

பாராழிவட்டம்பகையானலிந்தாட்டவாடிப், பேராழியானதிடர்கண்டரு
ள்செய்தல்பேணி, நீராழிவிட்டேறிநெஞ்சிடங்கொண்டவர்க்குப், போராழியீ
ந்தபுகழும்புகழுற்றதன்றே. (௯)

மாலாயவனும்மறைவல்லநான்முகனும், பாலாயதேவர்பகரில்லமுதூட்
டல்பேணிக், காலாயமுந்நீர்கடைந்தார்க்கரிதாயெழுந்த, வாலாலமுண்டங்கம
ரர்க்கருள்செய்ததாமே. (௧௦)

அற்றன்றியந்தண்மதுரைத்தொகையாக்கினானுந், தெற்றென்றுதெய்வ
ந்தெளியார்கரைக்கோலைதெண்ணீர்ப், பற்றின்றிப்பாங்கெதிர்வினவும்பண்பு
நோக்கிற், பெற்றென்றுயர்த்தபெருமான்பெருமானுமன்றே. (௧௧)

நல்லார்கள்சேர்புகலிஞானசம்பந்தனல்ல, வெல்லார்களும்பரவுமீசனை
யேத்துபாடல், பல்லார்களும்மதிக்கப்பாசுரஞ்சொன்னபத்தும், வல்லார்கள்
வானோருலகாளவும்வல்லரன்றே. (௧௨)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கோணமாமலை. பண்-புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

நிரைகழலரவஞ்சிலம்பொலியலம்புநிமலர்நீறணிதிருமேனி
வரைகெழுமகளோர்பாகமாப்புணர்ந்தவடிவினர்கொடியணிவிடையர்
கரைகெழுசந்துங்காரகிற்பிளவுமளப்பருங்கனமணிவரன்றிக்
குரைகடலோதந்நித்திலங்கொழிக்குங்கோணமாமலையமர்ந்தாரே. (௧)

கடிதெனவந்தகரிதனையுரித்தவ்வுரிமேனிமேற்போர்ப்பர்
பிடியனநடையாள்பெய்வளைமடந்தைபிறைநுதலவளொடுமுடனாய்க்
கொடிதெனக்கதறுங்குரைகடல்சூழ்ந்துகொள்ளமுனித்திலஞ்சுமந்து
குடிதனைநெருக்கிப்பெருக்கமாய்த்தோன்றுங்கோணமாமலையமர்ந்தாரே. (௨)

பனித்திளந்திங்கட்பைந்தலைநாகம்படர்சடைமுடியிடைவைத்தார்
கனித்திலந்துவர்வாய்க்காரிகைபாகமாகமுன்கலந்தவர்மதின்மேற்
றனித்தபேருருவவிழித்தழனாகந்தாங்கியமேருவெஞ்சிலையாக்
குனித்ததோர்வில்லார்குரைகடல்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரே. (௩)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழித்திளங்கங்கைசடைமுடிவைத்துப்பாங்குடைமதனனைப்பொடியா
விழித்தவன்றேவிவேண்டமுன்கொடுத்தவிமலனார்கமலமார்பாதர்
தெழித்துமுன்னரற்றுஞ்செழுங்கடற்றரவஞ்செம்பொனுமிப்பியுஞ்சுமந்து
கொழித்துவன்றிரைகள்கரையிடைச்சேர்க்குங்கோணமாமலையமர்ந்தாரே. (௪)

தாயினுநல்லதலைவரென்றடியார்தம்மடிபோற்றிசைப்பார்கள்
வாயினுமனத்துமருவிநின்றகலாமாண்பினர்காண்பலவேடர்
நோயிலும்பிணியுந்தொழிலர்பானீங்கிநுழைதருநூலினர்ஞாலங்
கோயிலுஞ்சுனையுங்கடலுடன்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரே. (௫)

பரிந்துநன்மனத்தால்வழிபடுமாணிதன்னுயிர்மேல்வருங்கூற்றைத்
திரிந்திடாவண்ணமுதைத்தவற்கருளுஞ்செம்மையார்நம்மையாளுடையார்
விரிந்துயர்மௌவன்மாதவிபுன்னைவேங்கைவண்செருந்திசெண்பகத்தின்
குருந்தொடுமுல்லைகொடிவிடும்பொழில்சூழ்கோணமாமலையமர்ந்தாரே. (௬)

எடுத்தவன்றருக்கையிழித்தவர்விரலாலேத்திடவாத்தமாம்பேறு
தொடுத்தவர்செல்வந்தோன்றியபிறப்புமிறப்பறியாதவர்வேள்வி
தடுத்தவர்வனப்பால்வைத்ததோர்கருணைதன்னருட்பெருமையும்வாழ்வுங்
கொடுத்தவர்விரும்பும்பெரும்புகழாளர்கோணமாமலையமர்ந்தாரே. (௭)

அருவராதொருகைவெண்டலையேந்தியகந்தொறும்பலியுடன்புக்க
பெருவராயுறையுநீர்மையர்சீர்மைப்பெருங்கடல்வண்ணனும்பிரம
னிருவருமறியாவண்ணமொள்ளெரியாயுயர்ந்தவர்பெயர்ந்தநன்மாற்குங்
குருவராய்நின்றார்குரைகழல்வணங்கக்கோணமாமலையமர்ந்தாரே. (௮)

நின்றுணுஞ்சமணுமிருந்துணுந்தேருநெறியலர்தன்புறங்கூற
வென்றுநஞ்சுண்ணும்பரிசினரொருபான்மெல்லியலொடுமுடனாகித்
துன்றுமொண்பல்லமல்லலுஞ்சூழ்ந்துதாழ்ந்துறுதிரைபலமோதிக்
குன்றுமொண்கானல்வாசம்வந்துலவுங்கோணமாமலையமர்ந்தாரே. (௯)

குற்றமிலாதார்குரைகடல்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரைக்
கற்றுணர்கேள்விக்காழியர்பெருமான்கருத்துடைஞானசம்பந்த
னுற்றசெந்தமிழார்மாலையீரைந்துமுரைப்பவர்கேட்பவருயர்ந்தோர்
சுற்றமுமாகித்தொல்வினையடையார்தோன்றுவர்வானிடைப்பொலிந்தே. (௰)

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

---



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிச்செய்த
# தேவாரப்பதிகங்கள்.

### திருவதிகைவீரட்டானம். பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயினவாறுவிலக்ககிலீர்கொடுமைபலசெய்தனநானறியே
னேற்றாயடிக்கேயிரவும்பகலும்பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியேகுடரோடுதுடக்கிமுடக்கியிட
ஆற்றேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௧)

நெஞ்சமுமக்கேயிடமாகவைத்தேனினையாதொருபோதுமிருந்தறியேன்
வஞ்சம்மிதுவொப்பதுகண்டறியேன்வயிற்றோடுதுடக்கிமுடக்கியிட
நஞ்சாகிவந்தென்னைநலிவதனைநணுகாமற்றுரந்துகரந்துமிடீர்
அஞ்சேலுமென்னீரதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௨)

பணிந்தாரனபாவங்கள்பாற்றவல்லீர்படுவெண்டலையிற்பலிகொண்டுழல்வீர்
துணிந்தேயுமக்காட்செய்துவாழலுற்றாற்சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடிக்கொண்டுமெய்பூசவல்லீர்பெற்றமேற்றுகந்தீர்சுற்றும்வெண்
டலைகொண், டணிந்தீரடிகேளதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே.

முன்னம்மடியேனறியாமையினான்முனிந்தென்னைநலிந்துமுடக்கியிடப்
பின்னையடியேனுமக்காளும்பட்டேன்சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர்
தன்னையடைந்தார்வினைதீர்ப்பதன்றோதலையாயவர்தங்கடனாவதுதான்
அன்னநடையாரதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௪)

காத்தாள்பவர்காவலிகழ்ந்தமையாற்கரைநின்றவர்கண்டுகொளென்றுசொலி
நீத்தாயகயம்புகநூக்கியிடநிலைக்கொள்ளும்வழித்துறையொன்றறியேன்
வார்த்தையிதுவொப்பதுகேட்டறியேன்வயிற்றோடுதுடக்கிமுடக்கியிட
வார்த்தார்புனலாரதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௫)

சலம்பூவொடுதூபமறந்தறியேன்றமிழோடிசைபாடன்மறந்தறியேன்
நலந்தீங்கினுமுன்னைமறந்தறியேனுன்னாமமென்னாவின்மறந்தறியேன்
உலந்தார்தலையிற்பலிகொண்டுழல்வாயுடலுள்ளுறுசூலைதவிர்த்தருளாய்
அலந்தேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௬)

உயர்ந்தேன்மனைவாழ்க்கையுமொண்பொருளுமொருவர்தலைகாவலிலாமையினா
வயந்தேயுமக்காட்செய்துவாழலுற்றால்வலிக்கின்றதுசூலைதவிர்த்தருளீர் [ல்
பயந்தேயென்வயிற்றினகம்படியேபறித்துப்புரட்டியறுத்தீர்த்திடநான்
அயர்ந்தேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௭)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலித்தேன்மனைவாழ்க்கைமகிழ்ந்தடியேன்வஞ்சம்மனமொன்றுமிலாமை
யினற், சலித்தாலொருவர்துணையாருமிலைச்சங்கவெண்குழைக்காதுடையெ
ம்பெருமான், கலித்தேயென்வயிற்றினகம்படியேகலக்கிமலக்கிட்டுக்கவர்ந்து
தின்ன, அலுத்தேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. ( )

பொன்போலமிளிர்வதொர்மேனியினீர்புரிபுன்சடையீர்மெலியும்பிறையீர்
துன்பேகவலைபிணியென்றிவற்றைநணுகாமற்றுரந்துகரந்துமிடீர்
என்போலிகளும்மையினித்தெளியாரடியார்படுவதிதுவேயாகில்
அன்பேயமையும்மதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௯)

போர்த்தாயங்கோரானையினீருரிதோல்புறங்காடரங்காநடமாடவல்லாய்
ஆர்த்தானரக்கன்றனைமால்வரைக்கீழடர்த்திட்டருள்செய்தவதுகருதாய்
வேர்த்தும்புரண்டும்விழுந்துமெழுந்தாலென்வேதனையானவிலக்கியிடாய்
ஆர்த்தார்புனல்சூழதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவையாறு. பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மாதர்பிறைக்கண்ணியானைமலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுகளிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௧)

போழிளங்கண்ணியினானைப்பூந்துகிலாளொடும்பாடி
வாழியம்போற்றியென்றேத்திவட்டமிட்டாடாவருவேன்
ஆழிவலவனின்றேத்துமையாறடைகின்றபோது
கோழிபெடையொடுகூடிக்குளிர்ந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௨)

எரிப்பிறைக்கண்ணியினானையேந்திழையாளொடும்பாடி
முரித்தவிலயங்களிட்டுமுகமலர்ந்தாடாவருவேன்
அரித்தொழுகும்வெள்ளருவியையாறடைகின்றபோது
வரிக்குயில்பேடையொடாடிவைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௩)

பிறையிளங்கண்ணியினானைப்பெய்வளையாளொடும்பாடித்
துறையிளம்பன்மலர்தூவித்தோளைக்குளிரத்தொழுவேன்
அறையிளம்பூங்குயிலாலுமையாறடைகின்றபோது
சிறையிளம்பேடையொடாடிச்சேவல்வருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௪)

ஏடுமதிக்கண்ணியானையேந்திழையாளொடும்பாடிக்
காடொடுநாடுமலையுங்கைதொழுதாடாவருவேன்
ஆடலமர்ந்துறைகின்றவையாறடைகின்றபோது
பேடைமயிலொடுகூடிப்பிணைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௫)



தண்மதிக்கண்ணியினானைத்தையனல்லாளொடும்பாடி
யுண்மெலிசிந்தையனாகியுணராவுருகாவருவேன்
அண்ணலமர்ந்துறைகின்றவையாறடைகின்றபோது
வண்ணப்பகன்றிலொடாடிவைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௬)

கடிமதிக்கண்ணியினானைக்காரிகையாளொடும்பாடி
வடிவொடுவண்ணமிரண்டும்வாய்வேண்டுவசொல்லிவாழ்வேன்
அடியிணையார்க்குங்கழலானையாறடைகின்றபோது
இடிகுரலன்னதொரேனமிசைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௭)

விரும்புமதிக்கண்ணியானைமெல்லியலாளொடும்பாடிப்
பெரும்புலர்காலையெழுந்துபெருமலர்கொய்யாவருவேன்
அருங்கலம்பொன்மணியுந்துமையாறடைகின்றபோது
கருங்கலைபேடையொடாடிக்கலந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௮)

முற்பிறைக்கண்ணியினானைமொய்குழலாளொடும்பாடிப்
பற்றிக்கயிறறுக்கில்லேன்பாடியுமாடாவருவேன்
அற்றருள்பெற்றுநின்றாரோடையாறடைகின்றபோது
நற்றுணைப்பேடையொடாடிநாரைவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௯)

திங்கண்மதிக்கண்ணியானைத்தேமொழியாளொடும்பாடி
எங்கருணல்குங்கொலெந்தையெனக்கினியென்றுவருவேன்
அங்கிளமங்கையராடுமையாறடைகின்றபோது
பைங்கிளிபேடையொடாடிப்பறந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௧௦)

வளர்மதிக்கண்ணியினானைவார்குழலாளொடும்பாடிக்
களவுபடாததொர்காலங்காண்பான்கடைக்கணிக்கின்றேன்
அளவுபடாததொரன்போடையாறடைகின்றபோது
இளமணநாகுதழுவியேறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாரூர். பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பாடிளம்பூதத்தினானும்பவளச்செவ்வாய்வண்ணத்தானுங்
கூடிளமென்முலையாளைக்கூடியகோலத்தினானும்
ஓடிளவெண்பிறையானுமொளிதிகழ்சூலத்தினானு
மாடிளம்பாம்பசைத்தானுமாரூரமர்ந்தவம்மானே. (௧)

கரியைக்குதிரைசெய்வானுநரகரைத்தேவுசெய்வானும்
விரதங்கொண்டாடவல்லானும்விச்சின்றிநாறுசெய்வானும்
முரசதிர்ந்தானைமுன்னோடமுன்பணிந்தன்பர்களேத்த
அரவரைச்சார்த்திநின்றானுமாரூரமர்ந்தவம்மானே. (௨)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறுமெய்பூசவல்லானுநினைப்பவர்நெஞ்சத்துளானு
மேறுகந்தேறவல்லானுமெரிபுரைமேனியினானு
நாறுகரந்தையினானுநான்மறைக்கண்டத்தினானும்
ஆறுசடைக்கரந்தானுமாரூரமர்ந்தவம்மானே. (௩)

கொம்புநல்வேனிலவனைக்குழையமுறுவல்செய்தானுஞ்
செம்புனல்கொண்டையின்மூன்றுந்தீயெழக்கண்சிவந்தானும்
வம்புநற்கொன்றையினானும்வாட்கண்ணிவாட்டமதெய்த
அம்பரவீருரியானுமாரூரமர்ந்தவம்மானே. (௪)

ஊழியளக்கவல்லானுமுகப்பவருச்சியுள்ளானுந்
தாழிளஞ்செஞ்சடையானுந்தண்ணமர்திண்கொடியானுந்
தோழியர்தூதிடையாடத்தொழுதடியார்கள்வணங்க
ஆழிவளைக்கையினானுமாரூரமர்ந்தவம்மானே. (௫)

ஊர்திரைவேலையுள்ளானுமுலகிறந்தொண்பொருளானுஞ்
சீர்தருபாடலுள்ளானுஞ்செங்கண்விடைக்கொடியானும்
வார்தருபூங்குழலாளைமருவியுடன்வைத்தவனு
மாதிரைநாளுகந்தானுமாரூரமர்ந்தவம்மானே. (௬)

தொழற்கங்கைதுன்னிநின்றார்க்குத்தோன்றியருளவல்லானுங்
கழற்கங்கைடன்மலர்கொண்டுகாதல்கனற்றிநின்றானுங்
குழற்கங்கையாளையுள்வைத்துக்கோலச்சடைக்கரந்தானு
மழற்கங்கைபோதவல்லானுமாரூரமர்ந்தவம்மானே. (௭)

ஆயிரந்தாமரைபோலுமாயிரஞ்சேவடியானு
மாயிரம்பொன்வரைபோலுமாயிரந்தோளுடையானு
மாயிரஞாயிறுபோலுமாயிரநீண்முடியானு
மாயிரம்பேருகந்தானுமாரூரமர்ந்தவம்மானே. (௮)

வீடரங்காநிறுப்பானும்விசும்பினைவேதிதொடர
வோடரங்காகவைத்தானுமோங்கியோரூழியுள்ளானுங்
காடரங்காமகிழ்ந்தானுங்காரிகையார்தண்மனத்துள்
ஆடரங்கத்திடையானுமாரூரமர்ந்தவம்மானே. (௯)

பையஞ்சுடர்விடுநாகப்பள்ளிகொள்வானுள்ளத்தானுங்
கையஞ்சுநான்குடையானைக்கால்விரலாலடர்த்தானும்
பொய்யஞ்சிவாய்மைகள்பேசிப்புகழ்புரிந்தார்க்க நன்செய்யு
மையன்சிணப்புறத்தானுமாரூரமர்ந்தவம்மானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவங்கமாலை. பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

தலையேநீவணங்காய், தலை-மாலைதலைக்கணிந்து
தலையாலேபலிதேருந்தலைவனைத், தலையேநீவணங்காய். (௧)

கண்காள்காண்மின்களோ, கட-னஞ்சுண்டகண்டன்றன்னை
வெண்டோள்வீசிநின்றாடும்பிரான்றன்னைக், கண்காள்காண்மின்களோ. (௨)



செவிகாள்கேண்மின்களோ, சிவ-னெம்மிறைசெம்பவளம்
எரிபோல்மேனிப்பிரான்றிறமெப்போதுஞ், செவிகாள்கேண்மின்களோ. (௩)

மூக்கேநீமுரலாய், முது-காடுறைமுக்கணனை
வாக்கேநோக்கியமங்கைமணாளனை, மூக்கேநீமுரலாய். (௪)

வாயேவாழ்த்துகண்டாய், மத-யானையுரிபோர்த்துப்
பேய்வாழ்காட்டகத்தாடும்பிரான்றன்னை, வாயேவாழ்த்துகண்டாய். (௫)

நெஞ்சேநீநினையாய், நிமிர்-புன்சடைநின்மலனை
மஞ்சாடுமலைமங்கைமணாளனை, நெஞ்சேநீநினையாய். (௬)

கைகாள்கூப்பித்தொழீர், கடி-மாமலர்தூவிநின்று
பைவாய்ப்பாம்பரையார்த்தபரமனைக், கைகாள்கூப்பித்தொழீர். (௭)

ஆக்கையாற்பயனென், அரன்கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப்போற்றியென்னாதவிவ், வாக்கையாற்பயனென். (௮)

கால்களாற்பயனென், கறைக்-கண்டனுறைகோயில்
கோலக்கோபுரக்கோகரணஞ்சூழாக், கால்களாற்பயனென். (௯)

உற்றாராருளரோ, உயிர்-கொண்டுபோம்பொழுது
குற்றாலத்துறைகூத்தனல்லானமக், குற்றாராருளரோ. (௧௦)

இறுமாந்திருப்பன்கொலோ, வீசன்பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன்சேவடிக்கீழ்ச்சென்றங், கிறுமாந்திருப்பன்கொலோ. (௧௧)

தேடிக்கண்டுகொண்டேன், திரு-மாலொடுநான்முகனுந்
தேடித்தேடொணாத்தேவனையென்னுளே, தேடிக்கண்டுகொண்டேன். (௧௨)

திருச்சிற்றம்பலம்.

---

## நமச்சிவாயத்திருப்பதிகம். பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணைவேதியன்சோதிவானவன், பொற்றுணைத்திருந்தடிபொரு
ந்தக்கைதொழக்,கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினு, நற்றுணையாவதுநமச்
சிவாயவே. (௧)

பூவினுக்கருங்கலம்பொங்குதாமரை, யாவினுக்கருங்கலமரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங்கோட்டமில்லது, நாவினுக்கருங்கலநமச்சிவாயவே. (௨)

விண்ணுறவடுக்கியவிறகின்வெவ்வழ,லுண்ணியபுகிலவையொன்றுமில்லையா
ம்,பண்ணியவுலகினிற்பயின்றபாவத்தை,நண்ணிநின்றறுப்பதுநமச்சிவாயவே

இடுக்கண்பட்டிருக்கினுமிரந்தியாரையும், விடுக்கிற்பிரானென்றுவின
வுவோமல்லோ, மடுக்கற்கீழ்க்கிடக்கினுமருளினுமுற்ற, நடுக்கத்தைக்கெடுப்
பதுநமச்சிவாயவே. (௪)

வெந்தநீறருங்கலம்விரதிகட்கெலா, மந்தணர்க்கருங்கலமருமறையாறங்கந்
திங்களுக்கருங்கலந்திகழுநீண்முடி, நங்களுக்கருங்கலநமச்சிவாயவே. (௫)

சலமிலன்சங்கரன்சார்ந்தவர்க்கல்லா, னலமிலனுடொறுநல்குவானலன்
குலமிலராகினுங்குலத்திற்கேற்பதோர், நலமிகக்கொடுப்பதுநமச்சிவாயமே. ()

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடினுருவுகினில்விழுமியதொண்டர், கூடினாரங்னெறிகூடச்சென்றது
மோடினேனோடிச்சென்றுருவங்காண்டலு, நாடினேனாடிற்றுநமச்சிவாயவே.

இல்லகவிளக்கதுவிருள்கெடுப்பது, சொல்லகவிளக்கதுசோதியுள்ளது
பல்லகவிளக்கதுபலருங்காண்பது, நல்லகவிளக்கதுநமச்சிவாயவே. (அ)

முன்னெறியாகியமுதல்வன்முக்கணன், றன்னெறியேசரணாதறிண்ணமே
யந்நெறியேசென்றங்கடைந்தவர்க்கெலா, நன்னெறியாவதுநமச்சிவாயவே.()

மாப்பிணைதழுவியமாதொர்பாகத்தன்,பூப்பிணைதிருந்தடிபொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவியநமச்சிவாயப்பத், தேத்தவல்லார்தமக்கிடுக்கணில்லையே. ()

திருச்சிற்றம்பலம்.

---

## திருமறைக்காடு. திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ, மண்ணினார்வலஞ்செய்மறைக்காடரோ, கண்ணினாலுமைக்காணக்கதவினைத், திண்ணமாகத்திறந்தருள்செய்ம்மினே. (க)

ஈண்டுசெஞ்சடையாகத்துளீசரோ, மூண்டகார்முகிலின்முறிக்கண்டரோ
வாண்டுகொண்டநீரேயருள்செய்திடும், நீண்டமாக்கதவின்வலிநீக்குமே. (உ)

அட்டமூர்த்தியதாகியவப்பரோ, துட்டர்வான்புரஞ்சுட்டசுவண்டரோ
பட்டங்கட்டியசென்னிப்பரமரோ, சட்டவிக்கதவந்திறப்பிம்மினே. (ங)

அரியநான்மறையோதியநாவரோ, பெரியவான்புரஞ்சுட்டசுவண்டரோ
விரிகொள்கோவணவாடைவிருத்தரோ, பெரியவான்கதவம்பிரிவிக்கவே.(ச)

மலையினிடிருக்கும்மறைக்காடரோ, கலைகள்வந்திறைஞ்சுங்கழலேத்தரோ
விலையில்மாமணிவண்ணவுருவரோ, தொலைவிலாக்கதவந்துணைநீக்குமே.(ரு)

பூக்குந்தாழைபுறணியருகெலா, மாக்குந்தண்பொழில்சூழ்மறைக்காடரோ
ஆர்க்குங்காண்பரியீரடிகேளுமை, நோக்கிக்காணக்கதவைத்திறவுமே. (சு)

வெந்தவெண்பொடிபூசும்விகிர்தரோ, வந்தமில்லியணிமறைக்காடரோ
எந்தையீயடியார்வந்திறைஞ்சிட, இந்தமாக்கதவம்பிணிநீக்குமே. (எ)

ஆறுசூடுமணிமறைக்காடரோ, கூறுமாதுமைக்கீந்தகுழகரோ
ஏறதேறியவெம்பெருமானிந்த, மாறிலாக்கதவம்வலிநீக்குமே. (அ)

சுண்ணவெண்பொடிபூசுஞ்சுவண்டரோ, பண்ணியேறுகந்தேறும்பரமரோ
வண்ணலாதியணிமறைக்காடரோ, திண்ணமாக்கதவந்திறப்பிம்மினே. (கூ)

அரக்கனைவிரலாலடர்த்திட்டநீ, ரிரக்கமொன்றிலீரெம்பெருமானிரே
சுரக்கும்புன்னைகள்சூழ்மறைக்காடரோ, சரக்கவிக்கதவந்திறப்பிம்மினே.(க0)

திருச்சிற்றம்பலம்.

---

## கோயில். பெரியதிருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அரியானையந்தணர்தஞ்சிந்தையானை யருமறையினகத்தானையணுவையா ர்க்குந், தெரியாததத்துவனைத்தேனைப்பாலைத்திகழொளியைத்தேவர்கடங்



கோனைமற்றைக், கரியானைநான்முகனைக்கனலைக்காற்றைக்கனைகடலைக்குல வரையைக்கலந்துநின்ற, பெரியானைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநா ளெல்லாம்பிறவாநாளே. (க)

கற்றானைக்கங்கைவார்சடையான்றன்னைக்காவிரிசூழ்வலஞ்சுழியுங்கருதி னானை, அற்றானையலந்தார்க்குமருள்செய்வானையாரும்புகுவானையறிந்தோ மன்றே, மற்றாருந்தன்னொப்பாரில்லாதானைவானவர்களெப்பொழுதும் வணங்கியேத்தப், பெற்றானைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பி றவாநாளே (உ)

கருமானினுரியதளேயுடையாவீக்கிக் கனைகழல்கள்கலந்தொலிப்பவனல் கையேந்தி, வருமானத்திரடோள்கள்மட்டித்தாடவளர்மதியுஞ்சடைக்கணிந்து மானேர்நோக்கி, அருமானவாண்முகத்தாளமர்ந்துகாணவமரர்கணமுடிவணங் கவாடுகின்ற, பெருமானைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம் பிறவாநாளே. (ங)

அருந்தவர்கடொழுதேத்துமப்பன்றன்னை யமரர்கடம்பெருமானையரனை மூவா, மருந்தமரர்க்கருள்புரிந்தமைந்தன்றன்னைமறிகடலுங்குலவரையும்மண் ணும்விண்ணும், திருந்தொளியதாரகையுந்திசைகளெட்டுந்திரிசுடர்களோரிர ண்டும்பிறவுமாய, பெருந்தகையைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெ ல்லாம்பிறவாநாளே.

அருந்துணையையடியார்தமல்லறீர்க்குமருமருந்தையகன்ஞாலத்தகத்துட் டோன்றி, வருந்துணையுஞ்சுற்றமும்பற்றும்விட்டுவான்புலன்களகத்தடக்கி மடவாரோடும், பொருந்தணைமேல்வரும்பயனைப்போகமாற்றிப்பொதுநீக்கித் தனைநினையவல்லோர்க்கென்றும், பெருந்துணையைப்பெரும்பற்றப்புலியூரா னைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (ரு)

கரும்பமருமொழிமடவாள்பங்கன்றன்னைக் கனவயிரக்குன்றதனைக்காட் சியானை, அரும்பமரும்பூங்கொன்றைத்தாரான்றன்னையருமறையோடாறங்க மாயினானைச், சுரும்பமருங்கடிபொழில்கள்சூழ்தென்னாரூர்ச்சுடர்க்கொழுந் தைத்துளக்கிலாவிளக்கைமிக்க, பெரும்பயனைப்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (சு)

வரும்பயனையெழுநரம்பினோசையானைவரைசிலையாவானவர்கண்முயன் றவாளி, அரும்பயஞ்செயவுணர்புரமெரியக்கோத்தவம்மானையலைகடனஞ்சயி ன்றான்றன்னைச், சுரும்பவிழுங்குழன்மடவார்கடைக்கணோக்கிற்றுளங்காதசி ந்தையராய்த்துறந்தோருள்ளப், பெரும்பயனைப்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (எ)

காரானையீருரிவைப்போர்வையானைக்காமருபூங்கச்சியேகம்பன்றன்னை, யாரேனுமடியவர்கட்கணியான்றன்னையமரர்களுக்கறிவரியவளவிலானைப், பா ரோரும்விண்ணோரும்பணியநட்டம்பயில்கின்றபரஞ்சுடரைப்பரனையெண்ணி ல், பேரானைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே.

முற்றாதபான்மதியஞ்சூடினானைமூவுலகுந்தானாயமுதல்வன்றன்னைச், செற்றார்கள்புரமூன்றுஞ்செற்றான்றன்னைத்திகழொளியமரகதத்தைத்தேனை ப்பாலைக், குற்றாலத்தமர்ந்துறையுங்குழகன்றன்னைக்கூத்தாடவல்லானைக்கோ னைஞானம், பெற்றார்கள்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிற வாநாளே. (கூ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னமாம்பன்மலர்களன்றேசூடிச்செஞ்சடைமேல் வெண்மதியஞ்சேர்த்தினானைக், கன்னியம்புன்னைசூழ்ந்தணைகைக்காரோணத்தெஞ்ஞான் றுங்காணலாமே.

நடையுடையநல்லெருதொன் றூர்வான் றன்னை ஞானப்பெருங்கடலைநல்லூர்மேய, படையுடையமழுவாளொன்றேந்தினானைப்பன்மையேபேசும்படிறன் றன்னை, மடையிடையேவாளையுகளும் பொய்கைமருகல்வாய்ச்சோதிமணிகண்டனைக், கடையுடையநெடுமாடமோங்குநாகைக்காரோணத்தெஞ்ஞான் றுங்காணலாமே. (ரு)

புலங்கொள்பூந்தேறல்வாய்ப்புகலிக்கோனைப்பூம்புகார்க்கற்பகத்தைப்புன்கூர்மேய, வலங்கலக்கழனிசூழணிநீர்கங்கையவிர்சடைமேலாதரித்தவம்மான்றன்னை, யிலங்குதலைமாலைபாம்புகொண்டேகாசமிட்டியங்குமீசன்றன்னைக், கலங்கற்கடல்புடைசூழ்ந்தணைகைக்காரோணத்தெஞ்ஞான் றுங்காணலாமே. ()

பொன்மணியைப்பூங்கொன்றைமாலையானைப்புண்ணியனைவெண்ணீறுபூசினானைச், சின்மணியமூவிலயஞ்சூலத்தானைத்தென்சிராப்பள்ளிச்சிவலோகத்தானை, மன்மணியைவான்சடைமேற்பேணிவல்லெருதொன்றேறுமறைவல்லானைக், கன்மணிகள்வெண்டிரைசூழ்ந்தணைகைக்காரோணத்தெஞ்ஞான் றுங்காணலாமே. (எ)

வெண்டலையும்வெண்மழுவுமேந்தினானைவிரிசோவணம்மசைத்தவெண்ணீற்றானைப், புண்டலையமால்யானையுரிபோர்த்தானைப்புண்ணியனைவெண்ணீறணிந்தான்றன்னை, யெண்டிசையுமெரியாடவல்லான்றன்னையேகம்பமேயானையெம்மான்றன்னைக், கண்டலங்கழனிசூழ்ந்தணைகைக்காரோணத்தெஞ்ஞான் றுங்காணலாமே. (அ)

சொல்லார்ந்தசோற்றுத்துறையான்றன்னைத்தொன்னரகன்னெறியாற்றார்ப்பான்றன்னை, வில்லானைமீயச்சூர்மேவினானைவேதியர்களெல்வர்க்கும்வேதஞ்சொல்லிப், பொல்லாதார்தம்மரணம்மூன்றும்பொன்றப்பொறியரவமார்பாரப்பூண்டான்றன்னைக், கல்லாலின்கீழானைக்கழிசூழ்நாகைக்காரோணத்தெஞ்ஞான் றுங்காணலாமே. (கூ)

மனைதுறந்தவல்லமணர்தங்கள்பொய்யுமாண்புரைக்குமனக்குண்டர்தங்கள்பொய்யுஞ், சினைபொதிந்தசீவரத்தர்தங்கள்பொய்யுமெய்யென்றுகருதாதேபோதுநெஞ்சே, பனையுரியைத்தன்னுடலிற்போர்த்தவெந்தையவன்பற்றேபற்றாகக்காணினல்லாற், கனைகடலின்றென்கழிசூழ்ந்தணைகைக்காரோணத்தெஞ்ஞான் றுங்காணலாமே. (க0)

நெடியானுமலரவனுநேடியாங்கேநேருருவங்காணாமேசென்றுநின்ற, படியானைப்பாம்புரமேகாதலானைப்பாம்பரையோடார்த்தபடிறன்றன்னைச், செடிநாறும்வெண்டலையிற்பிச்சைக்கென்று சென்றானைநின்றியூர்மேயான்றன்னைக், கடிநாறும்பூஞ்சோலைத்தணைகைக்காரோணத்தெஞ்ஞான் றுங்காணலாமே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாரூர். திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

உயிராவணமிருந்துற்றுநோக்கியுள்ளக்கிளியினுருவெழுதி
யுயிராவணஞ்செய்திட்டுன்கைத்தந்தாலுணரப்படுவாரோடொட்டிவாழ்தி



யயிராவணமேறாதானேறேறியமரர்நாடாளாதேயாரூராண்ட
வயிராவணமேயென்னம்மானேநின்னருட்கண்ணானோக்காதாரல்லாதாரே. ()

எழுதுகொடியிடையாரேழைமென்றோளிளையவர்கணம்மையிகழாமுன்னம்
பழுதுபடநினையேல்பாவிநெஞ்சேபண்டுதானென்னோடுபகைதானுண்டோ
முழுதுலகில்வானவர்கண்முற்றுங்கூடிமுடியாலுறவணங்கிமுற்றம்பற்றி
யழுதுதிருவடிக்கேபூசைசெய்யவிருக்கின்றானூர்போலுமாரூர்தானே. (உ)

தேரூரார்மாவூரார்திங்களூரார்திகழ்புன்சடைமுடிமேற்றிங்கள்சூடிக்
காரூரானின்றகழனிச்சாயற்கண்ணார்ந்தமாடங்கலந்துதோன்று
மோரூராவுலகெல்லாமொப்பக்கூடியுமையாண்மணவாளாவென்றுவாழ்த்தி
யாரூராவாரூராவென்கின்றார்களமரர்கடம்பெருமானேயெங்குற்றாயே. (ந)

கோவணமோதோலோவுடையாவதுகொல்லேறோவேழமோவூர்வதுதான், பூவணமோபுறம்பயமோவன்றாயிற்றான்பொருந்தாதார்வாழ்க்கைதிருந்தாமையோ, நீவணத்தசெஞ்சடைமேற்றிங்கள்சூடித்திசைநான்கும்வைத்துகந்தசெந்தீவண்ணா, ராவணமோவெற்றியோவம்மானார்தாமறியேன்மற்றாராமாறாரூர்தானே. (ச)

எந்துமழுவாளரின்னம்பாராரெரிபவளவண்ணர்குடமூக்கிலார்
வாய்ந்தவளைக்கையாள்பாகமாகவார்சடையார்வந்துவலஞ்சுழியார்
போந்தாரடிகள்புறம்பயத்தேபுகலூர்க்கேபோயினார்போரேறேறி
யாய்ந்தேயிருப்பார்போயாரூர்புக்காரண்ணலார்செய்கின்றகண்மாயமே. (ரு)

கருவாகிக்குழம்பிருந்துகலித்துமூளைகருநரம்பும்வெள்ளெலும்புஞ்சேர்ந்தொன்றாகி, யுருவாகிப்புறப்பட்டிங்கொருத்திதன்னால்வளர்க்கப்பட்டுயிராருங்கடைபோகாரான், மருவாகிநின்னடியேமறவேனம்மான்மறித்தொருகாற்பிறப்புண்டேன்மறவாவண்ணந், திருவாரூர்மணவாளாதிருத்தென்கூடாசெம்பொனேகம்பனேதிகைத்திட்டேனே. (சு)

முன்னமவனுடையநாமங்கேட்டாண்மூர்த்தியவனிருக்கும்வண்ணங்கேட்டா
பின்னையவனுடையவாரூர்கேட்டாள் பெயர்த்துமவனுக்கேபிச்சியானா (ள்
ளன்னையையுமத்தனையுமன்றேநீத்தாளகன்றாளகலிடத்தாராசாரத்தைத்
தன்னைமறந்தாடன்னாமங்கெட்டாடலைப்பட்டாணங்கைதலைவன்றாளே. (எ)

ஆடுவாய்நீநட்டமளவிற்குன்றாவவியடுவாரருமறையோரறிந்தேனுன்னைப், பாடுவார்தும்புருவுநாரதாதிபரவுவாரமரர்களுமமரர்கோனுந், தேடுவார்திருமாலுநான்முகனுந்தீண்டுவாள்மலைமகளுங்கங்கையாளுங், கூடுமோநாயடியேன்செய்குற்றேவல்குறையுண்டேதிருவாரூர்குடிகொண்டீர்க்கே. (அ)

நீருருஞ்செஞ்சடையாய்நெற்றிக்கண்ணாய்நிலாத்திங்கட்டுண்டத்தாய்நின்னைத்தேடி, யோருருமொழியாமேபோற்றித்தெங்குமுலகமெலாந்திரிதந்துநின்னைக்காண்பான், றேருருநெடுவீதிபற்றிநின்றுதிருமாலுநான்முகனுந்தேர்ந்துகாண், தாரூராவாரூராவென்கின்றார்களமரர்கடம்பெருமானேயாரூராயே.

நல்லூரேநன்றாகநட்டமிட்டுநறையேற்றைப்பழையாறேபாயவேறிப், பல்லூரும்பலிதிரிந்துசேற்றூர்மீதேபலர்காணத்தலையாலங்காட்டினூடே, யில்லார்ந்தபெருவேளூர்த்தளியேபேணியிராப்பட்டீச்சரங்கடந்துமணற்கால்புக்,கெல்லாருந்தனிச்சாத்தங்குடியிற்காணவிறைப்பொழுதிற்றிருவாரூர்புக்கார்தாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரையாரும்புனற்பொன்னித்தீர்த்தமல்கு திருவானைக்காவிலுறைதேனைவானோர், அரையாவுன்பொற்பாதமடையப்பெற்றாலல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௬)

மையாருமணிமிடற்றாய்மாதோர்கூறாய் மான்மறியுமாமழுவு மனலுமேந்துங், கையானேகாலனுடல்மாளச்செற்றகங்காளாமுன்கோளும்விளைவுமானாய், செய்யானேதிருமேனியரியாய்தேவர்குலக்கொழுந்தேதென்னானைக்காவுண்மேய, ஐயாவுன்பொற்பாதமடையப் பெற்றாலல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௭)

இலையாருஞ்சூலத்தாயெண்டோளானேயெவ்விடத்துநீயலாதில்லையென்று, தலையாரக்கும்பிடுவார்தன்மையானேதழன்மடுத்தமாமேருக்கையில்வைத்த, சிலையானேதிருவானைக்காவுண்மேயதீயாடீசிறுநோயால்நலிவுண்டுள்ளம், அலையாதேநின்னடியேயடையப்பெற்றால் லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௮)

விண்ணாரும்புனல்பொதிசெஞ்சடையாய்வேத நெறியானேயெறிகடலினஞ்சமுண்டாய், எண்ணாரும்புகழானேயுன்னையெம்மானென்றென்றேநாவினிலெப்பொழுதுமுன்னிக், கண்ணாரக்கண்டிருக்கக்களித்தெப்போதுங் கடிபொழில்சூழ்தென்னானைக்காவுண்மேய, அண்ணாநின்பொற்பாதமடையப்பெற்றாலல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௯)

கொடியேயும்வெள்ளேற்றாய்கூளிபாடக்குறட்பூதங்கூத்தாடநீயுமாடி, வடிவேயுமங்கைதனைவைத்தமைந்தாமதிலானைக்காவுளாய்மாகாளத்தாய், படியேயுங்கடலிலங்கைக்கோமான்றன்னைப்பருமுடியுந் திரடோளுமடர்த்துகந்த, அடியேவந்தடைந்தடிமையாகப்பெற்றால் லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## தனித்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அப்பநீயம்மைநீயையனுநீயன்புடையமாமனுமாமியுநீ
ஒப்புடையமாதருமொண்பொருளுநீயொருகுலமுஞ்சுற்றமுமோரூருநீ [ய்நீ
துய்ப்பனவுமுய்ப்பனவுந்தோற்றுவாய்நீதுணையாயென்னெஞ்சந்துறப்பிப்பா
இப்பொன்னீயிம்மணிநீயிம்முத்துநீயிறைவனீயேறூர்ந்தசெல்வனீயே. (௧)

வெம்பவருகிற்பதன்றுகூற்றநம்மேல் வெய்யவினைப்பகையும்பையநையும், எம்பரிவுதீர்ந்தோமிடுக்கணில்லோ மெங்கெழிலென்ஞாயிறெளியோமல்லோம், அம்பவளச்செஞ்சடைமேலாறுசூடியனலாடியானஞ்சுமாட்டுகந்த, செம்பவளவண்ணர்செங்குன்றவண்ணர்செவ்வானவண்ணரென்சிந்தையாரே. (௨)

ஆட்டுவித்தாலாரொருவராடாதாரேயடக்குவித்தாலாரொருவரடங்காதாரே, ஓட்டுவித்தாலாரொருவரோடாதாரேயுருகுவித்தாலாரொருவருருகாதாரே, பாட்டுவித்தாலாரொருவர்பாடாதாரேபணிவித்தாலாரொருவர்பணியாதாரே, காட்டுவித்தாலாரொருவர்காணாதாரேகாண்பாரார்கண்ணுதலாய்க்காட்டாக்காலே. (௩)

நற்பதத்தார்நற்பதமேஞானமூர்த்திநலஞ்சுடரேநால்வேதத்தப்பானின்ற [மை
சொற்பதத்தார்சொற்பதமுங்கடந்துநின்றசொலற்கரியசூழலாயிதுவுன்றன்



நிற்பதொத்துநிலையிலாநெஞ்சந்தன்னுணிலாவாதபுலாலுடம்பேபுகுந்துநின்ற
கற்பகமேயானுன்னைவிடுவேனல்லேன்கனகமாமணிநிறத்தெங்கடவுளானே.

திருக்கோயிலில்லாததிருவிலூருந்திருவெண்ணீறணியாததிருவிலூரும்
பருக்கோடிப்பத்திமையாற்பாடாவூரும்பாங்கினொடுபலதளிகளில்லாவூரும்
விருப்போடுவெண்சங்கமூதாவூரும்விதானமும்வெண்கொடியுமில்லாவூரும்
அருப்போடுமலர்பறித்திட்டுண்ணாவூருமவையெல்லாமூரல்லவடவிகாடே. ()

திருநாமமஞ்செழுத்துஞ்செப்பாராகிற்றீவண்ணர்திறமொருகாற்பேசாராகி, லொருகாலுந்திருக்கோயில்சூழாராகிலுண்பதன்முன்மலர்பறித்திட்டுண்ணாராகி, லருநோய்கள்கெடவெண்ணீறணியாராகிலளியற்றார்பிறந்தவாறேதோவென்னிற், பெருநோய்கண்மிகநலியப்பெயர்த்துஞ்செத்துப்பிறப்பதற்கேதொழிலாகியிறக்கின்றாரே. (௬)

நின்னாவார்பிறரின்றிநீயேயானாய்நினைப்பார்கண்மனத்துக்கோர்வித்துமானாய், மன்னானாய்மன்னவர்க்கோரமுதமானாய்மறைநான்குமானாயாறங்கமானாய், பொன்னானாய்மணியானாய்போகமானாய்பூமிமேற்புகழ்தக்கபொருளேயுன்னை, என்னானாயென்னானாயென்னினல்லாலேழையேனென்சொல்லியேத்துகேனே. (௭)

அத்தாவுன்னடியேனையன்பாலார்த்தா யருணோக்கிற்றீர்த்தநீராட்டிக்கொண்டாய், எத்தனையுமரியநீயெளியையானாயெனையாண்டுகொண்டிரங்கியேன்றுகொண்டாய், பித்தனேன்பேதையேன்பேயேனாயேன்பிழைத்தனகளெத்தனையும்பொறுத்தாயன்றே, யித்தனையுமெம்பரமோவையவையோவெம்பெருமான்றிருக்கருணையிருந்தவாறே. (௮)

குலம்பொல்லேன்குணம்பொல்லேன்குறியும்பொல்லேன் குற்றமேபெரிதுடையேன்கோலமாய, நலம்பொல்லேன்நான்பொல்லேன்ஞானியல்லேனல்லாரோடிசைந்திலேனடுவேநின்ற, விலங்கல்லேன்விலங்கலாதொழிந்தேனல்லேன்வெறுப்பனவுமிகப்பெரிதும்பேசவல்லே, னிலம்பொல்லேனிரப்பதல்லாலீயமாட்டேனென்செய்வான்றோன்றினேனேழையேனே. (௯)

சங்கநிதிபதுமநிதியிரண்டுந்தந்து தரணியொடுவானாளத்தருவரேனு, மங்குவாரவர்செல்வமதிப்போமல்லோமாதேவர்க்கேகாந்தரல்லாராகி, லங்கமெலாங்குறைந்தழுகுதொழுநோயராயாவுரித்துத்தின்றுழலும்புலையரேனுங், கங்கைவார்சடைக்கரந்தார்க்கன்பராகிலவர்கண்டீர்நாம்வணங்குங்கடவுளாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## திருப்புகலூர். திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

எண்ணுகேனென்சொல்லியெண்ணுகேனோ வெம்பெருமான்றிருவடியேயெண்ணினல்லாற், கண்ணிலேன்மற்றோர்களைகணில்லேன்கழலடியேகைதொழுதுகாணினல்லா, லொண்ணுளேயொன்பதுவாசல்வைத்தாயொக்கவடைக்கும்போதுணரமாட்டேன், புண்ணியனேயுன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௧)

அங்கமேபூண்டாயனலாடினாயாதிரையாயானிழலாயானேறூர்ந்தாய்
பங்கமொன்றில்லாதபடர்சடையினாய்பாம்பொடுதிங்கள்பகைதீர்த்தாண்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கையொன்றின்றியேதேவர்வேண்டச்சமுத்திரத்தினஞ்சுண்டுசாவாமூவாச்
சிங்கமேயுன்னடிக்கேபோதுகின்றேன்றிருப்புகலூர்மேவியதேவதேவே. (௨)

பையரவக்கச்சையாய்பால்வெண்ணீற்றாய் பளிக்குக்குழையினாய்பண்ணா
ரின்சொன், மைவிரவுகண்ணாளைப்பாகங்கொண்டாய்மான்மறிக்கையேந்தினா
ய்வஞ்சக்கள்வ, ஐவரையுமென்மேற்றரவறுத்தாயவர்வேண்டுங்காரியமிங்கா
வதில்லைப், பொய்யுரையாதுன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்மேவிய
புண்ணியனே. (௩)

தெருளாதார்மூவெயிலுந்தீயில்வேவச் சிலைவளைத்துச்செங்கணையாற்செ
ற்றதேவே, மருளாதார்தம்மனத்தில்வாட்டந்தீர்ப்பாய்மருந்தாய்ப்பிணிதீர்ப்பா
ய்வானோர்க்கென்றும், அருளாகியாதியாய்வேதமாகியலர்மேலானீர்மேலானா
ய்ந்துகாணாப், பொருளாவாயுன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவிய
புண்ணியனே. (௪)

நீரேறுசெஞ்சடைமேனிலாவெண்டிங்கணீங்காமைவைத்துகந்தநீதியானே
பாரேறுபடுதலையிற்பலிகொள்வானேபண்டனங்கைப்பார்த்தானேபாவநாசா
காரேறுமுகிலனையகண்டத்தானேகருங்கைக்களிற்றுரிவைகதறப்போர்த்த
போரேறேயுன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே. ()

விரிசடையாய்வேதியனேவேதகீதா விரிபொழில்சூழ்வெண்காட்டாய்மீ
யச்சூராய், திரிபுரங்களெரிசெய்ததேவதேவே திருவாரூர்த்திருமூலத்தானமே
யாய், மருவினியார்மனத்துளாய்மாகாளத்தாய்வலஞ்சுழியாய்மாமறைக்காட்
டெந்தாயென்றும், புரிசடையாயுன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மே
வியபுண்ணியனே. (௬)

தேவார்ந்ததேவனைத்தேவரெல்லாந்திருவடிமேலலரிட்டுத்தேடிநின்று
நாவார்ந்தமறைபாடிநட்டமாடிநான்முகனுமிந்திரனுமாலும்போற்றிக் [ன்
காவார்ந்தபொழிற்சோலைகாணப்பெற்றாய்கழுக்குன்றத்துச்சியாய்கடவுளேநி
பூவார்ந்தபொன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே.

செய்யாடிங்ன்மலனேநீலகண்டாநிறைவுடையாய்மறைவல்லாய்நீதியானே
மையாடுகண்மடவாள்பாகத்தானேமான்றோலுடையாய்மகிழ்ந்துநின்றாய்
கொய்யாடுகூவிளங்கொன்றைமாலைகொண்டடியேனுனிட்டுக்கூறிநின்று
பொய்யாதசேவடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே. ()

தன்னஞ்சேர்கோவணத்தாய் தூயநீற்றாய் துதைந்திலங்குவெண்மழுவா
ள்கையிலேந்தித், தன்னனையுந்தண்மதியும்பாம்புநீருஞ்சடைமுடிமேல்வைத்
துகந்ததன்மையானே, அன்னநடைமடவாள்பாகத்தானேயக்காரம்பூண்டா
னேயாதியானே, பொன்னங்கழலடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவிய
புண்ணியனே. (௯)

ஒருவனேயுமல்லாதுணராதுள்ளமுணர்ச்சித்துமாற்றத்துன்னேநின்ற
விருவரையுமூவரையுமென்மேலேவியில்லாததரவறுத்தாய்க்கில்லேனேலக்
கருவரைசூழ்கானவிலங்கைவேந்தன்கடுந்தேர்மீதோடாமைகாலாற்செற்ற
பொருவரையாயுன்னடிக்கேபோதுகின்றேன்பூம்புகலூர்மேவியபுண்ணியனே.

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

# தேவாரப்பதிகங்கள்.

### திருவெண்ணெய்நல்லூர்ப்பதிகம். பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறைசூடிபெருமானேயருளாளா
வெத்தான்மறவாதேநினைக்கின்றேனமனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (௧)

நாயேன்பலநாளுநினைப்பின்றிமனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த்தேன்பெறலாகாவருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாயாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (௨)

மன்னேமறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னைப்
பொன்னேமணிதானேவயிரமேபொருதுந்தி
மின்னார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளன்னேயுனக்காளாயினியல்லேனெனலாமே. (௩)

முடியேனினிப்பிறவேன்பெறின்மூவேன்பெற்றமூர்தி
கொடியேன்பலபொய்யேயுரைப்பேனைக்குறிக்கொண்ணீ
செடியார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளடிகேளுனக்காளாயினியல்லேனெனலாமே. (௪)

பாதம்பணிவார்கள்பெறுபண்டம்மதுபணியாய்
ஆதன்பொருளானேனறிவில்லேனருளாளா
தாதார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாதீயுனக்காளாயினியல்லேனெனலாமே. (௫)

தண்ணார்மதிசூடீதழல்போலுந்திருமேனி
எண்ணார்புரமூன்றுமெரியுண்ணநகைசெய்தாய்
மண்ணார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளண்ணாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (௬)

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய்
வானாய்நிலனானாய்கடலானாய்மலையானாய்
தேனார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளானாயுனக்காளாயினியல்லேனெனலாமே. (௭)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றார்புரமூன்றுமெரியுண்ணச்சிலைதொட்டாய்
தேற்றாதனசொல்லித்திரிவேனோசெக்கர்வானீ
ரேற்றாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாற்றாயுனக்காளாயினியல்லேனெனலாமே. (௮)

மழுவாள்வலனேந்தீமறையோதீமங்கைபங்கா
தொழுவாரவர்துயராயினதீர்த்தலுனதொழிலே
செழுவார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளழகாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (௯)

காரூர்புனலெய்திக்கரைகல்லித்திரைக்கையால்
பாரூர்புகழெய்தித்திகழ்பன்மாமணியுந்திச்
சீரூர்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாரூரனெம்பெருமாற்காளல்லேனெனலாமே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கலயநல்லூர். பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

குரும்பைமுலைமலர்க்குழலிகொண்டதவங்கண்டுகுறிப்பினொடுஞ்சென்றவடன்குணத்தினைநன்கறிந்து, விரும்பும்வரங்கொடுத்தவளைவேட்டருளிச்செய்தவிண்ணவர்கோன்கண்ணுதலோன்மேவியவூர்வினவில், அரும்பருகேசுரும்பருவவறுபதம்பண்பாடவணிமயில்களாடுமணிபொழில்சூழயலின், கரும்பருகேகருங்குவளைகண்வளருங்கழனிக்கமலங்கண்முகைமலருங்கலயநல்லூர்காணே. (௧)

செருமேவுசலந்தரனைப்பிளந்தசுடராழி செங்கண்மலர்பங்கயமாச்சிறந்தானுக்கருளி, இருண்மேவுமந்தகன்மேற்றிரிசூலம்பாய்ச்சியிந்திரனைத்தோண்முரித்தவிறைவனூர்வினவிற், பெருமேதைமறையொளியும்பேரிமுழவொலியும்பிள்ளையினந்துள்ளிவிளையாட்டொலியும்பெருகக், கருமேதிபுனன்மண்டக்கயன்மண்டக்கமலங்களிவண்டிங்கணிரியுங்கலயநல்லூர்காணே. (௨)

இண்டைமலர்கொண்டுமணலிலிங்கமதியற்றி யினத்தாவின்பாலாட்டவிடறியதாதையைத்தாள், துண்டமிடுசண்டியடியண்டர்தொழுதேத்தத்தொடர்ந்தவனைப்பணிகொண்டவிடங்கனதூர்வினவில், மண்டபமுங்கோபுரமுமாளிகைசூளிகையுமறையொலியும்விழவொலியுமறுகுநிறைவெய்திக், கண்டவர்கண்மனங்கவரும்புண்டரிகப்பொய்கைக்காரிகையார்குடைந்தாடுங் கலயநல்லூர்காணே. (௩)

மலைமடந்தைவிளையாடிவளையாடுகரத்தான் மகிழ்ந்தவன்கண்புதைத்தலுமேவல்லிருளாயெல்லாவுலகுடன்றன்மூடவிருளோடும்வகைநெற்றியொற்றைக்கண்படைத்துவந்தவத்தமனூர்வினவில், அலையடைந்தபுனல்பெருகியானைமருப்பிடறியகிலொடுசந்துந்திவருமரிசிலின்றென்கரைமேற், கலையடைந்தகலிகடியந்தணரோமப்புகையாற்கணமுகில்போன்றணிகிளருங்கலயநல்லூர்காணே. (௪)

நிற்பானுங்கமலத்திலிருப்பானுமுதலாகிநிறைந்தமரர்குறைந்திரப்பநினைந்தருளியவர்க்காய், வெற்பார்வில்லரவுநாணெரியம்பால்விரவார்புரமூன்றுமெரிவித்தவிகிர்தனூர்வினவிற், சொற்பாலபொருட்பாலசுருதியொருநான்குந்



தோத்திரமும்பலசொல்லித்துதித்திறைதன்றிறத்தே, கற்பாருங்கேட்பாருமாயெங்குநன்கார்கலைபயிலந்தணர்வாழுங்கலயநல்லூர்காணே. (௫)

பெற்றிமையொன்றறியாததக்கனதுவேள்விப் பெருந்தேவர்சிரந்தோள்பற்கரங்கண்பீடழியச், செற்றுமதிக்கலைசிதையத்திருவிரலாற்றேய்வித்தருள்பெருகுசிவபெருமான்சேர்தருமூர்வினவில், தெற்றுகொடிமுல்லையொடுமல்லிகைசெண்பகமுந்திரைபொருதுவருபுனல்சேர் அரிசிலின்றென்கரைமேற், கற்றினநன்கரும்பினமுளைகறிகற்கக்கறவைகமழ்கழுநீர்கவர்கழனிக்கலயநல்லூர்காணே. (௬)

இலங்கையர்கோன்சிரம்பத்தோடிருபதுதிண்டோளுமிற்றலறவொற்றைவிரல்வெற்பதன்மேலூன்றி, நிலங்கிளர்நீர்நெருப்பொடுகாற்றாகாசமாகிநிற்பனவுநடப்பனவாநின்மலனூர்வினவிற், பவங்கள்பலதிரையுந்திருப்பருமணிபொன்கொழித்துப்பாதிரிசந்தகிலினொடுகேதகையும்பருங்கிக், கலங்குபுனலம்பிவருமரிசிலின்றென்கரைமேற்கயலுகளும்வயல்புடைசூழ்கலயநல்லூர்காணே. (௭)

மாலயனுங்காண்பரியமாலெரியாய்நிமிர்ந்தோன் வன்னிமதிசென்னிமிசைவைத்தவன்மொய்த்தெழுந்த, வேலைவிடமுண்டமணிகண்டன்விடையூரும்விமலனுமையவளோடுமேவியவூர்வினவிற்,சோலைமலிகுயில்கூவக்கோலமயிலாலச்சுரும்பொடுவண்டிசைமுரலப்பசுங்கிளிசொற்றுதிக்கக், காலையிலுமாலையிலுங்கடவுளடிபணிந்துகசிந்தமனத்தவர்பயிலுங்கலயநல்லூர்காணே. (௮)

பொரும்பலமதுடையசுரன்றாரகனைப்பொருதுபொன்றுவித்தபொருளினைமுன்படைத்துகந்தபுனிதன், கரும்புவிலின்மலர்வாளிக்காமனுடல்வேவக்கனல்விழித்தகண்ணுதலோன்கருதுமூர்வினவில், இரும்புனல்வெண்டிரைபெருகியேலமிலவங்கமிருகரையும்பொருதலைக்குமரிசிலின்றென்கரைமேற், கரும்புனைவெண்முத்தரும்பிப்பொன்மலர்ந்துபவளக்கவின்காட்டுங்கடிபொழில்சூழ்கலயநல்லூர்காணே. (௯)

தண்கமலப்பொய்கைபுடைசூழ்ந்தழகார்தலத்திற்றடங்கொள்பெருங்கோயிறனிற்றக்கவகையாலே, வண்கமலத்தயன்முன்னாள்வழிபாடுசெய்யமகிழ்ந்தருளியிருந்தபரன்மருவியவூர்வினவில், வெண்கவரிகரும்பீலிவேங்கையொடுகோங்கின்விரைமலரும்விரவுபுனலரிசிலின்றென்கரைமேற், கண்கமுகின்பூம்பாளைமதுவாசங்கலந்தகமழ்தென்றல்புகுந்துலவுகலயநல்லூர்காணே. (௰)

தண்புனலும்வெண்மதியுந்தாங்கியசெஞ்சடையன் றாமரையோன்றலைகலனாகாமரமுன்பாடி, உண்பலிகொண்டுழல்பரமனுறையுமூர்நிறைநீரொழுகுபுனலரிசிலின்றென்கலயநல்லூரதனை, நன்புடையநஞ்சடையனிசைஞானிசிறுவனவலர்கோனாரூரனவி னயந்துரைசெய்பண்பயிலும்பத்துமிவைபத்திசெய்துநித்தம்பாடவல்லாரல்லலொடுபாவமிலர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருமழபாடி. பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேன்மிளிர்கொன்றையணிந்தவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னேமாமணியேமழபாடியுண்மாணிக்கமே
அன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௧)

கீளார்கோவணமுந்திருநீறுமெய்பூசியுன்றன்
றாளேவந்தடைந்தேன்றலைவாவெனையேன்றுகொணீ
வாளார்கண்ணிபங்காமழபாடியுண்மாணிக்கமே
கேளாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௨)

எம்மானெம்மனையென்றெனக்கெட்டனைச்சார்வாகா
ரிம்மாயப்பிறவிப்பிறந்தேயிறந்தெய்த்தொழிந்தேன்
மைம்மாம்பூம்பொழில்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
யெம்மானின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௩)

பண்டேநின்னடியேனடியாரடியார்கட்கெல்லாந்
தொண்டேபூண்டொழிந்தேன்றொடராமைத்துரிசறுத்தேன்
வண்டார்பூம்பொழில்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
யண்டாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௪)

கண்ணாயேழுலகுங்கருத்தாயவருத்தமுமாய்ப்
பண்ணாரின்றமிழாய்ப்பரமாயபரஞ்சுடரே
மண்ணார்பூம்பொழில்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
யண்ணாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௫)

நாளார்வந்தணுகிநலியாமுனநின்றனக்கே
யாளாவந்தடைந்தேனடியேனையுமேன்றுகொணீ
மாளாநாளருளுமழபாடியுண்மாணிக்கமே
யாளாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௬)

சந்தாருங்குழையாய்சடைமேற்பிறைதாங்கிநல்ல
வெந்தார்வெண்பொடியாய்விடையேறியவித்தகனே
மைந்தார்சோலைகள்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
யெந்தாய்நின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௭)

வெய்யவிரிசுடரோன்மிகுதேவர்கணங்களெல்லாஞ்
செய்யமலர்களிடமிகுசெம்மையுள்நின்றவனே
மையார்பூம்பொழில்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
யையாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௮)

நெறியேநின்மலனேநெடுமாலயன்போற்றிசெய்யுங்
குறியேநீர்மையனேகொடியேரிடையாள்தலைவா
மறிசேரங்கையனேமழபாடியுண்மாணிக்கமே
யறியேனின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௯)

ஏரார்முப்புரமுமெரியச்சிலைதொட்டவனை
வாரார்கொங்கையுடன்மழபாடியுண்மேயவனைச்
சீரார்நாவலர்கோனூரனுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---



## திருக்கடவூர். பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடியார்மேனியனேபுரிநூலொருபாற்பொருந்த
வடியார்மூவிலைவேல்வளர்கங்கையின்மங்கையொடுங்
கடியார்கொன்றையனேகடவூர்தனுள்வீரட்டத்தெம்
அடிகேளென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (௧)

பிறையாருஞ்சடையாய்பிரமன்றலையிற்பலிகொண்
மறையார்வானவனேமறையின்பொருளானவனே
கறையாரும்மிடற்றாய்கடவூர்தனுள்வீரட்டத்தெம்
இறைவாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (௨)

அன்றாலின்னிழற்கீழறநால்வர்க்கருள்புரிந்து
கொன்றாய்காலனுயிர்கொடுத்தாய்மறையோனுக்குமான்
நன்றாருங்கரவாகடவூர்த்திருவீரட்டத்துள்
என்றாதைபெருமானெனக்கார்துணைநீயலதே. (௩)

போராருங்கரியின்னுரிபோர்த்துப்பொன்மேனியின்மேல்
வாராரும்முலையாளொருபாகமகிழ்ந்தவனே
காராரும்மிடற்றாய்கடவூர்தனுள்வீரட்டானத்
தாராவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (௪)

மையார்கண்டத்தினாய்மதமாவுரிபோர்த்தவனே
பொய்யாதென்னுயிருட்புகுந்தாயின்னம்போந்தறியாய்
கையாராடரவாகடவூர்தனுள்வீரட்டத்தெம்
ஐயாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (௫)

மண்ணீர்தீவெளிகால்வருபூதங்களாகிமற்றும்
பெண்ணோடாணலியாய்ப்பிறவாவுருவானவனே
கண்ணாரும்மணியேகடவூர்தனுள்வீரட்டத்தெம்
அண்ணாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (௬)

எரியார்புன்சடைமேலிளநாகமணிந்தவனே
நரியாருஞ்சுடலைநகுவெண்டலைகொண்டவனே
கரியாரீருரியாய்கடவூர்தனுள்வீரட்டத்தெம்
அரியாயென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (௭)

வேறாவுன்னடியேன்விளங்குங்குழைக்காதுடையாய்
தேறேனுன்னையல்லாற்சிவனேயென்செழுஞ்சுடரே
காறூர்வெண்மருப்பாகடவூர்த்திருவீரட்டத்துள்
ஆரூர்செஞ்சடையாயெனக்கார்துணைநீயலதே. (௮)

அயனோடன்றரியுமடியும்முடிகாண்பரிய
பயனேயெம்பரனேபரமாயபரஞ்சுடரே
கயமாருஞ்சடையாய்கடவூர்த்திருவீரட்டத்துள்
அயனேயென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (௯)

காராரும்பொழில்சூழ்கடவூர்த்திருவீரட்டத்துள்
ஏராரும்மிறையைத்துணையாவெழில்நாவலர்கோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்க்கற்குமடியேன், அம்பரான்சோமாசிமாறனுக்கடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. (௫)

வார்கொண்டவனமுலையாளுமைபங்கன்கழலேமறவாதுகல்லெறிந்தசாக்கியற்குமடியேன், சீர்கொண்டபுகழ்வள்ளல்சிறப்புலிக்குமடியேன்செங்காட்டங்குடிமேயசிறுத்தொண்டற்கடியேன், கார்கொண்டகொடைக்கழறிற்றறிவார்க்குமடியேன்கடற்காழிக்கணநாதனடியார்க்குமடியே, னார்கொண்டவேற்கூற்றன்களந்தைக்கோனடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. (௬)

பொய்யடிமையில்லாதபுலவர்க்குமடியேன்பொழிற்கருவூர்த்துஞ்சியபுகழ்ச்சோழற்கடியேன், மெய்யடியானரசிங்கமுனையரையற்கடியேன்விரிதிரைசூழ்கடனாகையதிபத்தற்கடியேன், கைதடிந்தவரிசிலையான்கலிக்கம்பன்கலியன்கழற்சத்திவரிஞ்சையர்கோனடியார்க்குமடியே, னையடிகள்காடவர்கோனடியார்க்குமடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. (௭)

கறைக்கண்டன்கழலடியேகாப்புக்கொண்டிருந்தகணம்புல்லநம்பிக்குங்காரிக்குமடியே, னிறைக்கொண்டசிந்தையானெல்வேலிவென்றநின்றசீர்நெடுமாறனடியார்க்குமடியேன், றுறைக்கொண்டசெம்பவளமிருளகற்றுஞ்சோதித்தொன்மயிலைவாயிலானடியார்க்குமடியே, னறைக்கொண்டவேனம்பிமுனையடுவார்க்கடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. (௮)

கடல்சூழ்ந்தவுலகெலாங்காக்கின்றபெருமான்காடவர்கோன்கழற்சிங்கனடியார்க்குமடியேன், மடல்சூழ்ந்ததார்நம்பியிடங்கழிக்குந்தஞ்சைமன்னவனாஞ்செருத்துணைதன்னடியார்க்குமடியேன், புடைசூழ்ந்தபுலியதண்மேலரவாடவாடிபொன்னடிக்கேமனம்வைத்தபுகழ்த்துணைக்குமடியே, னடல்சூழ்ந்தவேனம்பிகோட்புலிக்குமடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. (௯)

பத்தராய்ப்பணிவார்களெல்லார்க்குமடியேன்பரமனையேபாடுவாரடியார்க்குமடியேன், சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்க்குமடியேன்றிருவாரூர்ப்பிறந்தார்களெல்லார்க்குமடியேன், முப்போதுந்திருமேனிதீண்டுவார்க்கடியேன்முழுநீறுபூசியமுனிவர்க்குமடியே, னப்பாலுமடிச்சார்ந்தவடியார்க்குமடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. (௰)

மன்னியசீர்மறைநாவனின்றவூர்ப்பூசல்வரிவளையாள்மானிக்குநேசனுக்குமடியேன், றென்னவனாயுலகாண்டசெங்கணார்க்கடியேன்றிருநீலகண்டத்துப்பாணனார்க்கடியே, னன்னவனாமரனடியேயடைந்திட்டசடையனிசைஞானிகாதலன்றிருநாவலூர்க்கோ, னன்னவனாமாரூரனடிமைகேட்டுவப்பாராரூரிலம்மானுக்கன்பராவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்பாண்டிக்கொடுமுடி. பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிருப்பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்



கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௧)

இட்டனும்மடியேத்துவாரிகழ்ந்திட்டநாள்மறந்திட்டநாள்
கெட்டநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரி
வட்டவாசிகைகொண்டடிதொழுதேத்துபாண்டிக்கொடுமுடி
நட்டவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௨)

ஓவுநாளுணர்வழியுநாளுயிர்போகுநாளுயர்பாடைமேற்
காவுநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரிப்
பாவுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடி
நாவலாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௩)

எல்லையில்புகழெம்பிரானெந்தைதம்பிரானென்பொன்மாமணி
கல்லையுந்திவளம்பொழிந்திழிகாவிரியதன்வாய்க்கரை
நல்லவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
வல்லவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௪)

அஞ்சினார்க்கரணாதியென்றடியேனுநான்மிகவஞ்சினேன்
அஞ்சலென்றடித்தொண்டனேற்கருணல்கினாய்கழிகின்றதென்
பஞ்சின்மெல்லடிப்பாவைமார்குடைந்தாடுபாண்டிக்கொடுமுடி
நஞ்சணிகண்டநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௫)

ஏடுவானிளந்திங்கள்சூடினையென்பின்கொல்புலித்தோலின்மேல்
ஆடும்பாம்பதரைக்கசைத்தவழகனேயந்தண்காவிரிப்
பாடுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடிச்
சேடனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௬)

விரும்பிநின்மலர்ப்பாதமேநினைந்தேன்வினைகளும்விண்டன
நெருங்கிவண்பொழில்சூழ்ந்தெழில்பெறநின்றகாவிரிக்கோட்டிடைக்
குரும்பைமென்முலைக்கோதைமார்குடைந்தாடுபாண்டிக்கொடுமுடி
விரும்பனேனுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௭)

செம்பொனேர்சடையாய்திரிபுரந்தீயெழச்சிலைகோலினாய்
வம்புலாங்குழலாளைப்பாகமமர்ந்துகாவிரிக்கோட்டிடைக்
கொம்பின்மேற்குயில்கூவமாமயிலாடுபாண்டிக்கொடுமுடி
நம்பனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௮)

சாரணன்றந்தையெம்பிரானெந்தைதம்பிரானென்பொன்மாமணியென்று
பேரெணாயிரகோடிதேவர்பிதற்றிநின்றுபிரிகிலார்
நாரணன்பிரமன்றொழுங்கறையூரிற்பாண்டிக்கொடுமுடிக்
காரணாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௯)

கோணியபிறைசூடியைக்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
பேணியபெருமானைப்பிஞ்ஞகப்பித்தனைப்பிறப்பில்லியைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணுலாவரிவண்டறைகொன்றைத்தாரனைப்படப்பாம்பரை
நாணனைத்தொண்டனூரன்சொல்லிவைசொல்லுவார்க்கில்லைதுன்பமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாலங்காடு. பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

முத்தாமுத்திதரவல்லமுகிழ்மென்முலையாளுமைபங்கா
சித்தாசித்தித்திறங்காட்டுஞ்சிவனேதேவர்சிங்கமே
பத்தாபத்தர்பலர்போற்றும்பரமாபழையனூர்மேய
அத்தாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (க)

பொய்யேசெய்துபுறம்புறமேதிரிவேன்றன்னைப்போகாமே
மெய்யேவந்திங்கெனையாண்டமெய்யாமெய்யர்மெய்ப்பொருளே
பையாடரவமரைக்கசைத்தபரமாபழையனூர்மேய
ஐயாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனானே. (உ)

தூண்டாவிளக்கினற்சோதிதொழுவார்தங்கள்துயர்தீர்ப்பாய்
பூண்டாயெலும்பைப்புரமூன்றும்பொடியாச்செற்றபுண்ணியனே
பாண்டாழ்வினைகளவைதீர்க்கும்பரமாபழையனூர்மேய
ஆண்டாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (ந)

மறிநேரொண்கண்மடநல்லார்வலையிற்பட்டுமதிமயங்கி
யறிவேயழிந்தேனையாநானைமையார்கண்டமுடையானே
பறியாவினைகளவைதீர்க்கும்பரமாபழையனூர்மேய
அறிவேயாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (ச)

வேலங்காடுதடங்கண்ணார்வலையுட்பட்டுன்னெறிமறந்து
மாலங்காடிமறந்தொழிந்தேன்மணியேமுத்தேமரகதமே
பாலங்காடிநெய்யாடிபடர்புன்சடையாய்பழையனூர்
ஆலங்காடாவுன்னுடையவடியார்க்கடியேனாவேனே. (ரு)

எண்ணார்தங்களெயிலெய்தவெந்தாயெந்தைபெருமானே
கண்ணாயுலகங்காக்கின்றகருத்தாதிருத்தலாகாதாய்
பண்ணாரிசைகளதுகொண்டுபலருமேத்தும்பழையனூர்
அண்ணாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (சா)

வண்டார்குழலியுமைநங்கைபங்காகங்கைமணவாளா
விண்டார்புரங்களெரிசெய்தவிடையாய்வேதநெறியானே
பண்டாழ்வினைகள்பலதீர்க்கும்பரமாபழையனூர்மேய
அண்டாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (எ)

பேழ்வாயரவினணையானும்பெரியமலர்மேலுறைவானுந்
தாழாதுன்றன்சரண்பணியத்தழலாய்நின்றதத்துவனே



பாழாம்வினைகளவைதீர்க்கும்பரமாபழையனூர்தன்னை
யாள்வாயாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (அ)

எம்மானெந்தைமூத்தப்பனேழ்படிகாலெமையாண்ட
பெம்மானீமப்புறங்காட்டிற்பேயோடாடல்புரிவானே
பண்மாமலர்களவைகொண்டுபலருமேத்தும்பழையனூர்
அம்மாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (கூ)

பத்தர்சித்தர்பலரேத்தும்பரமன்பழையனூர்மேய
அத்தனாலங்காடன்றனடிமைத்திறமேயன்பாகி
சித்தர்சித்தம்வைத்தபுகழ்ச்சிறுவனூரனொண்டமிழ்கள்
பத்தும்பாடியாடுவார்பரமனடியேபணிவாரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கடவூர்மயானம். பண்-பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மருவார்கொன்றைமதிசூடிமாணிக்கத்தின்மலைபோல
வருவார்விடைமேல்மாதொடுமகிழ்ந்துபூதப்படைசூழத்
திருமால்பிரமனிந்திரற்குந்தேவர்நாகர்தானவர்க்கும்
பெருமான்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (க)

விண்ணோர்தலைவர்வெண்புரிநூல்மார்பர்வேதகீதத்தர்
கண்ணார்நுதலர்நகுதலையர்காலகாலர்கடவூரர்
எண்ணார்புரமூன்றெரிசெய்தவிறைவருமையோரொருபாகம்
பெண்ணாணவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (உ)

காயும்புலியினதளுடையர்கண்டரெண்டோட்கடவூரர்
தாயுந்தந்தைபல்லுயிர்க்குந்தாமேயாயதலைவனார்
பாயும்விடையொன்றதுவேறிப்பலிதேர்ந்துண்ணும்பரமேட்டி
பேய்கள்வாழுமயானத்துப்பெரியபெருமானடிகளே. (ந)

நறைசேர்மலரைங்கணையானைநயனத்தீயாற்பொடிசெய்த
இறையாராவரெல்லார்க்குமில்லையென்னாதருள்செய்வார்
பறையார்முழவம்பாட்டோடுபயிலுந்தொண்டர்பயில்கடவூர்ப்
பிறையார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (ச)

தொடுத்தார்கொன்றைமதிசூடிக்கோள்நாகங்கள்பூணாக
மத்தயானையுரிபோர்த்துமருப்புமாமைத்தாலியார்
பத்திசெய்துபாரிடங்கள்பாடியாடப்பலிகொள்ளும்
பித்தர்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (ரு)

துணிவார்கீளுங்கோவணமுந்துதைந்துசுடலைப்பொடியணிந்து
பணிமேலிட்டபாசுபதர்பஞ்சவடிமார்பினர்கடவூர்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணிவார்குழையார்புரமூன்றுந்தீவாய்ப்படுத்தசேவகனார்
பிணிவாசசடையர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௬)

காரார்கடலினஞ்சுண்டகண்டர்கடவூருறைவாணர்
தேராரரக்கன்போய்வீழ்ந்துசிதையவிரலாலூன்றினார்
ஊர்தானாவதிலகேழுமுடையார்கொற்றியூராரூர்
பேராயிரவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௭)

வாடாமுலையாள்தன்னோடுமகிழ்ந்துகானில்வேடுவனாய்க்
கோடார்கேழற்பின்சென்றுகுறுகிவிசயன்றவமழித்து
நாடாவண்ணஞ்செருச்செய்துயாவராலுநிலையருள்செய்
பீடார்சடையர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௮)

வேழமுரிப்பர்மழுவாளர்வேள்வியழிப்பர்சிரமறுப்பர்
ஆழியளிப்பாரிதனக்கன்றானைந்துகப்பாறமுரைப்பர்
எழைத்தலைவர்கடவூரிலிறைவர்சிறுமான்மறிக்கையர்
பேழைச்சடையர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௯)

மாடமல்குகடவூரில்மறையோரேத்துமயானத்துப்
பீடைதீரவடியாருக்கருளும்பெருமானடிகள்சீர்
நாடிநாவலாரூரன்நம்பிசொன்னநற்றமிழ்கள்
பாடுமடியார்கேட்பார்மேற்பாவமானபறையுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்புன்கூர். பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அந்தணாளனுன்னடைக்கலம்புகுதவவனைக்காப்பதுகாரணமாக, வந்தகா
லன்றனாருயிரதனைவவ்வினாய்க்குன்றன்வண்மைகண்டடியே, னெந்தைநீ
யெனைநமன்றமர்நலியிலிவன்மற்றென்னடியானெனவிலக்குஞ், சிந்தையால்
வந்துன்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௧)

வையகமுற்றுமாமழைமறந்துவயலினீரிலைமாநிலந்தருகோ, முய்யக்
கொள்கமற்றெங்களையென்ன வொளிகொள் வெண்முகிலாய்ப்பரந்தெங்கும்,
பெய்யுமாமழைப்பெருவெள்ளந்தவிர்த்துப்பெயர்த்தும்பன்னிருவேலிகொண்
டருளுஞ், செய்கைகண்டுநின்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்
கூருளானே. (௨)

ஏதநன்னிலமீரறுவேலியேயர்கோனுற்றவிரும்பிணிதவிர்த்துக்
கோதனங்களின்பால்கரந்தாட்டக்கோலவெண்மணற்சிவன்றன்மேற்சென்ற
தாதைதாளறவெறிந்தசண்டிக்குன்சடைமிசைமலரருள்செயக்கண்டு
பூதவாளிநின்பொன்னடியடைந்தேன்பூம்பொழிற்றிருப்புன்கூருளானே. (௩)

நற்றமிழ்வல்லஞானசம்பந்தனாவினுக்கரையனாளைப்போவானுங், கற்றசூத
னற்சாக்கியன்சிலந்திகண்ணப்பன்கணம்புல்லனென்றிவர்கள், குற்றஞ்செய்
யினுங்குணமெனக்கருதுங்கொள்கைகண்டுநின்குரைகழலடைந்தேன், பொற்
றிரண்மணிக்கமலங்கண்மலரும்பொய்கைசூழ்திருப்புன்கூருளானே. (௪)



கோலமால்வரைமத்தெனநாட்டிக்கோளரவுசுற்றிக்கடைந்தெழுந்த
வாலநஞ்சுகண்டவர்மிகவிரியவமரர்கட்கருள்புரிவதுகருதி
நீலமார்கடல்விடந்தனையுண்டுகண்டத்தேவைத்தபித்தநீசெய்த
சீலங்கண்டுநின்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

இயக்கர்கின்னரர்யமனொடுவருணரியங்குதீவளிஞாயிறுதிங்கண், மயக்க
மில்புலிவானரநாகம்வசுக்கள்வானவர்தானவரெல்லா, மயர்ப்பொன்றின்றிநி
ன்றிருவடியதனையர்ச்சித்தார்பெறுமாறருள்கண்டு, திகைப்பொன்றின்றிநின்
றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௬)

போர்த்தநீள்செவியாளரந்தணர்க்குப்பொழில்கொளாலினிழற்கீழறம்புரிந்
து, பார்த்தனுக்கன்றுபாசுபதங்கொடுத்தருளினாய்பண்டுபகீரதன்வேண்ட, வா
ர்த்துவந்திழியும்புனற்கங்கைநங்கையாளைநின்சடைமிசைக்கரந்த, தீர்த்தனே
நின்றன்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௭)

மூவெயில்செற்றஞான்றுய்ந்தமூவரிலிருவர்நின்றிருக்கோயிலின்வாய்தல்
காவலாளரென்றேவியபின்னையொருவனீகரிகாடரங்காக
மானைநோக்கியோர்மாநடமகிழமணிமுழாமுழக்கவருள்செய்த
தேவதேவநின்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

அறிவினான்மிக்கவறுவகைச்சமயமவ்வவர்க்கங்கேயாரருள்புரிந்து
வெறியுமாகடலிலங்கையர்கோனைத்துலங்கமால்வரைக்கீழடர்த்திட்டுக்
குறிகொள்பாடலின்னிசைகேட்டுக்கோலவாளொடுநாளதுகொடுத்த
செறிவுகண்டுநின்றிருவடியடைந்தேன்செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

கம்பமால்களிற்றின்னுரியானைக்காமற்காய்ந்ததோர்கண்ணுடையானைச்,
செம்பொனேயொக்குந்திருவுருவானைச் செழும்பொழிற்றிருப்புன்கூருளா
னை, யும்பராளியையுமையவள்கோனையூரன்வன்றொண்டனுள்ளத்தாலுகந், த
ன்பினாற்சொன்னவருந்தமிழைந்தோடைந்தும்வல்லவரருவினையிலரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாவடுதுறை. பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

கங்கைவார்சடையாய்கணநாதாகாலகாலனேகாமனுக்கனலே
பொங்குமாகடல்விடமிடற்றானேபூதநாதனேபுண்ணியாபுனிதா
செங்கண்மால்விடையாய்தெளிதேனேதீர்த்தனேதிருவாவடுதுறையு
ளங்கணாவெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௧)

மண்ணின்மேன்மயங்கிக்கிடப்பேனைவலியவந்தெனையாண்டுகொண்டானே
கண்ணிலேனுடம்பில்லடுநோயாற்கருத்தழிந்துனக்கேபொறையானேன்
தெண்ணிலாவெறிக்குஞ்சடையானேதேவனேதிருவாவடுதுறையு
ளண்ணலேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௨)

ஒப்பிலாமுலையாளொருபாகாவுத்தமாமத்தமார்தருசடையாய்
முப்புரங்களைத்தீவளைத்தங்கேமூவருக்கருள்செய்யவல்லானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பவானிழற்கீழிருந்தருளுஞ்செல்வனே திருவாவடுதுறையு
ளப்பனேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௩)

கொதியினல்வருகாளிதன்கோபங்குறையவாடியகூத்துடையானே
மதியிலேனுடம்பில்லடுநோயான்மயங்கினேன்மணியேமணவாளா
விதியினலிமையோர்தொழுதேத்தும்விகிர்தனே திருவாவடுதுறையு
ளதிபனேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௪)

வந்தவாளரக்கன்வலிதொலைத்துவாழ்நாள்கொடுத்தாய்வழிமுதலே
வெந்தவெண்பொடிபூசவல்லானேவேடனாய்விசயற்கருள்புரிந்த
விந்துசேகரனேயிமையோர்சீசனே திருவாவடுதுறையு
ளந்தணாவெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௫)

குறைவிலாநிறைவேகுணக்குன்றேகூத்தனேகுழைக்காதுடையானே
யுறவிலேனுனையன்றிமற்றடியேனொருபிழைபொறுத்தாலிழிவுண்டோ
சிறைவண்டார்பொழில்சூழ்திருவாரூர்ச்செம்பொனே திருவாவடுதுறையு
ளறவனேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௬)

வெய்யமாகரியீருரியானேவேங்கையாடையினாய்விதிமுதலே
மெய்யனேயடலாழியன்றரிதான்வேண்டநீகொடுத்தருள்புரிவிகிர்தா
செய்யமேனியனேதிகழொளியேசெங்கணா திருவாவடுதுறையு
ளையனேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௭)

கோதிலாவமுதேயருள்பெருகுகோலமேயிமையோர்தொழுகோவே
பாதிமாதொருகூறுடையானேபசுபதிபரமாபரமேட்டி
தீதிலாமலையேதிருவருள்சேர்சேவகா திருவாவடுதுறையு
ளாதியேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௮)

வானநாடனேவழித்துணைமருந்தேமாசிலாமணியேமறைப்பொருளே
யேனமாவெயிறாமையுமென்புமீடுதாங்கியமார்புடையானே
தேனெய்பாறயிராடுகந்தானேதேவனே திருவாவடுதுறையு
ளானையேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௯)

வெண்டலைப்பிறைகொன்றையுமரவும்வேரிமத்தமும்விரவிமுண்டித்த
விண்டமாமலர்ச்செஞ்சடையானையீசனைத்திருவாவடுதுறையு
ளண்டவாணனைச்சிங்கடியப்பனணுக்கவன்றொண்டனூர்வத்தாலுரைத்த
தண்டமிழ்மலர்பத்தும்வல்லார்கள்சாதலும்பிறப்பும்மறுப்பாரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கேதாரம். பண்-நட்டபாஷை.

திருச்சிற்றம்பலம்.

வாழ்வாவதுமாயம்மிதுமண்ணாவதுதிண்ணம்
பாழ்போவதுபிறவிக்கடல்பசிநோய்செய்தபறிதான்
தாழாதறஞ்செய்மின்றடங்கண்ணான்மலரோனுங்
கீழ்மேலுறநின்றான்றிருக்கேதாரமெனீரே. (௧)



பறியேசுமந்துழல்வீர்பறிநரிகீறுவதறியீர்
குறிகூவியகுற்றங்கொளுகாலந்தமுளவே
யறிவானிலுமறிவானலநறுநீரொடுசோறு
கிறிபேசிநின்றிடுவார்தொழுகேதாரமெனீரே. (௨)

கொம்பைப்பிடித்தொருக்காலர்களிருக்கான்மலர்தூவி
நம்பநமையாள்வானென்றுநடுநாளையும்பகலும்
கம்பக்களிற்றினமாய்நின்றுசுனைநீர்களைத்தூவிச்
செம்பொற்பொடிச்சிந்துந்திருக்கேதாரமெனீரே. (௩)

உழக்கேயுண்டுபடைத்தீட்டிவைத்திழப்பார்களுஞ்சிலர்கள்
வழக்கேயெனிற்பிழைக்கேமென்பர்மதிமாந்தியமாந்தர்
சழக்கேபறிநிறைப்பாரொடுதவமாவதுசெய்மின்
கிழக்கேசலமிடுவார்தொழுகேதாரமெனீரே. (௪)

வாளோடியதடங்கண்ணியர்வலையிலழுந்தாதே
நாளோடியநமனார்தமர்நணுகாமுனநணுகி
யாளாயுய்ம்மினடிகட்கிடமதுவேயெனினிதுவே
கீளோடரவசைத்தானிடங்கேதாரமெனீரே. (௫)

தளிசாலைகடவமாவதுதம்மைப்பெறிலன்றே
குளியீருளங்குருக்கேத்திரங்கோதாவிரிகுமரி
தெளியீருளஞ்சீபர்ப்பதந்தெற்குவடக்காகக்
கிளிவாழையொண்கனிகீறியுண்கேதாரமெனீரே. (௬)

பண்ணின்றமிழிசைபாடலின்பழவேய்முழவதிரக்
கண்ணின்னொளிகனகச்சுனைவயிரம்மவைசொரிய
மண்ணின்றனமதவேழங்கண்மணிவாரிக்கொண்டெறியக்
கிண்ணென்றிசைமுரலுந்திருக்கேதாரமெனீரே. (௭)

முளைக்கைப்பிடிமுகமன்சொலிமுதுவேய்களையிறுத்துத்
துளைக்கைக்களிற்றினமாய்நின்றுசுனைநீர்களைத்தூவி
வளைக்கைப்பொழிமழைகூர்தரமயிர்மான்பிணைநிலத்தைக்
கிளைக்கம்மணிசிந்துந்திருக்கேதாரமெனீரே. (௮)

பொதியேசுமந்துழல்வீர்பொதியவமாவதுமறியீர்
மதிமாந்தியவழியேசென்றுகுழிவீழ்வதும்வினையால்
கதிசூழ்கடலிலங்கைக்கிறைமலங்கவ்வரையடர்த்துக்
கெதிபேறுசெய்திருந்தானிடங்கேதாரமெனீரே. (௯)

நாவின்மிசையரையன்னொடுதமிழ்ஞானசம்பந்தன்
யாவர்சிவனடியார்களுக்கடியானடித்தொண்டன்
தேவன்றிருக்கேதாரத்தையூரன்னுரைசெய்த
பாவின்றமிழ்வல்லார்பரலோகத்திருப்பாரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாரூர். பண்-செந்துருத்தி.

திருச்சிற்றம்பலம்.

மீளாவடிமையுமக்கேயாளாய்ப்பிறரைவேண்டாதே
மூளாத்தீப்போலுள்ளேகனன்றுமுகத்தான்மிகவாடி
யாளாயிருக்குமடியார்தங்களல்லல்சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர்திருவாரூரில்வாழ்ந்துபோதீரே. (௧)

விற்றுக்கொள்வீரொற்றியல்லேன்விரும்பியாட்பட்டேன்
குற்றமொன்றுஞ்செய்ததில்லைக்கொத்தையாக்கினீ
ரெற்றுக்கடிகேளென்கண்கொண்டீர்நீரேபழிபட்டீர்
மற்றைக்கண்டான்றாராதொழிந்தால்வாழ்ந்துபோதீரே. (௨)

அன்றின்முட்டாதடையுஞ்சோலையாரூரகத்தீரே
கன்றுமுட்டியுண்ணச்சுரந்தகாலியவைபோல
வென்றுமுட்டாப்பாடுமடியார்தங்கண்காணாது
குன்றின்முட்டிக்குழியில்விழுந்தால்வாழ்ந்துபோதீரே. (௩)

துருத்தியுறைவீர்பழனம்பதியாச்சோற்றுத்துறையாள்வீ
ரிருக்கைதிருவாரூரேயுடையீர்மனமேயெனவேண்டா
வருத்தியுடையவடியார்தங்களல்லல்சொன்னக்கால்
வருத்திவைத்துமறுமைப்பணித்தால்வாழ்ந்துபோதீரே. (௪)

செந்தண்பவளந்திகழுஞ்சோலையிதுவோதிருவாரூ
ரெந்தமடிகேளிதுவேயாமாறுமக்காட்பட்டோர்க்குச்
சந்தம்பலவும்பாடுமடியார்தங்கண்காணாது
வந்தெம்பெருமான்முறையோவென்றால்வாழ்ந்துபோதீரே. (௫)

தினைத்தாளன்னசெங்காணாரைசேருந்திருவாரூர்ப்
புனைத்தார்கொன்றைப்பொன்போன்மாலைப்புரியின்சடையீரே
தனத்தாலின்றித்தாந்தாமெலிந்துதங்கண்காணாது
மனத்தால்வாடியடியாரிருந்தால்வாழ்ந்துபோதீரே. (௬)

ஆயம்பேடையடையுஞ்சோலையாரூரகத்தீரே
யேயம்பெருமானிதுவேயாமாறுமக்காட்பட்டோர்க்கு
மாயங்காட்டிப்பிறவிகாட்டிமறவாமனங்காட்டிக்
காயங்காட்டிக்கண்ணீர்கொண்டால்வாழ்ந்துபோதீரே. (௭)

கழியாய்க்கடலாய்க்கலனாய்நிலனாய்க்கலந்தசொல்லாகி
யிழியாக்குலத்திற்பிறந்தோமும்மையிகழாதேத்துவோம்
பழிதானாவதறியீரடிகேள்பாடும்பத்தரோம்
வழிதான்காணாதலமந்திருந்தால்வாழ்ந்துபோதீரே. (௮)

பேயோடேனும்பிரிவொன்றின்னாதென்பர்பிறரெல்லாங்
காய்தான்வேண்டிற்கனிதானன்றோகருதிக்கொண்டக்கா
னாய்தான்போலநடுவேதிரிந்துமக்காட்பட்டோர்க்கு
வாய்தான்றிறவீர்திருவாரூரில்வாழ்ந்துபோதீரே. (௯)



செருந்திச்செம்பொன்மலருஞ்சோலையிதுவோதிருவாரூர்
பொருந்தித்திருமூலத்தானமேயிடமாக்கொண்டீரே
யிருந்துநின்றுங்கிடந்துமும்மையிகழாதேத்துவோம்
வருந்திவந்துமக்கொன்றுரைத்தால்வாழ்ந்துபோதீரே. (௧௦)

காரூர்கண்டத்தெண்டோண்முக்கண்கலைகள்பலவாகி
யாரூர்திருமூலத்தானத்தேயடிப்பேராரூரன்
பாரூரறியவென்கண்கொண்டீர்நீரேபழிபட்டீர்
வாரூர்முலையாள்பாகங்கொண்டீர்வாழ்ந்துபோதீரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருநொடித்தான்மலை. பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தானெனைமுன்படைத்தானதறிந்துதன்பொன்னடிக்கே
நானென்பாடலந்தோநாயினேனைப்பொருட்படுத்து
வானெனைவந்தெதிர்கொள்ளமத்தயானையருள்புரிந்து
ஊனுயிர்வேறுசெய்தானொடித்தான்மலையுத்தமனே. (௧)

ஆனையுரித்தபகையடியேனொடுமீளக்கொல்லோ
ஆனையுயிர்வெருட்டியொள்ளரியானைநினைந்திருந்தேன்
வானைமதித்தமரர்வலஞ்செய்தெனையேறவைக்க
வானையருள்புரிந்தானொடித்தான்மலையுத்தமனே. (௨)

மந்திரமொன்றறியேன்மனைவாழ்க்கைமகிழ்ந்தடியேன்
சுந்தரவேடங்களாற்றுரிசேசெய்குந்தொண்டனெனை
யந்தரமால்விசும்பிலழகானைமருள்புரிந்த
துந்தரமோநெஞ்சமேநொடித்தான்மலையுத்தனே. (௩)

வாழ்வையுகந்தநெஞ்சமடவார்தங்கள்வல்வினைப்பட்
டாழமுகந்தவென்னையதுமாற்றியமரரெல்லாஞ்
சூழவருள்புரிந்துதொண்டனேன்பரமல்லதொரு
வேழமருள்புரிந்தானொடித்தான்மலையுத்தமனே. (௪)

மண்ணுலகிற்பிறந்துநும்மைவாழ்த்தும்வழியடியார்
பொன்னுலகம்பெறுதறொண்டனேனின்றுகண்டொழிந்தேன்
விண்ணுலகத்தவர்கள்விரும்பவெள்ளையானையின்மே
லென்னுடல்காட்டுவித்தானொடித்தான்மலையுத்தமனே. (௫)

அஞ்சினையொன்றிநின்றுஅலர்கொண்டடிசேர்வறியா
வஞ்சனையென்மனமேவைகிவானநன்னாடர்முன்னே
துஞ்சுதன்மாற்றுவித்துத்தொண்டனேன்பரமல்லதொரு
வெஞ்சினவானைதந்தானொடித்தான்மலையுத்தமனே. (௬)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகெடவிண்ணதிரநிலமெங்குமதிர்ந்தசைய
மலையிடையானையேறிவழியேவருவேனெதிரே
யலைகடலாலரயனவர்கொண்டுமுன்வந்திறைஞ்சும்
உலையணையாதவண்ணநொடித்தான்மலையுத்தமனே. (௭)

அரவொலியாகமங்களறிவாரறிதோத்திரங்கள்
விரவியவேதவொலிவிண்ணெலாம்வந்தெதிர்ந்திசைப்ப
வரமலிவாணன்வந்துவழிதந்தொத்தேறுவதோர்
சிரமலியானைதந்தானொடித்தான்மலையுத்தமனே. (௮)

இந்திரன்மால்பிரமனெழிலார்மிகுதேவரெல்லாம்
வந்தெதிர்கொள்ளவென்னைமத்தயானையருள்புரிந்து
மந்திரமாமுனிவரிவனாரெனவெம்பெருமா
னந்தமாரூரனென்றானொடித்தான்மலையுத்தமனே. (௯)

ஊழிதோறூழிமுற்றுமுயர்பொன்னொடித்தான்மலையைச்
சூழிசையின்கரும்பின்சுவைநாவலவூரன்சொன்ன
வேழிசையின்றமிழாலிசைந்தேத்தியபத்தினையு
மாழிகடலரையாவஞ்சையப்பர்க்கறிவிப்பதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த

# திருவாசகம்.

## திருச்சதகம்.

பத்திவைராக்கியவிசித்திரம்.

மெய்தானரும்பிவிதிர்விதிர்த்துன்விரையார்கழற்கென்
கைதான்றலைவைத்துக்கண்ணீர்ததும்பிவெதும்பியுள்ளம்
பொய்தான்றவிர்ந்துன்னைப்போற்றிசயசயபோற்றியென்னுங்
கைதானெகிழவிடேனுடையாயென்னைக்கண்டுகொள்ளே. (௧)

கொள்ளேன்புரந்தரன்மாலயன்வாழ்வுகுடிகெடினு
நள்ளேனினதடியாரொடல்லானரகம்புகினு
மெள்ளேன்றிருவருளாலேயிருக்கப்பெறினிறைவா
வுள்ளேன்பிறதெய்வமுன்னையல்லாதெங்களுத்தமனே. (௨)

உத்தமனத்தனுடையானடியேநினைந்துருகி
மத்தமனத்தொடுமாலிவனென்னமனநினைவி
லொத்தனவொத்தனசொல்லிடவூரூர்திரிந்தெவருந்
தத்தமனத்தனபேசவெஞ்ஞான்றுகொல்சாவதுவே. (௩)

சாவமுன்னாட்டக்கன்வேள்வித்தகர்தின்றுநஞ்சமஞ்சி
யாவவெந்தாயென்றவிதாவிடுநம்மவரவரே
மூவரென்றேயெம்பிரானொடுமெண்ணிவிண்ணாண்டுமண்மேற்
றேவரென்றேயிறுமாந்தென்னபாவந்திரிதவரே. (௪)

தவமேபுரிந்திலன்றண்மலரிட்டுமுட்டாதிறைஞ்சே
னவமேபிறந்தவருவினையேனுனக்கன்பருள்ளாஞ்
சிவமேபெறுந்திருவெய்திற்றிலேனின்றிருவடிக்காம்
பவமேயருளுகண்டாயடியேற்கெம்பரம்பரனே. (௫)

பரந்துபல்லாய்மலரிட்டுமுட்டாதடியேயிறைஞ்சி
யிரந்தவெல்லாமெமக்கேபெறலாமென்னுமன்பருள்ளங்
கரந்துநில்லாக்கள்வனேநின்றன்வார்கழற்கன்பெனக்கு
நிரந்தரமாயருளாய்நின்னையேத்தமுழுவதுமே. (௬)

முழுவதுங்கண்டவனைப்படைத்தான்முடிசாய்த்துமுன்னாட்
செழுமலர்கொண்டெங்குந்தேடவப்பாலனிப்பாலெம்பிரான்
கழுதொடுகாட்டிடைநாடகமாடிக்கதியிலியா
யுழுவையின்றோலுடுத்துன்மத்தமேல்கொண்டுழிதருமே. (௭)

உழிதருகாலுங்கனலும்புனலொடுமண்ணும்விண்ணு
மிழிதருகாலமெக்காலம்வருவதுவந்ததற்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழிதருகாலத்தவுன்னடியேன்செய்தவல்வினையைக்
கழிதருகாலமுமாயவைகாத்தெம்மைக்காப்பவனே. (௮)

பவனெம்பிரான்பனிமாமதிக்கண்ணிவிண்ணோர்பெருமான்
சிவனெம்பிரானென்னையாண்டுகொண்டானென்சிறுமைகண்டு
மவனெம்பிரானென்னசானடியேனென்னவிப்பரிசே
புவனெம்பிரான்றெரியும்பரிசாவதியம்புகவே. (௯)

புகவேதகேனுனக்கன்பருள்யானென்பொல்லாமணியே
தகவேயெனையுனக்காட்கொண்டதன்மையெப்புன்மையரை
மிகவேயுயர்த்திவிண்ணோரைப்பணித்தியண்ணாவமுதே
நகவேதகுமெம்பிரானென்னைநீசெய்தநாடகமே. (௧௦)

---

## காருணியத்திரங்கல்.

தரிக்கிலேன்காயவாழ்க்கைசங்கராபோற்றிவான
விருத்தனேபோற்றியெங்கள்விடலையேபோற்றியொப்பி
லொருத்தனேபோற்றியும்பர்தம்பிரான்போற்றிதில்லை
நிருத்தனேபோற்றியெங்கணின்மலாபோற்றிபோற்றி. (௧)

போற்றியோநமச்சிவாயபுயங்கனேமயங்குகின்றேன்
போற்றியோநமச்சிவாயபுகலிடம்பிறிதொன்றில்லை
போற்றியோநமச்சிவாயபுறமெனைப்போக்கல்கண்டாய்
போற்றியோநமச்சிவாயசயசயபோற்றிபோற்றி. (௨)

போற்றியென்போலும்பொய்யர்தம்மையாட்கொள்ளும்வள்ளல்
போற்றிநின்பாதம்போற்றிநாதனேபோற்றிபோற்றி
போற்றிநின்கருணைவெள்ளப்புதுமதுப்புவனநீர்தீக்
காற்றியமானன்வானமிருசுடர்க்கடவுளானே. (௩)

கடவுளேபோற்றியென்னைக்கண்டுகொண்டருளுபோற்றி
விடவுளேயுருக்கியென்னையாண்டிடவேண்டும்போற்றி
யுடலிதுகளைந்திட்டொல்லையும்பர்தந்தருளுபோற்றி
சடையுளேகங்கைவைத்தசங்கராபோற்றிபோற்றி. (௪)

சங்கராபோற்றிமற்றோர்சரணிலேன்போற்றிகோலப்
பொங்கராவல்குற்செவ்வாய்வெண்ணகைக்கரியவாட்கண்
மங்கையோர்பங்கபோற்றிமால்விடையூர்திபோற்றி
யிங்கிவாழ்வாற்றகில்லேனெம்பிரானிழித்திட்டேனே. (௫)

இழித்தனனென்னையானேயெம்பிரான்போற்றிபோற்றி
பழித்திலேனுன்னையென்னையாளுடைப்பாதம்போற்றி
பிழைத்தவைபொறுக்கையெல்லாம்பெரியவர்கடமைபோற்றி
யொழித்திடிவ்வாழ்வுபோற்றியும்பர்நாட்டெம்பிரானே. (௬)

எம்பிரான்போற்றிவானத்தவரவரேறுபோற்றி
கொம்பரார்மருங்குன்மங்கைகூறவெண்ணீறபோற்றி
செம்பிரான்போற்றிதில்லைத்திருச்சிற்றம்பலவபோற்றி
யும்பராபோற்றியென்னையாளுடையொருவபோற்றி. (௭)



ஒருவனேபோற்றியொப்பிலப்பனேபோற்றிவானோர்
குருவனேபோற்றியெங்கள்கோமளக்கொழுந்துபோற்றி
வருகவென்றென்னைநின்பால்வாங்கிடவேண்டும்போற்றி
தருகநின்பாதம்போற்றிதமியனேன்றனிமைதீர்த்தே. (௮)

தீர்ந்தவன்பாயவன்பர்க்கவரினுமன்பபோற்றி
பேர்ந்துமென்பொய்ம்மையாட்கொண்டருளிடும்பெருமைபோற்றி
வார்ந்தநஞ்சயின்றுவானோர்க்கமுதமீவள்ளல்போற்றி
யார்ந்தநின்பாதநாயேற்கருளிடவேண்டும்போற்றி. (௯)

போற்றியிப்புவனநீர்தீக்காலொடுவானமானாய்
போற்றியெவ்வுயிர்க்குந்தோற்றமாகிநீதோற்றமில்லாய்
போற்றியெல்லாவுயிர்க்குமீறாயீறின்மையானாய்
போற்றியைம்புலன்கணின்னைப்புணர்கிலாப்புணர்க்கையானே. (௧௦)

---

## ஆனந்தாதீதம்.

மாறிலாதமாக்கருணைவெள்ளமேவந்துமுந்திநின்மலர்கொடாளினை
வேறிலாப்பதப்பரிசுபெற்றநின்மெய்ம்மையன்பருன்மெய்ம்மைமேவினார்
ஈறிலாதநீயெளியையாகிவந்தொளிசெய்மானுடமாகநோக்கியுங்
கீறிலாதநெஞ்சுடையனாயினேன்கடையனாயினேன்பட்டகீழ்மையே. (௧)

மையிலங்குநற்கண்ணிபங்கனேவந்தெனைப்பணிகொண்டபின்மழக்
கையிலங்குபொற்கிண்ணமென்றலாலரியையென்றுனைக்கருதுகின்றிலேன்
மெய்யிலங்குவெண்ணீற்றுமேனியாய்மெய்ம்மையன்பருன்மெய்ம்மைமேவினார்
பொய்யிலங்கெனைப்புகுதவிட்டுநீபோவதோசொலாய்பொருத்தமாவதே. (௨)

பொருத்தமின்மையேன்பொய்ம்மையுண்மையேன்போதவென்றெனைப்
புரிந்துநோக்கவும், வருத்தமின்மையேன்வஞ்சமுண்மையேன்மாண்டிலேன்
மலர்க்கமலபாதனே, யரத்தமேனியாயருள்செயன்பருநீயுமங்கெழுந்தருளியிங்
கெனை, யிருத்தினாய்முறையோவெனெம்பிரான் வம்பனேன்வினைக்கிறுதி
யில்லையே. (௩)

இல்லைநின்கழற்கன்பதென்கணேயேலமேலுநற்குழலிபங்கனே
கல்லைமென்கனியாக்கும்விச்சைகொண்டென்னைநின்கழற்கன்பனாக்கினா
யெல்லையில்லைநின்கருணையெம்பிரானேதுகொண்டுநானேதுசெய்யினும்
வல்லையேயெனக்கின்னுமுன்கழல்காட்டிமீட்கவும்மறுவில்வானனே. (௪)

வானநாடருமறியொணாதநீமறையில்ஈறுமுன்றொடொணாதநீ
யேனைநாடருந்தெரியொணாதநீயென்னையின்னிதாயாண்டுகொண்டவா
ஊனைநாடகமாடுவித்தவாவுருகிநானுனைப்பருகவைத்தவா
ஞானநாடகமாடுவித்தவாநைவையகத்துடையவிச்சையே. (௫)

விச்சதின்றியேவிளைவுசெய்குவாய்விண்ணுமண்ணகமுழுதும்யாவையும்
வைச்சுவாங்குவாய்வஞ்சகப்பெரும்புலையனேனையுன்கோயில்வாயிலிற்
பிச்சனாக்கினாய்பெரியவன்பருக்குரியனாக்கினாய்தாம்வளர்த்ததோர்
நச்சுமாமரமாயினுங்கொலார்நானுமங்ஙனேயுடையநாதனே. (௬)

உடையநாதனேபோற்றிநின்னலாற்பற்றுமற்றெனக்காவதொன்றினி,
யுடையனோபணிபோற்றியும்பரார்தம்பராபராபோற்றியாரினுங், கடையனாயி

2966

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னேன்போற்றியென்பெருங்கருணையாளனேபோற்றியென்னைநின், னடிய
னாக்கினாய்போற்றியாதியுமந்தமாயினாய்போற்றியப்பனே. (௭)

அப்பனேயெனக்கமுதனேயானந்தனேயகநெகவள்ளூறுதே
னொப்பனேயுனக்குரியவன்பரிலுரியனாயுனைப்பருகநின்றதோர்
துப்பனேசுடர்முடியனேதுணையாளனேதொழும்பாளரெய்ப்பினில்
வைப்பனேயெனைவைப்பதோசொலாய்நையவையகத்தெங்கண்மன்னனே. (௮)

மன்னவெம்பிரான்வருகவென்னெனைமாலுநான்முகத்தொருவன்யாரினு
முன்னவெம்பிரான்வருகவென்னெனைமுழுதும்யாவையுமிறுதியுற்றநாட்
பின்னவெம்பிரான்வருகவென்னெனைப்பெய்கழற்கணன்பாயெனாவினாற்
பன்னவெம்பிரான்வருகவென்னெனைப்பாவநாசநின்சீர்கள்பாடவே. (௯)

பாடவேண்டுநான்போற்றிநின்னையேபாடிநைந்துநைந்துருகிநெக்குநெக்
காடவேண்டுநான்போற்றியம்பலத்தாடுநின்கழற்போதுநாயினேன்
கூடவேண்டுநான்போற்றியிப்புழுக்கூடுநீக்கெனைப்போற்றிபொய்யெலாம்
வீடவேண்டுநான்போற்றிவீடுதந்தருளுபோற்றிநின்மெய்யர்மெய்யனே. (௧0)

## நீத்தல் விண்ணப்பம்.

### பிரபஞ்சவைராக்கியம்.

கடையவனேனைக்கருணையினாற்கலந்தாண்டுகொண்ட
விடையவனேவிட்டிடுதிகண்டாய்விறல்வேங்கையின்றோ
லுடையவனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
சடையவனேதளர்ந்தேனெம்பிரானென்னைத்தாங்கிக்கொள்ளே. (௧)

கொள்ளேர்பிளவகலாத்தடங்கொங்கையர்கொவ்வைச்செவ்வாய்
விள்ளேனெனினும்விடுதிகண்டாய்நின்விழுத்தொழும்பி
னுள்ளேன்புறமல்லேனுத்தரகோசமங்கைக்கரசே
கள்ளேனொழியவுங்கண்டுகொண்டாண்டதெக்காரணமே. (௨)

காருறுகண்ணியரைம்புலனாற்றங்கரைமரமாய்
வேருறுவேனைவிடுதிகண்டாய்விளங்குந்திருவா
ரூருறைவாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
வாருறுபூண்முலையாள்பங்கவென்னைவளர்ப்பவனே. (௩)

வளர்கின்றநின்கருணைக்கையில்வாங்கவுநீங்கியிப்பான்
மிளிர்கின்றவென்னைவிடுதிகண்டாய்வெண்மதிக்கொழுந்தொன்
றொளிர்கின்றநீண்முடியுத்தரகோசமங்கைக்கரசே
தெளிகின்றபொன்னுமின்னுமன்னதோற்றச்செழுஞ்சுடரே. (௪)

செழிகின்றதீப்புகுவிட்டிலிற்சின்மொழியாரிற்பன்னாள்
விழுகின்றவென்னைவிடுதிகண்டாய்வெறிவாயறுகா
லுழுகின்றபூமுடியுத்தரகோசமங்கைக்கரசே
வழிநின்றுநின்னருளாரமுதூட்டமறுத்தனனே. (௫)

மறுத்தனன்யானுன்னருளறியாமையிலென்மணியே
வெறுத்தெனைநீவிட்டிடுதிகண்டாய்வினையின்றொகுதி
யொறுத்தெனையாண்டுகொளுத்தரகோசமங்கைக்கரசே
பொறுப்பரன்றேபெரியோர்சிறுநாய்கடம்பொய்யினையே. (௬)



பொய்யவனேனைப்பொருளெனவாண்டொன்றுபொத்திக்கொண்ட
மெய்யவனேவிட்டிடுதிகண்டாய்விடமுண்மிடற்று
மையவனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
செய்யவனேசிவனேசிறியேன்பவந்தீர்ப்பவனே. (௭)

தீர்க்கின்றவாறென்பிழையைநின்சீரருளென்கொலென்று
வேர்க்கின்றவென்னைவிடுதிகண்டாய்விரவார்வெருவ
வார்க்கின்றதார்விடையுத்தரகோசமங்கைக்கரசே
யீர்க்கின்றவஞ்சொடச்சம்வினையேனையிருதலையே. (௮)

இருதலைக்கொள்ளியினுள்ளெறும்பொத்துநினைப்பிரிந்த
விரிதலையேனைவிடுதிகண்டாய்வியன்மூவுலகுக்
கொருதலைவாமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
பொருதலைமூவிலைவேல்வலனேந்திப்பொலிபவனே. (௯)

பொலிகின்றநின்றாள்புகுதப்பெற்றாக்கையைப்போக்கப்பெற்று
மெலிகின்றவென்னைவிடுதிகண்டாயளிதேர்விளரி
யொலிகின்றபூம்பொழிலுத்தரகோசமங்கைக்கரசே
வலிநின்றதிண்சிலையாலெரித்தாய்புரமாறுபட்டே. (௧0)

## திருவெம்பாவை.

### சத்தியைவியந்தது.

ஆதியுமந்தமுமில்லாவரும்பெருஞ் சோதியையாம்பாடக்கேட்டேயும்
வாட்டடங்கண், மாதேவளருதியோவன்செவியோநின்செவிதான் மாதேவன்
வார்கழல்கள்வாழ்த்தியவாழ்த்தொலிபோய், வீதிவாய்க்கேட்டலுமேவிம்மிவி
ம்மிமெய்மறந்துபோதாரமளியின்மேனின்றும்புரண்டிங்ங, னேதேனுமாகாள்
கிடந்தாளென்னேயென்னே யீதேயெந்தோழிபரிசேலோரெம்பாவாய். (௧)

பாசம்பரஞ்சோதிக்கென்பாயிராப்பகனாம் பேசும்போதெப்போதிப்போ
தாரமளிக்கே, நேசமும்வைத்தனையோநேரிழையாய்நேரிழையீர் சீசியிவையுஞ்
சிலவோவிளையாடி, யேசுமிடமீதோவிண்ணோர்களேத்துதற்குக்கூசுமலர்ப்பா
தந்தந்தருளவந்தருளுந், தேசன்சிவலோகன்றில்லைச்சிற்றம்பலத்து ளீசனார்க்
கன்பாரியாமாரேலோரெம்பாவாய். (௨)

முத்தன்னவெண்ணகையாய்முன்வந்தெதிரெழுந்தெ னத்தனானந்தன
முதனென்றள்ளூறித், தித்திக்கப்பேசுவாய்வந்துன்கடைதிறவாய் பத்துடை
யீரீசன்பழவடியீர்பாங்குடையீர், புத்தடியோம்புன்மைதீர்த்தாட்கொண்டாற்
பொல்லாதோவெத்தோநின்னன்புடைமையெல்லோமறியோமோ, சித்தமழகி
யார்பாடாரோநஞ்சிவனை யித்தனையும்வேண்டுமெமக்கேலோரெம்பாவாய். (௩)

ஒண்ணித்திலநகையாயின்னம்புலர்ந்தின்றோ வண்ணக்கிளிமொழியா
ரெல்லாரும்வந்தாரோ, எண்ணிக்கொடுள்ளவாசொல்லுகோமவ்வளவுங் கண்
ணைத்துயின்றவமேகாலத்தைப்போக்காதே, விண்ணுக்கொருமருந்தைவேதவி
ழுப்பொருளைக் கண்ணுக்கினியானைப்பாடிக்கசிந்துள்ள, முண்ணெக்குநின்று
ருகயாமாட்டோநீயேவந் தெண்ணிக்குறையிற்றுயிலேலோரெம்பாவாய். (௪)

மாலறியாநான்முகனுங்காணாமலையினைநாம் போலறிவோமென்றுள்ள
பொக்கங்களேபேசும், பாலூறுதேன்வாய்ப்படிறீகடைதிறவாய் ஞாலமேவிண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணேபிறவேயறிவரியான், கோலமுநம்மையாட்கொண்டருளிக்கோதாட்டுஞ் சீலமும்பாடிச்சிவனேசிவனேயென், றோலமிடினுமுணராயுணராய்கா ணேலக்குழலிபரிசேலோரெம்பாவாய். (௫)

மானேநீநென்னலைநாளைவந்துங்களை நானேயெழுப்புவனென்றலுநா ணாமே, போனதிசைபகராயின்னம்புலர்ந்தின்றோ வானேநிலனேபிறவேயறி வரியான், றானேவந்தெம்மைத்தலையளித்தாட்கொண்டருளும் வான்வார்கழல் பாடிவந்தோர்க்குன்வாய்திறவா, யூனேயுருகாயுனக்கேயுறுமெமக்கு மேனோர்க் குந்தங்கோனைப்பாடேலோரெம்பாவாய். (௬)

அன்னேயிவையுஞ்சிலவோபலவமரருன்னற்கரியானொருவனிருஞ்சீ ரான், சின்னங்கள்கேட்பச்சிவனென்றேவாய்திறப்பாய் தென்னாவென்னாமு ன்னந்தீசேர்மெழுகொப்பாய், என்னானையென்னரையனின்னமுதென்றெல் லோமுஞ்சொன்னோங்கேள்வெவ்வேறாயின்னந்துயிலுதியோ, வன்னெஞ்சப் பேதையர்போல்வாளாகிடத்தியால் என்னே துயிலின்பரிசேலோரெம்பாவாய்.

கோழிசிலம்பச்சிலம்புங்குருகெங்கு மேழிலியம்பவியம்பும்வெண்சங் கெங்கும், கேழில்பரஞ்சோதிகேழில்பரங்கருணை கேழில்விழுப்பொருள்கள் பாடினோங்கேட்டிலையோ, வாழியீதென்னவுறக்கமோவாய்திறவா யாழியானா ன்புடைமையாமாறுமிவ்வாறோ, வூழிமுதல்வனாய்நின்றவொருவனை யேழை பங்காளனையேபாடேலோரெம்பாவாய். (௮)

முன்னைப்பழம்பொருட்குமுன்னைப்பழம்பொருளே பின்னைப்புதுமை க்கும்பேர்த்துமப்பெற்றியனே, யுன்னைப்பிரானாகப்பெற்றவுன்சீரடியோமுன் னடியார்தாள்பணிவோமாங்கவர்க்கேபாங்காவோ, மன்னவரேயெங்கணவரா வாரவருகந்து சொன்னபரிசேதொழும்பாய்ப்பணிசெய்வோ, மின்னவகையே யெமக்கெங்கோனல்குதியே லென்னகுறையுமிலோமேலோரெம்பாவாய் (௯)

பாதாளமேழினுங்கீழ்சொற்கழிவுபாதமலர் போதார்புனைமுடியுமெல்லா ப்பொருண்முடிவே, பேதையொருபாற்றிருமேனியொன்றல்லன் வேதமுதல் விண்ணோருமண்ணுந்துதித்தாலு, மோதவுலவாவொருதோழன்றொண்டரு ளன் கோதில்குலத்தான்றன்கோயிற்பிணாப்பிள்ளைகாள், ஏதவனூரேதவன் பேராருற்றாராரயலா ரேதவனைப்பாடும்பரிசேலோரெம்பாவாய். (௧௦)

மொய்யார்தடம்பொய்கைபுக்குமுகேரென்னக் கையாற்குடைந்துகுடை ந்துன்கழல்பாடி, யையாவழியடியோம்வாழ்ந்தோங்காணாரழல்போற் செய்யா வெண்ணீறாடிசெல்வாசிறுமருங்குன், மையார்தடங்கண்மடந்தைமணவாளா வையாநீயாட்கொண்டருளும்விளையாட்டி, னுய்வார்களுய்யும்வகையெல்லாமு ய்ந்தொழிந்தோ மெய்யாமற்காப்பாயெமையேலோரெம்பாவாய். (௧௧)

ஆர்த்தபிறவித்துயர்கெடநாமார்த்தாடுந் தீர்த்தனற்றில்லைச்சிற்றம்பலத் தேதீயாடுங், கூத்தனிவ்வானுங்குவலயமுமெல்லோமுங் காத்தும்படைத்துங் கரந்தும்விளையாடி, வார்த்தையும்பேசிவளைசிலம்பவார்கலைகளார்ப்பரவஞ்செய் யவணிகுழன்மேல்வண்டார்ப்பப், பூத்திகழும்பொய்கைகுடைந்துடையான் பொற்பாதமேத்தியிருஞ்சுனைநீராடேலோரெம்பாவாய். (௧௨)

பைங்குவளைக்கார்மலராற்செங்கமலப்பைம்போதா லங்கங்குருகினத்தாற் பின்னுமரவத்தாற், றங்கண்மலங்கழுவுவார்வந்துசார்தலினா லெங்கள்பிராட்டி யுமெங்கோனும்போன்றிசைந்த, பொங்குமடுவிற்புகப்பாய்ந்துபாய்ந்துநஞ் சங் கஞ்சிலம்பச்சிலம்புகலந்தார்ப்பக், கொங்கைகள்பொங்கக்குடையும்புனல்பொங் கப் பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். (௧௩)



காதார்குழையாடப்பைம்பூண்கலனாடக் கோதைகுழலாடவண்டின்குழா மாடச், சீதப்புனலாடிச்சிற்றம்பலம்பாடி வேதப்பொருள்பாடியப்பொருளாமா பாடிச், சோதித்திறம்பாடிச்சூழ்கொன்றைத்தார்பாடி யாதித்திறம்பாடியந்தமாமா பாடிப், பேதித்துநம்மைவளர்த்தெடுத்தபெய்வளைதன் பாதத்திறம்பாடியாடே லோரெம்பாவாய். (௧௪)

ஓரொருகாலெம்பெருமானென்றென்றே நம்பெருமான் சீரொருகால் வாயோவாள்சித்தங்களிகூர, நீரொருகாலோவாநெடுந்தாரைகண்பனிப்பப் பா ரொருகால்வந்தனையாள்விண்ணோரைத்தான்பணியாள், பேரரையற்கிங்ஙனே பித்தொருவராமாறு மாரொருவரிவ்வண்ணமாட்கொள்ளும்வித்தகர்தாள், வா ருருவப்பூண்முலையீர்வாயாரநாம்பாடி யேருருவப்பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய். (௧௫)

முன்னிக்கடலைச்சுருக்கியெழுந்துடையா ளென்னத்திகழ்ந்தெம்மையா ளுடையாளிட்டிடையின், மின்னிப்பொலிந்தெம்பிராட்டி திருவடிமேற் பொ ன்னஞ்சிலம்பிற் சிலம்பித்திருப்புருவ, மென்னச்சிலைகுலவி நந்தம்மையாளு டையாள்தன்னிற்பிரிவிலாவெங்கோமானன்பர்க்கு, முன்னியவணமக்குமுன் சுரக்குமின்னருளே யென்னப்பொழியாய்மழையேலோரெம்பாவாய். (௧௬)

செங்கணவன்பாற்றிசைமுகன்பாற்றேவர்கள்பா லெங்குமிலாததோரின் பநம்பாலதாக், கொங்குண்கருங்குழலிநந்தம்மைக்கோதாட்டி யிங்குநம்மில்லங் கடோறுமெழுந்தருளிச், செங்கமலப்பொற்பாதந்தந்தருளுஞ்சேவகனை யங்க ணரசையடியோங்கட்காரமுதை, நங்கள்பெருமானைப்பாடிநலந்திகழப் பங்கயப் பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். (௧௭)

அண்ணாமலையானடிக்கமலஞ்சென்றிறைஞ்சும் விண்ணோர்முடியின்ம ணித்தொகைவீறற்றாற்போற், கண்ணாரிரவிகதிர்வந்துகார்கரப்பத் தண்ணாரொ ளிமழுங்கித்தாரகைகடாமகலப், பெண்ணாகியாணாயலியாய்ப்பிறங்கொளிசேர் விண்ணாகிமண்ணாகியித்தனையும்வேறாகிக், கண்ணாரமுதமுமாய்நின்றான்கழல் பாடிப் பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். (௧௮)

உங்கையிற்பிள்ளையுனக்கேயடைக்கலமென் றங்கப்பழஞ்சொற்புதுக்கு மெம்மச்சத்தா, லெங்கள்பெருமானுனக்கொன்றுரைப்போங்கே ளெங்கொங் கைநின்னன்பரல்லார்தோள்சேரற்க, வெங்கையுனக்கல்லாதெப்பணியுஞ்செய் யற்க கங்குல்பகலெங்கண்மற்றொன்றுங்காணற்க, விங்கிப்பரிசேயெமக்கெங் கோனல்குதியே லெங்கெழிலென்ஞாயிறெமக்கேலோரெம்பாவாய். (௧௯)

போற்றியருளுகநின்னாதியாம்பாதமலர் போற்றியருளுகநின்னந்தமாஞ் செந்தளிர்கள், போற்றியெல்லாவுயிர்க்குந்தோற்றமாம்பொற்பாதம் போற்றி யெல்லாவுயிர்க்கும் போகமாம்பூங்கழல்கள், போற்றியெல்லாவுயிர்க்குமீறாமி ணையடிகள் போற்றிமானான்முகனுங்காணாதபுண்டரிகம், போற்றியாமுய்ய வாட்கொண்டருளும்பொன்மலர்கள் போற்றியாமார்கழி நீராடேலோரெம்பா வாய். (௨௦)

## திருப்பொற்சுண்ணம்.

### ஆனந்தமனோலயம்.

முத்துநற்றாமம்பூமாலை தூக்கிமுளைக்குடந் தூபநற்றீபம்வைம்மின்
சத்தியுஞ்சோமியும்பார்மகளுநாமகளோடுபல்லாண்டிசைமின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியுங்கௌரியும்பார்ப்பதியுங்கங்கையும்வந்துகவரிகொண்மி
னத்தனையாறனம்மானைப்பாடியாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௧)

பூவியல்வார்சடையெம்பிராற்குப்பொற்றிருச்சுண்ணமிடிக்கவேண்டு
மாவின்வடுவகிரன்னகண்ணீர்வம்மின்கள்வந்துடன்பாடுமின்கள்
கூவுமின்றொண்டர்புறநிலாமேகுனிமின்றொழுமினெங்கோனெங்கூத்தன்
றேவியுந்தானும்வந்தெம்மையாளச்செம்பொன்செய்சுண்ணமிடித்துநாமே. ()

சுந்தரநீறணிந்தும்மெழுகித்தூயபொன்சிந்திநிதிபரப்பி
யிந்திரன்கற்பகநாட்டியெங்குமெழிற்சுடர்வைத்துக்கொடியெடுமி
னந்தரர்கோனயன்றன்பெருமானாழியானாதனல்வேலன்றாதை
யெந்தரமாளுமையாள்கொழுநற்கேய்ந்தபொற்சுண்ணமிடித்துநாமே. (௩)

காசணிமின்களுலக்கையெல்லாங்காம்பணிமின்கள்கறையுரலை
நேசமுடையவடியவர்கணின்றுநிலாவுகவென்றுவாழ்த்தித்
தேசமெல்லாம்புகழ்ந்தாடுங்கச்சித்திருவேகம்பன்செம்பொற்கோயில்பாடிப்
பாசவினையைப்பறித்துநின்றுபாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௪)

அறுகெடுப்பாரயனும்மரியுமன்றிமற்றிந்திரனோடமரர்
நறுமுறுதேவர்கணங்களெல்லாநம்மிற்பின்பல்லதெடுக்கவொட்டோஞ்
செறிவுடைமும்மதிலெய்தவில்லிதிருவேகம்பன்செம்பொற்கோயில்பாடி
முறுவற்செவ்வாயினீர்முக்கணப்பற்காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௫)

உலக்கைபலவோச்சுவார்பெரியருலகமெலாமுரல்போதாதென்றே
கலக்கவடியவர்வந்துநின்றார்காணவுலகங்கள்போதாதென்றே
நலக்கவடியோமையாண்டுகொண்டுநாண்மலர்ப்பாதங்கள்சூடத்தந்த
மலைக்குமருகனைப்பாடிப்பாடிமகிழ்ந்துபொற்சுண்ணமிடித்துநாமே. (௬)

சூடகந்தோள்வளையார்ப்பவார்ப்பத்தொண்டர்குழாமெழுந்தார்ப்பவார்ப்ப
நாடவர்நந்தம்மையார்ப்பவார்ப்பநாமுமவர்தம்மையார்ப்பவார்ப்பப்
பாடகமெல்லடியார்க்குமங்கைபங்கினனெங்கள்பராபரனுக்
காடகமாமலையன்னகோவுக்காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௭)

வாட்டடங்கண்மடமங்கைநல்லீர்வரிவளையார்ப்பவண்கொங்கைபொங்கத்,
தோட்டிருமுண்டந்துதைந்திலங்கச்சோற்றெம்பிரானென்றுசொல்லிச்சொல்
லி, நாட்கொண்டநாண்மலர்ப்பாதங்காட்டிநாயிற்கடைப்பட்டநம்மையிம்மை,
யாட்கொண்டவண்ணங்கள்பாடிப்பாடியாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. ()

வையகமெல்லாமுரலதாகமாமேருவென்னுமுலக்கைநாட்டி
மெய்யெனுமஞ்சணிறைய்வட்டிமேதகுதென்னன்பெருந்துறையான்
செய்யதிருவடிபாடிப்பாடிச்செம்பொனுலக்கைவலக்கைபற்றி
யையனணிதில்லைவாணனுக்கேயாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௯)

முத்தணிகொங்கைகளாடவாடமொய்குழல்வண்டினமாடவாடச்
சித்தஞ்சிவனொடுமாடவாடச்செங்கயற்கண்பனியாடவாடப்
பித்தெம்பிரானொடுமாடவாடப்பிறவிபிறரொடுமாடவாட
வத்தன்கருணையொடாடவாடவாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௧௦)

மாடுநகைவாணிலாவெறிப்பவாய்திறந்தம்பவளந்துடிப்பப்
பாடுமினந்தம்மையாண்டவாறும்பணிகொண்டவண்ணமும்பாடிப்பாடித்
தேடுமினெம்பெருமானைத்தேடிச்சித்தங்களிப்பத்திகைத்துத்தேறி
யாடுமினம்பலத்தாடினானுக்காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௧௧)



மையமர்கண்டனைவானநாடர்மருந்தினைமாணிக்கக்கூத்தன்றன்னை, யை
யனையையர்பிரானைநம்மையகப்படுத்தாட்கொண்டருமைகாட்டும், பொய்யர்
தம்பொய்யனைமெய்யர்மெய்யைப்போதரிக்கண்ணிணைப்பொற்றொடித்தோட்
டையரவல்குன்மடந்தைநல்லீர்பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௧௨)

மின்னிடைச்செந்துவர்வாய்க்கருங்கண்வெண்ணகைப்பண்ணமர்மென்மொழி
யீரென்னுடையாரமுதெங்களப்பனெம்பெருமானிமவான்மகட்குத்
தன்னுடைக்கேள்வன்மகன்றகப்பன்றமையனெம்மையன்றாள்கள்பாடிப்
பொன்னுடைப்பூண்முலைமங்கைநல்லீர்பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே. ()

சங்கமரற்றச்சிலம்பொலிப்பத்தாழ்குழல்சூழ்தருமாலையாடச்
செங்கனிவாயிதழுந்துடிப்பச்சேயிழையீர்சிவலோகம்பாடிக்
கங்கையிரைப்பவராவிரைக்குங்கற்றைச்சடைமுடியான்கழற்கே
பொங்கியகாதலிற்கொங்கைபொங்கப்பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே. (௧௪)

ஞானக்கரும்பின்றெளியைப்பாகைநாடற்கரியநலத்தைநந்தாத்
தேனைப்பழச்சுவையாயினானைச்சித்தம்புகுந்துதித்திக்கவல்ல
கோனைப்பிறப்பறுத்தாண்டுகொண்டகூத்தனைநாத்தழும்பேறவாழ்த்திப்
பானற்றடங்கண்மடந்தைநல்லீர்பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௧௫)

ஆவகைநாமும்வந்தன்பர்தம்மோடாட்செயும்வண்ணங்கள்பாடிவிண்மேற்
றேவர்கனாவிலுங்கண்டறியாச்செம்மலர்ப்பாதங்கள்காட்டுஞ்செல்வச்
சேவகமேந்தியவெல்கொடியான்சிவபெருமான்புரஞ்செற்றகொற்றச்
சேவகநாமங்கள்பாடிப்பாடிச்செம்பொன்செய்சுண்ணமிடித்துநாமே. (௧௬)

தேனகமாமலர்க்கொன்றைபாடிச்சிவபுரம்பாடித்திருச்சடைமேல்
வானகமாமதிப்பிள்ளைபாடிமால்விடைபாடிவலக்கையேந்து
மூனகமாமழுச்சூலம்பாடியும்பருமிம்பருமுய்யவன்று
போனகமாகநஞ்சுண்டல்பாடிப்பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே. (௧௭)

அயன்றலைகொண்டுசெண்டாடல்பாடியருக்கனெயிறுபறித்தல்பாடிக்
கயந்தனைக்கொன்றுரிபோர்த்தல்பாடிக்காலனைக்காலாலுதைத்தல்பாடி
யியைந்தனமுப்புரமெய்தல்பாடியேழையடியோமையாண்டுகொண்ட
நயந்தனைப்பாடிநின்றாடியாடிநாதற்குச்சுண்ணமிடித்துநாமே. (௧௮)

வட்டமலர்க்கொன்றைமாலைபாடிமத்தமும்பாடிமதியும்பாடிச்
சிட்டர்கள்வாழுந்தென்றில்லைபாடிச்சிற்றம்பலத்தெங்கள்செல்வம்பாடிக்
கட்டியமாசுணக்கச்சைபாடிக்கங்கணம்பாடிக்கவித்தகைம்மே
லிட்டுநின்றாடுமரவம்பாடியீசற்குச்சுண்ணமிடித்துநாமே. (௧௯)

வேதமும்வேள்வியுமாயினார்க்குமெய்ம்மையும்பொய்ம்மையுமாயினார்க்குச்
சோதியுமாயிருளாயினார்க்குத்துன்பமுமாயின்பமாயினார்க்குப்
பாதியுமாய்முற்றுமாயினார்க்குப்பந்தமுமாய்வீடுமாயினாருக்
காதியுமந்தமுமாயினாருக்காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௨௦)

---

## திருத்தெள்ளேணம்.

### சிவனோடடைவு.

திருமாலும்பன்றியாய்ச்சென்றுணராத்திருவடியை
யுருநாமறியவோரந்தணனாயாண்டுகொண்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாமமோருருவமொன்றுமில்லாற்காயிரந்
திருநாமம்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (௧)

திருவார்பெருந்துறைமேயபிரானென்பிறவிக்
கருவேரறுத்தபின்யாவரையுங்கண்டதில்லை
யருவாயுருவமுமாயபிரானவன்மருவுந்
திருவாரூர்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (௨)

அரிக்கும்பிரமற்குமல்லாததேவர்கட்குக்
தெரிக்கும்படித்தன்றிநின்றசிவம்வந்துநம்மை
யுருக்கும்பணிகொள்ளுமென்பதுகேட்டுலகமெல்லாஞ்
சிரிக்குந்திறம்பாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (௩)

அவமாயதேவரவகதியிலழுந்தாமே
பவமாயங்காத்தென்னையாண்டுகொண்டபரஞ்சோதி
நவமாயசெஞ்சுடர்நல்குதலுநாமொழிந்து
சிவமானவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (௪)

அருமந்ததேவரயன்றிருமாற்கரியசிவ
முருவந்துபூதலத்தோருகப்பெய்தக்கொண்டருளிக்
கருவெந்துவீழக்கடைக்கணித்தென்னுளம்புகுந்த
திருவந்தவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (௫)

அரையாடுநாகமசைத்தபிரானவனியின்மேல்
வரையாடுமங்கைதன்பங்கொடும்வந்தாண்டதிற
முரையாடவுள்ளொளியாடவொண்மாமலர்க்கண்களினீர்த்
திரையாடுமாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (௬)

ஆவாவரியயனிந்திரன்வானோர்க்கரியசிவன
வாவாவென்றென்னையும்பூதலத்தேவலித்தாண்டுகொண்டான்
பூவாரடிச்சுவடென்றலைமேற்பொறித்தலுமே
தேவானவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (௭)

கறங்கோலைபோல்வதோர்காயப்பிறப்போடிறப்பென்னு
மறம்பாவமென்றிரண்டச்சந்தவிர்த்தென்னையாண்டுகொண்டான்
மறந்தேயுந்தன்கழனான்மறவாவண்ணநல்கியவத்
திறம்பாடல்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (௮)

கன்னாருரித்தென்னவென்னையுந்தன்கருணையினாற்
பொன்னார்கழல்பணித்தாண்டபிரான்புகழ்பாடி
மின்னேர்நுடங்கிடைச்செந்துவர்வாய்வெண்ணகையீர்
தென்னாதென்னாவென்றுதெள்ளேணங்கொட்டாமோ. (௯)

கனவேயுந்தேவர்கள்காண்பரியகனைகழலோன்
புனவேயனவளைத்தோளியொடும்புகுந்தருளி
நனவேயெனைப்பிடித்தாட்கொண்டவாநயந்துநெஞ்சஞ்
சினவேற்கணீர்மல்கத்தெள்ளேணங்கொட்டாமோ. (௧௦)



# திருச்சாழல்.

## சிவனுடையகாருணியம்.

பூசுவதும்வெண்ணீறுபூண்பதுவும்பொங்கரவம்
பேசுவதுந்திருவாயான்மறைபோலுங்காணேடீ
பூசுவதும்பேசுவதும்பூண்பதுவுங்கொண்டென்னை
யீசனவனெவ்வுயிர்க்குமியல்பானான்சாழலோ. (௧)

என்னப்பனெம்பிரானெல்லார்க்குந்தானீசன்
றுன்னம்பெய்கோவணமாக்கொள்ளுமதுவென்னேடீ
மன்னுகலைதுன்னுபொருண்மறைநான்கேவான்சரடாத்
தன்னையேகோவணமாச்சாத்தினன்காண்சாழலோ. (௨)

கோயில்சுடுகாடுகொல்புலித்தோனல்லாடை
தாயுமிலிதந்தையிலிதான்றனியன்காணேடீ
தாயுமிலிதந்தையிலிதான்றனியனாயிடினுங்
காயிலுலகனைத்துங்கற்பொடிகாண்சாழலோ. (௩)

அயனையநங்கனையந்தகனைச்சந்திரனை
வயனங்கண்மாயாவடுச்செய்தான்காணேடீ
நயனங்கண்மூன்றுடையநாயகனேதண்டித்தாற்
சயமன்றோவானவர்க்குத்தாழ்குழலாய்சாழலோ. (௪)

தக்கனையுமெச்சனையுந்தலையறுத்துத்தேவர்கணந்
தொக்கனவந்தவர்தம்மைத்தொலைத்ததுதானென்னேடீ
தொக்கனவந்தவர்தம்மைத்தொலைத்தருளியருள்கொடுத்தங்
கெச்சனுக்குமிகைத்தலைமற்றருளினன்காண்சாழலோ. (௫)

அலரவனுமாலவனுமறியாமேயழலுருவாய்
நிலமுதற்கீழண்டமுறநின்றதுதானென்னேடீ
நிலமுதற்கீழண்டமுறநின்றிலனேலிருவருந்தஞ்
சலமுகத்தாலாங்காரந்தவிரார்காண்சாழலோ. (௬)

மலைமகளையொருபாகம்வைத்தலுமேமற்றொருத்தி
சலமுகத்தாலவன்சடையிற்பாயுமதுவென்னேடீ
சலமுகத்தாலவன்சடையிற்பாய்ந்திலளேற்றரணியெல்லாம்
பிலமுகத்தேபுகப்பாய்ந்துபெருங்கேடாஞ்சாழலோ. (௭)

கோலாலமாகிக்குரைகடல்வாயன்றெழுந்த
வாலாலமுண்டானவன்சதுர்தானென்னேடீ
யாலாலமுண்டிலனேலன்றயன்மாலுள்ளிட்ட
மேலாயதேவரெல்லாம்வீடுவர்காண்சாழலோ. (௮)

தென்பாலுகந்தாடுந்தில்லைச்சிற்றம்பலவன்
பெண்பாலுகந்தான்பெரும்பித்தன்காணேடீ
பெண்பாலுகந்திலனேற்பேதாயிருநிலத்தோர்
விண்பாலியோகெய்திவீடுவர்காண்சாழலோ. (௯)

தானந்தமில்லான்றனையடைந்தநாயேனை
யானந்தவெள்ளத்தழுத்துவித்தான்காணேடீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானந்தவெள்ளத்தழுத்துவித்திருவடிகள்
வானுந்தேவர்கட்கோர்வான்பொருள்காண்சாழலோ. (௨௰)

---

## திருப்பூவல்லி.

### மாயாவிசயநீக்குதல்.

இணையார்திருவடியென்றலைமேல்வைத்தலுமே
துணையானசுற்றங்களத்தனையுந்துறந்தொழிந்தே
னணையார்புனற்றில்லையம்பலத்தேயாடுகின்ற
புணையாளன்சீர்பாடிப்பூவல்லிகொய்யாமோ. (௧)

எந்தையெந்தாய்சுற்றமற்றுமெல்லாமென்னுடைய
பந்தமறுத்தென்னையாண்டுகொண்டபாண்டிப்பிரா
னந்தமிலாவானந்தத்தேனிருந்த
பொந்தைப்பரவிநாம்பூவல்லிகொய்யாமோ. (௨)

நாயிற்கடைப்பட்டநம்மையுமோர்பொருட்படுத்துத்
தாயிற்பெரிதுந்தயாவுடையதம்பெருமான்
மாயப்பிறப்பறுத்தாண்டானென்வல்வினையின்
வாயிற்பொடியட்டிப்பூவல்லிகொய்யாமோ. (௩)

பண்பட்டதில்லைப்பதிக்கரசைப்பரவாதே
யெண்பட்டதக்கனருக்கனெச்சனிந்துவனல்
விண்பட்டபூதப்படைவீரபத்திரராற்
புண்பட்டவாபாடிப்பூவல்லிகொய்யாமோ. (௪)

தேனுகுகொன்றைசடைக்கணிந்தசிவபெருமா
னூனுடிநாடிவந்துள்புகுந்தானுலகர்முன்னே
நானுடியாடிநின்றேலமிடநடம்பயிலும்
வானுடர்கோவுக்கேபூவல்லிகொய்யாமோ. (௫)

எரிமூன்றுதேவர்க்கிரங்கியருள்செய்தருளிச்
சிரமூன்றறத்தன்றிருப்புருவநெரித்தருளி
யுருமூன்றுமாகியுணர்வரிதாமொருவனுமே
புரமூன்றெரித்தவாபூவல்லிகொய்யாமோ. (௬)

வணங்கத்தலைவைத்துவார்கழல்வாய்வாழ்த்தவைத்
திணங்கத்தன்சீரடியார்கூட்டமும்வைத்தெம்பெருமா
னணங்கொளணிதில்லையம்பலத்தேயாடுகின்ற
குணங்கூரப்பாடிநாம்பூவல்லிகொய்யாமோ. (௭)

நெறிசெய்தருளித்தன்சீரடியார்பொன்னடிக்கே
குறிசெய்துகொண்டென்னையாண்டபிரான்குணம்பரவி
முறிசெய்துநம்மைமுழுதுடற்றும்பழவினையைக்
கிறிசெய்தவாபாடிப்பூவல்லிகொய்யாமோ. (௮)

பன்னாட்பரவிப்பணிசெய்யப்பாதமல
ரென்னாகந்துன்னவைத்தபெரியோனெழிற்சுடராய்க்
கன்னாருரித்தென்னையாண்டுகொண்டான்கழலிணைகள்
பொன்னானவாபாடிப்பூவல்லிகொய்யாமோ. (௯)



போராசையாமிந்தப்பிண்டமறப்பெருந்துறையான்
சீரார்திருவடியென்றலைமேல்வைத்தபிரான்
காரார்கடனஞ்சையுண்டுகந்தகாபாலி
போரார்புரம்பாடிப்பூவல்லிகொய்யாமோ. (௧௰)

---

## திருப்பள்ளியெழுச்சி.

### திரோதானசுத்தி.

போற்றியென்வாழ்முதலாகியபொருளேபுலர்ந்ததுபூங்கழற்கிணைதுணைமலர்கொண், டேற்றிநின்றிருமுகத்தெமக்கருண்மலருமெழினகைகொண்டுநின்றிருவடிதொழுகோஞ், சேற்றிதழ்க்கமலங்கண்மலருந்தண்வயல்சூழ் திருப்பெருந்துறையுறைசிவபெருமானே, யேற்றுயர்கொடியுடையாயெனையுடையா யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௧)

அருணனிந்திரன்றிசையணுகினனிருள்போயகன்றதுவுதயநின்மலர்த்திருமுகத்தின், கருணையின்சூரியனெழவெழநயனக்கடிமலர்மலரமற்றண்ணலங்கண்ணாந், திரணிரையறுபதமுரல்வனவிவையோர்திருப்பெருந்துறையுறைசிவபெருமானே, யருணிதிதரவருமானந்தமலையேயலைகடலேபள்ளியெழுந்தருளாயே. (௨)

கூவினபூங்குயில்கூவினகோழிகுருகுகளியம்பினவியம்பினசங்க, மோவினதாரகையொளியொளியுதயத் தொருப்படுகின்றதுவிருப்பொடுநமக்குத், தேவநற்செறிகழற்றாளிணைகாட்டாய் திருப்பெருந்துறையுறைசிவபெருமானே, யாவருமறிவரியாயெமக்கெளியா யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௩)

இன்னிசைவீணையர்யாழினரொருபா லிருக்கொடுதோத்திரமியம்பினரொருபாற், றுன்னியபிணைமலர்க்கையினரொருபாற் றொழுகையரழுகையர்துவள்கையரொருபாற், சென்னியிலஞ்சலிகூப்பினரொருபாற்றிருப்பெருந்துறையுறைசிவபெருமானே, யென்னையுமாண்டுகொண்டின்னருள்புரியுமெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௪)

பூதங்கடோறுநின்றாயெனினல்லாற் போக்கிலன்வரவிலனெனநினைப்புலவோர், கீதங்கள்பாடுதலாடுதலல்லாற்கேட்டறியோமுனைக்கண்டறிவாரைச், சீதங்கொள்வயற்றிருப்பெருந்துறைமன்னாசிந்தனைக்குமரியாயெங்கண்முன்வந், தேதங்களறுத்தெம்மையாண்டருள்புரியுமெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௫)

பப்பறவீட்டிருந்துணருநின்னடியார்பந்தனைவந்தறுத்தாரவர்பலரு, மைப்புறுகண்ணியர்மானிடத்தியல்பின்வணங்குகின்றாரணங்கின்மணவாளா, செப்புறுகமலங்கண்மலருந்தண்வயல்சூழ் திருப்பெருந்துறையுறைசிவபெருமானே, யிப்பிறப்பறுத்தெமையாண்டருள்புரியு மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௬)

அதுபழச்சுவையெனவமுதெனவறிதற்கரிதெனவெளிதெனவமரருமறியா, ரிதுவவன்றிருவுருவிவனவனெனவேயெங்களையாண்டுகொண்டிங்கெழுந்தருளு, மதுவளர்பொழிற்றிருவுத்தரகோசமங்கையுள்ளாய்திருப்பெருந்துறைமன்னா, வெதுவெமைப்பணிகொளுமாறதுகேட்போ மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௭)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூந்தியமுதனடுவிறுதியுமாளுய்மூவருமறிகிலர்யாவர்மற்றறிவார், பந்தணைவிரலியுநீயுநின்னடியார்பழங்குடிலொறுமெழுந்தருளியபரனே, செந்தழல்புரைதிருமேனியுங்காட்டித்திருப்பெருந்துறையுறைகோயிலுங்காட்டி, யந்தணனுவதுங்காட்டிவந்தாண்டாயாரமுதேபள்ளியெழுந்தருளாயே. (௮)

விண்ணகத்தேவருந்நண்ணவுமாட்டாவிழுப்பொருளேயுனதொழுப்படியோங்கண், மண்ணகத்தேவந்துவாழச்செய்தானேவண்டிருப்பெருந்துறையாய்வழியடியோங், கண்ணகத்தேநின்றுகளிதருந்தேனேகடலமுதேகரும்பேவிரும்படியா, ரெண்ணகத்தாயுலகுக்குயிரானுயெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே

புவனியிற்போய்ப்பிறவாமையினளும்போக்குகின்றேமவமேயிந்தப்பூமி, சிவனுய்யக்கொள்கின்றவாறென்றுநோக்கித்திருப்பெருந்துறையுறைவாய்திருமாலா, மவன்விருப்பெய்தவுமலரவனசைப்படவுநின்னலர்ந்தமெய்க்கருணையுநீயு, மவனியிற்புகுந்தெமையாட்கொள்ளவல்லாயாரமுதேபள்ளியெழுந்தருளாயே. (௧௦)

---

## கோயிற்றிருப்பதிகம்.

### அநுபோகவிலக்கணம்.

மாறிநின்றென்னைமயக்கிடும்வஞ்சப்புலனைந்தின்வழியடைத்தமுதே
யூறிநின்றென்னுளெழுபரஞ்சோதியுள்ளவாகாணவந்தருளாய்
தேறலின்றெளிவேசிவபெருமானேதிருப்பெருந்துறையுறைசிவனே
யீறிலாப்பதங்களியாவையுங்கடந்தவின்பமேயென்னுடையன்பே. (௧)

அன்பினலடியேனவியோடாக்கையானந்தமாய்க்கசிந்துருக
வென்பரமல்லாவின்னருடந்தாயானிதற்கிலனொர்கைம்மாறு
முன்புமாய்ப்பின்புமுழுதுமாய்ப்பரந்தமுத்தனேமுடிவிலாமுதலே
தென்பெருந்துறையாய்சிவபெருமானேசீருடைச்சிவபுரத்தரைசே. (௨)

அரைசனேயன்பர்க்கடியனேனுடையவப்பனேயாவியோடாக்கை, புரைபுரைகனியப்புகுந்துநின்றுருக்கிப்பொய்யிருள்கடிந்தமெய்ச்சுடரே, திரைபொராமன்னுமமுதத்தெண்கடலேதிருப்பெருந்துறையுறைசிவனே, யுரையுணர்விறந்துநின்றுணர்வதோருணர்வேயானுன்னையுரைக்குமாறுணர்த்தே. (௩)

உணர்ந்தமாமுனிவரும்பரோடொழிந்தாருணர்வுக்குந்தெரிவரும்பொருளே
யிணங்கிலியெல்லாவுயிர்கட்குமுயிரேயெனைப்பிறப்பறுக்குமெம்மருந்தே
திணிந்ததோரிருளிற்றெளிந்ததூவெளியேதிருப்பெருந்துறையுறைசிவனே
குணங்கடாமில்லாவின்பமேயுன்னைக்குறுகினேற்கினியென்னகுறையே. ( )

குறைவிலாநிறைவேகோதிலாவமுதேயீறிலாக்கொழுஞ்சுடர்க்குன்றே
மறையுமாய்மறையின்பொருளுமாய்வந்தென்மனத்திடைமன்னியமன்னே
சிறைபெறுநீர்போற்சிந்தைவாய்ப்பாயுந்திருப்பெருந்துறையுறைசிவனே
யிறைவனேநீயென்னுடலிடங்கொண்டாயினியுன்னையென்னிரக்கேனே. ( )

இரந்திரந்துருகவென்மனத்துள்ளேயெழுகின்றசோதியேயிமையோர்
சிரந்தனிற்பொலியுங்கமலச்சேவடியாய்திருப்பெருந்துறையுறைசிவனே
நிரந்தவாகாயநீர்நிலந்திகாலாயவையல்லையாயாங்கே
கரந்ததோருருவேகளித்தனனுன்னைக்கண்ணுறக்கண்டுகொண்டின்றே. (௬)



இன்றெனக்கருளியிருள்கடிந்துள்ளத்தெழுகின்றஞாயிறேபோன்று
நின்றநின்றன்மைநினைப்பறநினைந்தேனீயலாற்பிறிதுமற்றின்மை (சிவனே
சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்ருந்திருப்பெருந்துறையுறை
யொன்றுநீயல்லையன்றியொன்றில்லையாருன்னையறியகிற்பாரே. (௭)

பார்பதமண்டமனைத்துமாய்முளைத்துப்பரந்ததோர்படரொளிப்பரப்பே
நீருறுதீயேநினைவதேலரியநின்மலாநின்னருள்வெள்ளச்
சீருறுசிந்தையெழுந்ததோர்தேனேதிருப்பெருந்துறையுறைசிவனே
யாருறவெனக்கிங்காரயலுள்ளாரானந்தமாக்குமென்சோதீ. (௮)

சோதியாய்த்தோன்றுமுருவமேயருவாமொருவனேசொல்லுதற்கரிய
வாதியேநடுவேயந்தமேபந்தமறுக்குமானந்தமாகடலே
தீதிலாநன்மைத்திருவருட்குன்றேதிருப்பெருந்துறையுறைசிவனே
யாதுநீபோவதோர்வகையெனக்கருளாய்வந்துநின்னிணையடிதந்தே. (௯)

தந்ததுன்றன்னைக்கொண்டதென்றன்னைச்சங்கராவார்கொலோசதுர
ரந்தமொன்றில்லாவானந்தம்பெற்றேனியாதுநீபெற்றதொன்றென்பாற்
சிந்தையேகோயில்கொண்டவெம்பெருமான்றிருப்பெருந்துறையுறைசிவனே
யெந்தையேயீசாவுடலிடங்கொண்டாயானிதற்கிலனொர்கைம்மாறே. (௧௦)

---

## செத்திலாப்பத்து.

### சிவானந்தமளவறுக்கொணுமை.

பொய்யனேனகநெகப்புகுந்தமுதூறும்புதுமலர்க்கழலிணையடிபிரிந்துங், கையனேனின்னுஞ்செத்திலேனந்தோவிழித்திருந்துள்ளக்கருத்தினையிழந்தேன், ஐயனேயரசேயருட்பெருங்கடலேயத்தனேயயன்மாற்கறியொண்ணச், செய்யமேனியனேசெய்வகையறியேன்றிருப்பெருந்துறைமேவியசிவனே.

புற்றுமாய்மரமாய்ப்புனல்காலேயுண்டியாயண்டவாணரும்பிறரும்
வற்றியாறுநின்மலரடிகாணமன்னவென்னையோர்வார்த்தையுட்படுத்துப்
பற்றினய்பதையேன்மனமிகவுருகேன்பரிகிலேன்பரியாவுடறன்னைச்
செற்றிலேனின்னுந்திரிதருகின்றேன்றிருப்பெருந்துறைமேவியசிவனே. ( )

புலையனேனையும்பொருளெனநினைந்துன்னருள்புரிந்தனைபுரிதலுங்களித்துத், தலையினுனடந்தேன்விடைப்பாகாசங்கராவெண்ணில் வானவர்க்கெல்லா, நிலையனேயலைநீர்விடமுண்டநித்தனேயடையார்புரமெரித்த, சிலையனேயெனைச்செத்திடப்பணியாய்திருப்பெருந்துறைமேவியசிவனே. (௩)

அன்பராகிமற்றருந்தவமுயல்வாரயனுமாலுமற்றழலுறமெழுகா
மென்பராய்நினைவாரெனைப்பலர்நிற்கவிங்கெனையெற்றினுக்காண்டாய்
வன்பராய்முருடொக்குமென்சிந்தைமரக்கணென்செவியிரும்பினும்வலிது
தென்பராய்த்துறையாய்சிவலோகாதிருப்பெருந்துறைமேவியசிவனே. (௪)

ஆட்டுத்தேவர்தம்விதியொழித்தன்பாலையனேயென்றுன்னருள்வழியிருப்பே
ணட்டுத்தேவருகாடரும்பொருளேகாதனேயுனைப்பிரிவுறவருளைக்
காட்டித்தேவநின்கழலிணைகாட்டிக்காயமாயத்தைக்கழித்தருள்செய்யாய்
சேட்டைத்தேவர்தந்தேவர்பிரானேதிருப்பெருந்துறைமேவியசிவனே. (௫)

---

## அடைக்கலப்பத்து.

### பக்குவநிண்ணயம்.

செழுக்கமலத்திரளனநின்சேவடிசேர்ந்தமைந்த
பழுத்தமனத்தடியருடன்போயினர்யான்பாவியேன்
புழுக்கணுடைப்புன்குரம்பைப்பொல்லாக்கல்விஞானமிலா
வழுக்குமனத்தடியேனுடையாயுன்னடைக்கலமே. (௧)

வெறுப்பனவேசெய்யுமென்சிறுமையைநின்பெருமையினாற்
பொறுப்பவனேயராப்பூண்பவனேபொங்குகங்கைசடைச்
செறுப்பவனேநின்றிருவருளாலென்பிறவியைவே
ரறுப்பவனேயுடையாயடியேனுன்னடைக்கலமே. (௨)

பெரும்பெருமானென்பிறவியைவேரறுத்துப்பெரும்பிச்சுத்
தரும்பெருமான்சதுரப்பெருமானென்மனத்தினுள்ளே
வரும்பெருமான்மலரோனெடுமாலறியாமனின்ற
வரும்பெருமானுடையாயடியேனுன்னடைக்கலமே. (௩)

பொழிகின்றதுன்பப்புயல்வெள்ளத்தினின்கழற்புணைகொண்
டிழிகின்றவன்பர்களேறினர்வான்யானிடர்க்கடல்வாய்ச்
சுழிசென்றுமாதர்த்திரைபொரக்காமச்சுறவெறிய
வழிகின்றனனுடையாயடியேனுன்னடைக்கலமே. (௪)

சுருள்புரிகூழையர்சூழலிற்பட்டுன்றிறமறந்திங்
கிருள்புரியாக்கையிலேகிடந்தெய்த்தனன்மைத்தடங்கண்
வெருள்புரிமானன்னநோக்கிதன்பங்கவிண்ணோர்பெருமா
னருள்புரியாயுடையாயடியேனுன்னடைக்கலமே. (௫)

---

## அதிசயப்பத்து.

### முத்தியிலக்கணம்.

வைப்புமாடென்றுமாணிக்கத்தொளியென்றுமனத்திடையுருகாதே
செப்புநேர்முலைமடவரலியர்தங்கடிறத்திடைநைவேனை
யொப்பிலாதனவுவமனிலிறந்தனவொண்மலர்த்திருப்பாதத்
தப்பனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௧)

நீதியாவனயாவையுநினைக்கிலேனினைப்பவரொடுங்கூடே
னேதமேபிறந்திறந்துழல்வேன்றனையென்னடியானென்று
பாதிமாதொடுங்கூடியபராபரனிரந்தரமாய்நின்ற
வாதியாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௨)

முன்னையென்னுடைவல்வினைபோயிடமுக்கணதுடையெந்தை
தன்னையாவருமறிவதற்கரியவனெளியவனடியார்க்குப்
பொன்னைவென்றதோர்புரிசடைமுடிதனிலிளமதியதுவைத்த
வன்னையாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௩)

பித்தனென்றெனையுலகவர்பகர்வதோர்காரணமிதுகேளீ
ரொத்துச்சென்றுதன்றிருவருட்கூடிடுமுபாயமதறியாமே



செத்துப்போயருநரகிடைவீழ்வதற்கொருப்படுகின்றேனை
யத்தனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௪)

பரவுவாரவர்பாடுசென்றணைகிலேன்பன்மலர்பறித்தேத்தேன்
குரவுவார்குழலார்திறத்தேநின்றுகுடிகெடுகின்றேனை
யிரவுநின்றெரியாடியவெம்மிறையெரிசடைமிளிர்கின்ற
வரவனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௫)

---

## வாழாப்பத்து.

### முத்தியுபாயம்.

பாரொடுவிண்ணாய்ப்பரந்தவெம்பரனேபற்றுநான்மற்றிலேன்கண்டாய்
சீரொடுபொலிவாய்சிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே
யாரொடுநோகேனார்க்கெடுத்துரைக்கேனாண்டநீயருளிலையானால்
வார்கடலுலகில்வாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே. (௧)

வம்பனேன்றன்னையாண்டமாமணியேபற்றுநான்மற்றிலேன்கண்டா
யும்பருமறியாவொருவனேயிருவர்க்குணர்விறந்துலகமூடுருவுஞ்
செம்பெருமானேசிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே
யெம்பெருமானேயென்னையாள்வானேயென்னைநீகூவிக்கொண்டருளே. ()

பாடிமால்புகழும்பாதமேயல்லாற்பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
தேடிநீயாண்டாய்சிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே
யூடுவதுன்னோடுவப்பதுமுன்னையுணர்த்துவதுனக்கெனக்குறுதி
வாடினேனிங்குவாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே. (௩)

வல்லைவாளரக்கர்புரமெரித்தானேபற்றுநான்மற்றிலேன்கண்டாய்
தில்லைவாழ்கூத்தாசிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே
யெல்லைமூவுலகுமுருவியன்றிருவர்காணுநாளாதியீறின்மை
வல்லையாய்வளர்ந்தாய்வாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே. (௪)

பண்ணினேர்மொழியாள்பங்கநீயல்லாற்பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
திண்ணமேயாண்டாய்சிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே
யெண்ணமேயுடல்வாய்மூக்கொடுசெவிகண்ணென்றிவைநின்கணேவைத்து
மண்ணின்மேலடியேன்வாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே. ()

பஞ்சின்மெல்லடியாள்பங்கநீயல்லாற்பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
செஞ்சவேயாண்டாய்சிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே
யஞ்சினேனாயேனாண்டுநீயளித்தவருளினைமருளினான்மறந்த
வஞ்சனேனிங்குவாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே. (௬)

பருதிவாழொளியாய்பாதமேயல்லாற்பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
திருவுயர்கோலச்சிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே
கருணையேநோக்கிக்கசிந்துளமுருகிக்கலந்துநான்வாழுமாறறியா
மருளனேனுலகில்வாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே. (௭)

பந்தணைவிரலாள்பங்கநீயல்லாற்பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
செந்தழல்போல்வாய்சிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யந்தமிலமுதேயரும்பெரும்பொருளேயாரமுதேயடியேனை
வந்துயவாண்டாய்வாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே. (௮)

பாவநாசாவுன்பாதமேயல்லாற்பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
தேவர்தந்தேவேசிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே
மூவுலகுருவவிருவர்கீழ்மேலாய்முழங்கழலாய்நிமிர்ந்தானே
மாவுரியானேவாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே. (௯)

பழுதிறொல்புகழாள்பங்கநீயல்லாற்பற்றுநான்மற்றிலேன்கண்டாய், செழுமதியணிந்தாய்சிவபுரத்தரசேதிருப்பெருந்துறையுறைசிவனே, தொழுவனேபிறரைத்துதிப்பனோவெனக்கோர்துணையெனநினைவனோசொல்லாய், மழவிடையானேவாழ்கிலேன்கண்டாய்வருகவென்றருள்புரியாயே. (௧௦)

---

## அருட்பத்து.

### மகாமாயாசுத்தி.

சோதியேசுடரேசூழொளிவிளக்கேசுரிகுழற்பணைமுலைமடந்தை
பாதியேபரனேபால்கொள்வெண்ணீற்றாய்பங்கயத்தயனுமாலறியா
நீதியேசெல்வத்திருப்பெருந்துறையினிறைமலர்க்குருந்தமேவியசீ
ராதியேயடியேனாதரித்தழைத்தாலதெந்துவேயென்றருளாயே. (௧)

நிருத்தனேநிமலாநீற்றனேநெற்றிக்கண்ணனேவிண்ணுளோர்பிரானே
யொருத்தனேயுன்னையோலமிட்டலறியுலகெலாந்தேடியுங்காணேன்
றிருத்தமாம்பொய்கைத்திருப்பெருந்துறையிற்செழுமலர்க்குருந்தமேவியசீ
ரருத்தனேயடியேனாதரித்தழைத்தாலதெந்துவேயென்றருளாயே. (௨)

எங்கணாயகனேயென்னுயிர்த்தலைவாவேலவார்குழலிமாரிருவர்
தங்கணாயகனேதக்கநற்காமன்றனதுடலழலெழவிழித்த
செங்கணாயகனேதிருப்பெருந்துறையிற்செழுமலர்க்குருந்தமேவியசீ
ரங்கணாவடியேனாதரித்தழைத்தாலதெந்துவேயென்றருளாயே. (௩)

கமலநான்முகனுங்கார்முகினிறத்துக்கண்ணனுநண்ணுதற்கரிய
விமலனேயெமக்குவெளிப்படாயென்னவியன்றழல்வெளிப்பட்டவெந்தாய்
திமிலநான்மறைசேர்திருப்பெருந்துறையிற்செழுமலர்க்குருந்தமேவியசீ
ரமலனேயடியேனாதரித்தழைத்தாலதெந்துவேயென்றருளாயே. (௪)

துடிகொணேரிடையாள்சுரிகுழன்மடந்தைதுணைமுலைக்கண்கடோய்சுவடு; பொடிகொள்வான்றழலிற்புள்ளிபோலிரண்டுபொங்கொளிதங்குமார்பினனே, செடிகொள்வான்பொழில்சூழ்திருப்பெருந்துறையிற்செழுமலர்க்குருந்தமேவியசீ, ரடிகளேயடியேனாதரித்தழைத்தாலதெந்துவேயென்றருளாயே.

துப்பனே தூயாய் தூயவெண்ணீறுதுதைந்தெழுதுளங்கொளிவயிரத்
தொப்பனேயுன்னையுள்குவார்மனத்தினுறுசுவையளிக்குமாரமுதே
செப்பமாமறைசேர்திருப்பெருந்துறையிற்செழுமலர்க்குருந்தமேவியசீ
ரப்பனேயடியேனாதரித்தழைத்தாலதெந்துவேயென்றருளாயே. (௬)

மெய்யனேவிகிர்தாமேருவேவில்லாமேவலர்புரங்கண்மூன்றெரித்த
கையனேகாலாற்காலனைக்காய்ந்தகடுந்தழற்பிழம்பன்னமேனிச்



செய்யனேசெல்வத்திருப்பெருந்துறையிற்செழுமலர்க்குருந்தமேவியசீ
ரையனேயடியேனாதரித்தழைத்தாலதெந்துவேயென்றருளாயே. (௭)

முத்தனேமுதல்வாமுக்கணாமுனிவாமொட்டறாமலர்பறித்திறைஞ்சிப்
பத்தியாய்நினைந்துபரவுவார்தமக்குப்பரகதிகொடுத்தருள்செய்யுஞ்
சித்தனேசெல்வத்திருப்பெருந்துறையிற்செழுமலர்க்குருந்தமேவியசீ
ரத்தனேயடியேனாதரித்தழைத்தாலதெந்துவேயென்றருளாயே. (௮)

மருளனேன்மனத்தைமயக்கறநோக்கிமறுமையோடிம்மையுங்கெடுத்த
பொருளனேபுனிதாபொங்குவாளரவங்கங்கைநீர்தங்குசெஞ்சடையாய்
தெருளுநான்மறைசேர்திருப்பெருந்துறையிற்செழுமலர்க்குருந்தமேவியசீ
ரருளனேயடியேனாதரித்தழைத்தாலதெந்துவேயென்றருளாயே. (௯)

திருந்துவார்பொழில்சூழ்திருப்பெருந்துறையிற்செழுமலர்க்குருந்தமேவியசீ
ரிருந்தவாறெண்ணியேசறநினைந்திட்டென்னுடையெம்பிரானென்றென்
றருந்தவாநினைந்தேயாதரித்தழைத்தாலலைகடலதனுளேநின்று
பொருந்தவாகயிலைபுகுநெறியிதுகாண்போதராயென்றருளாயே. (௧௦)

---

## கண்டபத்து.

### நிருத்ததரிசனம்.

இந்திரியவயமயங்கியிறப்பதற்கேகாரணமா
யந்தரமேதிரிந்துபோயருநரகில்வீழ்வேற்குச்
சிந்தைதனைத்தெளிவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வந்தமிலாவானந்தமணிகொடில்லைகண்டேனே. (௧)

வினைப்பிறவியென்கின்றவேதனையிலகப்பட்டுத்
தனைச்சிறிதுநினையாதேதளர்வெய்திக்கிடப்பேனை
யெனைப்பெரிதுமாட்கொண்டென்பிறப்பறுத்தவிணையிலியை
யனைத்துலகுந்தொழுந்தில்லையம்பலத்தேகண்டேனே. (௨)

உருத்தெரியாக்காலத்தேயுள்புகுந்தென்னுளமன்னிக்
கருத்திருத்தியூன்புக்குக்கருணையினாலாண்டுகொண்ட
திருத்துருத்திமேயானைத்தித்திக்குஞ்சிவபதத்தை
யருத்தியினானாயடியேனணிகொடில்லைகண்டேனே. (௩)

கல்லாதபுல்லறிவிற்கடைபட்டநாயேனை
வல்லாளனாய்வந்துவனப்பெய்தியிருக்கும்வண்ணம்
பல்லோருங்காணவென்றன்பசுபாசமறுத்தானை
யெல்லோருமிறைஞ்சுதில்லையம்பலத்தேகண்டேனே. (௪)

சாதிகுலம்பிறப்பென்னுஞ்சுழிப்பட்டுத்தடுமாறு
மாதமிலிநாயேனையல்லலறுத்தாட்கொண்டு
பேதைகுணம்பிறருருவம்யானெனதென்னுரைமாய்த்துக்
கோதிலமுதானானைக்குலாவுதில்லைகண்டேனே. (௫)

பிறவிதனையறமாற்றிப்பிணிமூப்பென்றிவையிரண்டு
முறவினொடுமொழியச்சென்றுலகுடையவொருமுதலைச்
செறிபொழில்சூழ்தில்லைநகர்த்திருச்சிற்றம்பலமன்னி
மறையவரும்வானவரும்வணங்கிடநான்கண்டேனே. (௬)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திமையும்பரிசுமிலாப்பசுபாசமறுத்தருளிப்
பித்தனிவனெனவென்னையாக்குவித்துப்பேராமே
சித்தமெனுந்திண்கயிற்றாற்றிருப்பாதங்கட்டுவித்த
வித்தகனார்விளையாடல்விளங்குதில்லைகண்டேனே. (௭)

அளவிலாப்பாவகத்தாலமுக்குண்டிங்கறிவின்றி
விளைவொன்றுமறியாதேவெறுவியனாய்க்கிடப்பேனுக்
களவிலாவானந்தமளித்தென்னையாண்டானைக்
களவிலாவானவருந்தொழுந்தில்லைகண்டேனே. (௮)

பாங்கினொடுபரிசொன்றுமறியாதநாயேனை
யோங்கியுளத்தொளிவளரவுலப்பிலாவன்பருளி
வாங்கிவினைமலமறுத்துவான்கருணைதந்தானை
நான்குமறைபயிறில்லையம்பலத்தேகண்டேனே. (௯)

பூதங்களைந்தாகிப்புலனாகிப்பொருளாகிப்
பேதங்களனைத்துமாய்ப்பேதமிலாப்பெருமையனைக்
கேதங்கள்கெடுத்தாண்டகிளரொளியைமரகதத்தை
வேதங்கடொழுதேத்தும்விளங்குதில்லைகண்டேனே. (௰)

## அச்சப்பத்து.

### ஆனந்தமுறுதல்.

புற்றில்வாளரவுமஞ்சேன்பொய்யர்தம்மெய்யுமஞ்சேன்
கற்றைவார்சடையெம்மண்ணல்கண்ணுதல்பாதநண்ணி
மற்றுமோர்தெய்வந்தன்னையுண்டெனநினைந்தெம்பெம்மாற்
கற்றிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (௧)

வெருவரேன்வேட்கைவந்தால்வினைக்கடல்கொளினுமஞ்சே
னிருவரான்மாறுகாணாவெம்பிரான்றம்பிரானாந்
திருவுருவன்றிமற்றோர்தேவரெத்தேவரென்ன
வருவராதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (௨)

வன்புலால்வேலுமஞ்சேன்வளைக்கையார்கடைக்கணஞ்சே
னென்பெலாமுருகநோக்கியம்பலத்தாடுகின்ற
வென்பொலாமணியையேத்தியினிதருள்பருகமாட்டா
வன்பிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (௩)

கிளியனார்கிளவியஞ்சேனவர்கிறிமுறுவலஞ்சேன்
வெளியநீறாடுமேனிவேதியன்பாதநண்ணித்
துளியுலாங்கண்ணராகித்தொழுதழுதுள்ளநெக்கிங்
களியிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (௪)

பிணியெலாம்வரினுமஞ்சேன்பிறப்பினோடிறப்புமஞ்சேன்
றுணிநிலாவணியினான்றன்றொழும்பரோடழுந்தியம்மா
றிணிநிலம்பிளந்துங்காணாச்சேவடிபரவிவெண்ணீ
றணிகிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (௫)



## பிடித்தபத்து.

### முத்திக்கலப்புரைத்தல்.

உம்பர்கட்கரசேயொழிவறநிறைந்தயோகமேயூற்றையேன்றனக்கு
வம்பெனப்பழுத்தென்குடிமுழுதாண்டுவாழ்வறவாழ்வித்தமருந்தே
செம்பொருட்டுணிவேசீருடைக்கழலேசெல்வமேசிவபெருமானே
யெம்பொருட்டுன்னைச்சிக்கெனப்பிடித்தேனெங்கெழுந்தருளுவதினியே. (௧)

விடைவிடாதுகந்தவிண்ணவர்கோவேவினையனேனுடையமெய்ப்பொருளே
முடைவிடாதடியேன்மூத்தறமண்ணாய்முழுப்புழுக்குரம்பையிற்கிடந்து
கடைபடாவண்ணங்காத்தெனையாண்டகடவுளேகருணைமாகடலே
யிடைவிடாதுன்னைச்சிக்கெனப்பிடித்தேனெங்கெழுந்தருளுவதினியே. (௨)

அம்மையேயப்பாவொப்பிலாமணியேயன்பினில்விளைந்தவாரமுதே
பொய்ம்மையேபெருக்கிப்பொழுதினைச்சுருக்கும்புழுத்தலைப்புலையனேன்ற
செம்மையேயாயசிவபதமளித்தசெல்வமேசிவபெருமானே (னக்குச்
யிம்மையேயுன்னைச்சிக்கெனப்பிடித்தேனெங்கெழுந்தருளுவதினியே. (௩)

அருளுடைச்சுடரேயளிந்ததோர்கனியேபெருந்திறலருந்தவர்க்கரசே
பொருளுடைக்கலையேபுகழ்ச்சியைக்கடந்தபோகமேயோகத்தின்பொலிவே
தெருளிடத்தடியார்சிந்தையுட்புகுந்தசெல்வமேசிவபெருமானே
யிருளிடத்துன்னைச்சிக்கெனப்பிடித்தேனெங்கெழுந்தருளுவதினியே. (௪)

ஒப்புனக்கில்லாவொருவனேயடியேனுள்ளத்துளொளிர்கின்றவொளியே
மெய்ப்பதமறியாவீறிலியேற்குவிழுமியதளித்ததோரன்பே
செப்புதற்கரியசெழுஞ்சுடர்மூர்த்திசெல்வமேசிவபெருமானே
யெய்ப்பிடத்துன்னைச்சிக்கெனப்பிடித்தேனெங்கெழுந்தருளுவதினியே. (௫)

அறவையேன்மனமேகோயிலாக்கொண்டாண்டளவிலாவானந்தமருளிப்
பிறவிவேரறுத்தென்குடிமுழுதாண்டபிஞ்ஞகாபெரியவெம்பொருளே
திறவிலேகண்டகாட்சியேயடியேன்செல்வமேசிவபெருமானே
யிறவிலேயுன்னைச்சிக்கெனப்பிடித்தேனெங்கெழுந்தருளுவதினியே. (௬)

பாசவேரறுக்கும்பழம்பொருடன்னைப்பற்றுமாறடியனேற்கருளிப்
பூசனையுகந்தென்சிந்தையுட்புகுந்துபூங்கழல்காட்டியபொருளே
தேசுடைவிளக்கேசெழுஞ்சுடர்மூர்த்திசெல்வமேசிவபெருமானே
யீசனேயுன்னைச்சிக்கெனப்பிடித்தேனெங்கெழுந்தருளுவதினியே. (௭)

அத்தனேயண்டரண்டமாய்நின்றவாதியேயாதுமீறில்லாச்
சித்தனேபத்தர்சிக்கெனப்பிடித்தசெல்வமேசிவபெருமானே
பித்தனேயெல்லாவுயிருமாய்த்தழைத்துப்பிழைத்தவையல்லையாய்நிற்கு
மெத்தனேயுன்னைச்சிக்கெனப்பிடித்தேனெங்கெழுந்தருளுவதினியே. (௮)

பானினைந்தூட்டுந்தாயினுஞ்சாலப்பரிந்துநீபாவியேனுடைய
வூனினையுருக்கியுள்ளொளிபெருக்கியுலப்பிலாவானந்தமாய
தேனினைச்சொரிந்துபுறம்புறந்திரிந்தசெல்வமேசிவபெருமானே
யானுனைத்தொடர்ந்துசிக்கெனப்பிடித்தேனெங்கெழுந்தருளுவதினியே. (௯)

புன்புலால்யாக்கைபுரைபுரைகனியப்பொன்னெடுங்கோயிலாப்புகுந்தென்
னென்பெலாமுருக்கியெளியையாயாண்டவீசனேமாசிலாமணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமேபிறப்பேயிறப்பொடுமயக்காந்தொடக்கெலாமறுத்தநற்சோதீ
யின்பமேயுன்னைச்சிக்கெனப்பிடித்தேனெங்கெழுந்தருளுவதினியே. (௧௦)

## திருப்புலம்பல்.

### சிவானந்தமுதிர்வு.

பூங்கமலத்தயனொடுமாலறியாதநெறியானே
கோங்கலர்சேர்குவிமுலையாள்கூறாவெண்ணீறாடி
யோங்கெயில்சூழ்திருவாரூருடையானேயடியேனின்
பூங்கழல்களவையல்லாதெவையாதும்புகழேனே. (௧)

சடையானேதழலாடீதயங்குமூவிலைச்சூலப்
படையானேபரஞ்சோதீபசுபதீமழவெள்ளை
விடையானேவிரிபொழில்சூழ்பெருந்துறையாயடியேனா
னுடையானேயுனையல்லாதுறுதுணைமற்றறியேனே. (௨)

உற்றாரையான்வேண்டேனூர்வேண்டேன்பேர்வேண்டேன்
கற்றாரையான்வேண்டேன்கற்பனவுமினியமையுங்
குற்றாலத்தமர்ந்துறையுங்கூத்தாவுன்குரைகழற்கே
கற்றாவின்மனம்போலக்கசிந்துருகவேண்டுவனே. (௩)

## திருப்படையாட்சி.

### சீவோபாதியொழிதல்.

கண்களிரண்டுமவன்கழல்கண்டுகளிப்பனவாகாதே
காரிகையார்கடம்வாழ்விலென்வாழ்வுகடைப்படுமாகாதே
மண்களில்வந்துபிறந்திடுமாறுமறந்திடுமாகாதே
மாலறியாமலர்ப்பாதமிரண்டும்வணங்குதுமாகாதே
பண்களிகூர்தருபாடலொடாடல்பயின்றிடுமாகாதே
பாண்டிநன்னாடுடையான்படையாட்சிகள்பாடுதுமாகாதே
விண்களிகூர்வதொர்வேதகம்வந்துவெளிப்படுமாகாதே
மீன்வலைவீசியகானவன்வந்துவெளிப்படுமாயிடிலே. (௧)

ஒன்றினொடொன்றுமோரைந்தினொடைந்துமுயிர்ப்பறுமாகாதே
யுன்னடியாரடியாரடியோமெனவுய்ந்தனவாகாதே
கன்றைநினைந்தெழுதாயெனவந்தகணக்கதுவாகாதே
காரணமாகுமனாதிகுணங்கள்கருத்தறுமாகாதே
நன்றிதுதீதெனவந்தநடுக்கநடந்தனவாகாதே
நாமுமேலாமடியாருடனேசெலநண்ணுதுமாகாதே
யென்றுமெனன்புநிறைந்தபராவமுதெய்துவதாகாதே
யேறுடையானெனையாளுடைநாயகனென்னுள்புகுந்திடிலே (௨)

பந்தவிகாரகுணங்கள்பறிந்துமறிந்திடுமாகாதே
பாவனையாயகருத்தினில்வந்தபராவமுதாகாதே
யந்தமிலாதவகண்டமுநம்முளகப்படுமாகாதே
யாதிமுதற்பரமாயபரஞ்சுடரண்ணுவதாகாதே
செந்துவர்வாய்மடவாரிடரானவைசிந்திடுமாகாதே
சேலனகண்களவன்திருமேனிதிளைப்பனவாகாதே



யிந்திரஞாலவிடர்ப்பிறவித்துயரேகுவதாகாதே
யென்னுடைநாயகனாகியவீசனெதிர்ப்படுமாயிடிலே. (௩)

என்னணியார்முலையாகமளைந்துடனின்புறுமாகாதே
யெல்லையின்மாக்கருணைக்கடலின்றினிதாடுதுமாகாதே
நன்மணிநாதமுழங்கியெனுள்ளுறநண்ணுவதாகாதே
நாதனணித்திருநீற்றினைநித்தலுநண்ணுவதாகாதே
மன்னியவன்பரிலென்பணிமுந்துறவைகுவதாகாதே
மாமறையும்மறியாமலர்ப்பாதம்வணங்குதுமாகாதே
யின்னியற்செங்கழுநீர்மலரென்றலையெய்துவதாகாதே
யென்னையுடைப்பெருமானருளீசனெழுந்தருளப்பெறிலே. (௪)

மண்ணினின்மாயைமதித்துவகுத்தமயக்கறுமாகாதே
வானவருமறியாமலர்ப்பாதம்வணங்குதுமாகாதே
கண்ணிலிகாலமனைத்தினும்வந்தகலக்கறுமாகாதே
காதல்செய்யுமடியார்மனமின்றுகளித்திடுமாகாதே
பெண்ணலியாணெனநாமெனவந்தபிணக்கறுமாகாதே
பேறறியாதவனேகபவங்கள்பிழைத்தனவாகாதே
யெண்ணிலியாகியசித்திகள்வந்தெனையெய்துவதாகாதே
யென்னையுடைப்பெருமானருளீசனெழுந்தருளப்பெறிலே. (௫)

பொன்னியலுந்திருமேனிவெண்ணீறுபொலிந்திடுமாகாதே
பூமழைமாதவர்கைகள்குவிந்துபொழிந்திடுமாகாதே
மின்னியனுண்ணிடையார்கள்கருத்துவெளிப்படுமாகாதே
வீணைமுரன்றெழுமோசையிலின்பமிகுத்திடுமாகாதே
தன்னடியாரடியென்றலைமீதுதழைப்பனவாகாதே
தானடியோமுடனேயுயவந்துதலைப்படுமாகாதே
யின்னியமெங்குநிறைந்தினிதாகவியம்பிடுமாகாதே
யென்னைமுனாளுடையீசனெனத்தனெழுந்தருளப்பெறிலே. (௬)

சொல்லியலாதெழுதூமணியோசைசுவைதருமாகாதே
துண்ணெனவென்னுளமன்னியசோதிதொடர்ந்தெழுமாகாதே
பல்லியல்பாயபரப்பறவந்தபராபரமாகாதே
பண்டறியாதபராநுபவங்கள்பரந்தெழுமாகாதே
வில்லியனன்னுதலார்மயலின்றுவிளைந்திடுமாகாதே
விண்ணவருமறியாதவிழுப்பொருளிப்பொருளாகாதே
யெல்லையிலாதனவெண்குணமானவையெய்திடுமாகாதே
யிந்துசிகாமணியெங்களையாளவெழுந்தருளப்பெறிலே. (௭)

சங்குதிரண்டுமுரன்றெழுமோசைதழைப்பனவாகாதே
சாதிவிடாதகுணங்கணம்மோடுசலித்திடுமாகாதே
யங்கிதுநன்றிதுநன்றெனுமாயையடங்கிடுமாகாதே
யாசையெலாமடியாரடியோமெனுமத்தனையாகாதே
செங்கயலொண்கண்மடந்தையர்சிந்தைதிளைப்பனவாகாதே
சீரடியார்கள்சிவானுபவங்கடெரிந்திடுமாகாதே
யெங்குநிறைந்தமுதூறுபரஞ்சுடரெய்துவதாகாதே
யீறறியாமறையோனெனையாளவெழுந்தருளப்பெறிலே. (௮)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சோப்பதிகம்.

### அநுபவவழியறியாமை.

முத்திநெறியறியாதமூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப்பழவினைகள்பாறும்வண்ணஞ்
சித்தமலமறுவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வத்தனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௧)

நெறியல்லாநெறிதன்னைநெறியாகநினைவேனைச்
சிறுநெறிகள்சேராமேதிருவருளேசேரும்வண்ணங்
குறியொன்றுமில்லாதகூத்தன்றன்கூத்தையெனக்
கறியும்வண்ணமருளியவாறார்பெறுவாரச்சோவே. (௨)

பொய்யெல்லாமெய்யென்றுபுணர்முலையார்போகத்தே
மையலுறக்கடவேனைமாளாமேகாத்தருளித்
தையலிடங்கொண்டபிரான்றன்கழலேசேரும்வண்ண
மையனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௩)

மண்ணதனிற்பிறந்தெய்த்துமாண்டுவிழக்கடவேனை
யெண்ணமிலாவன்பருளியெனையாண்டிட்டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீறணிவித்துத்தூய்நெறியேசேரும்வண்ண
மண்ணலெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௪)

பஞ்சாயவடிமடவார்கடைக்கண்ணாலிடர்ப்பட்டு
நெஞ்சாயதுயர்கூரநிற்பேனுன்னருள்பெற்றே
னுய்ஞ்சேனுனுடையானேயடியேனைவருகவென்
றஞ்சேலென்றருளியவாறார்பெறுவாரச்சோவே. (௫)

வெந்துவிழுமுடற்பிறவிமெய்யென்றுவினைபெருக்கிக்
கொந்துகுழற்கோல்வளையார்குவிமுலைமேல்வீழ்வேனைப்
பந்தமறுத்தெனையாண்டுபரிசறவென்றுரிசுமறுத்
தந்தமெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௬)

தையலார்மையலிலேதாழ்ந்துவிழக்கடவேனைப்
பையவேகொடுபோந்துபாசமெனுந்தாழுருவி
யுய்யுநெறிகாட்டுவித்திட்டோங்காரத்துட்பொருளை
யையனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௭)

சாதல்பிறப்பென்னுந்தடஞ்சுழியிற்றடுமாறிக்
காதலின்மிக்கணியிழையார்கலவியிலேவிழுவேனை
மாதொருகூறுடையபிரான்றன்கழலேசேரும்வண்ண
மாதியெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௮)

செம்மைநலமறியாதசிதடரொடுந்திரிவேனை
மும்மைமலமறுவித்துமுதலாயமுதல்வன்று
னம்மையுமோர்பொருளாக்கிநாய்சிவிகையேற்றுவித்த
வம்மையெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௯)

முற்றிற்று.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவிசைப்பா.

ஒளிவளர்விளக்கேயுலப்பிலாவொன்றேயுணர்வுசூழ்கடந்ததோருணர்வே
தெளிவளர்பளிங்கின்றிரண்மணிக்குன்றேசித்தத்துட்டித்திக்குந்தேனே
யளிவளருள்ளத்தானந்தக்கனியேயம்பலமாடரங்காக
வெளிவளர்தெய்வக்கூத்துகந்தாயைத்தொண்டனேன்விளம்புமாவிளம்பே. ( )

இடர்கெடுத்தென்னையாண்டுகொண்டென்னுளிருட்பிழம்பறவெறிந்தெழுந்த
சுடர்மணிவிளக்கினுள்ளொளிவிளங்குந்தூயநற்சோதியுட்சோதி
யடல்விடைப்பாகாவம்பலக்கூத்தாவயனொடுமாலறியாமைப்
படரொளிபரப்பிப்பரந்துநின்றாயைத்தொண்டனேன்பணியுமாபணியே. (௨)

தற்பரம்பொருளேசசிகண்டசிகண்டாசாமகண்டாவண்டவாண
நற்பெரும்பொருளாயுரைகலந்துன்னையென்னுடைநாவினானவில்வா
னற்பனென்னுள்ளத்தளவிலாவுன்னைத்தந்தபொன்னம்பலத்தாடி
கற்பமாயுலகாயல்லையானாயைத்தொண்டனேன்கருதுமாகருதே. (௩)

கோலமேமேலைவானவர்கோவேகுணங்குறியிறந்ததோர்குணமே
காலமேகங்கைநாயகாவெங்கள்காலகாலாகாமநாசா
வாலமேயமுதுண்டம்பலஞ்செம்பொற்கோயில்கொண்டாடவல்லானே
ஞாலமேதமியேனற்றவத்தாயைத்தொண்டனேனணுகுமாறணுகே. (௪)

நீறணிபவளக்குன்றமேநின்றநெற்றிக்கண்ணுடையதோர்நெருப்பே
வேறணிபுவனபோகமேயோகவெள்ளமேமேருவில்வீரா
வாறணிசடையெம்மற்புதக்கூத்தாவம்பொன்செயம்பலத்தரசே
யேறணிகொடியெம்மீசனேயுன்னைத்தொண்டனேனிசையுமாறிசையே. (௫)

தனதனற்றோழாசங்கராசூலபாணியேதாணுவேசிவனே
கனகநற்றூணேகற்பகக்கொழுந்தேகண்கண்மூன்றுடையதோர்கரும்பே
யனகனேகுமரவிநாயகசனகவம்பலத்தமரசேகரனே
நுனகழலிணையென்னெஞ்சினுள்ளினிதாத்தொண்டனேனுகருமாறுகரே. (௬)

மடங்கலாய்க்கனகன்மார்புகீண்டானுக்கருள்புரிவள்ளலேமருளா
ரிடங்கொண்முப்புரம்வெந்தவியவைதிகத்தேரேறியவேறுசேவகனே
யடங்கவல்லரக்கனருட்டிருவரைக்கீழடர்த்தபொன்னம்பலத்தரசே
விடங்கொள்கண்டத்தெம்விடங்கனேயுன்னைத்தொண்டனேன்விரும்புமாவிரும்பே.

உயர்கொடியாடைமிடைபடலத்தினூமைதூமப்படலத்தின்
பெயர்நெடுமாடத்தகிற்புகைப்படலம்பெருகியபெரும்பற்றப்புலியூர்ச்
சியரொளிமணிகணிரந்துசேர்கனகநிறைந்தசிற்றம்பலக்கூத்தா
மயர்வறுமமரர்மகுடந்தோய்மலர்ச்சேவடிகளென்மனத்துவைத்தருளே. (௮)

பொருவரைப்புயத்தின்மீமிசைப்புலித்தோல்பொடியணிபூணூலகலம்
பெருவரைபுரைதிண்டோளுடன்காணப்பெற்றவர்பெரும்பற்றப்புலியூர்த்
திருமருவுதரத்தார்திசைமிடைப்படஞ்செய்சிற்றம்பலக்கூத்த
வுருமருவுதரத்தனிவடந்தொடர்ந்துகிடந்ததென்னுணர்வுணர்ந்துணர்ந்தே. (௯)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவாகியயோகமும்போகமுமாயுயிராளியென்னுமென்பொன்னொருநாட்
சிறவாதவர்புரஞ்செற்றகொற்றச்சிலைகொண்டுபன்றிப்பின்சென்றுநின்ற
மறவாவென்னும்மணிநீருவிமகேந்திரமாமலைமேலுறையுங் [யே.
குறவாவென்னுங்குணக்குன்றேயென்னுங்குலாத்தில்லையம்பலக்கூத்தனை

ஏகநாயகனையிமையவர்க்கரசையென்னுயிர்க்கமுதினையெதிரில்
போகநாயகனைப்புயல்வணற்கருளிப்பொன்னெடுஞ்சிவிகையாவூர்ந்த
மேகநாயகனைமிகுதிருவீழிமிழலைவிண்ணிழிசெழுங்கோயில்
யோகநாயகனையன்றிமற்றொன்றுமுண்டெனவுணர்கிலேன்யானே. (௧௧)

கற்றவர்விழுங்குங்கற்பகக்கனியைக்கரையிலாக்கருணைமாகடலை
மற்றவரறியாமாணிக்கமலையைமதிப்பவர்மனமணிவிளக்கைச்
செற்றவர்புரங்கள்செற்றவெஞ்சிவனைத்திருவீழிமிழலைவீற்றிருந்த
கொற்றவன்றன்னைக்கண்டுகண்டுள்ளங்குளிரவென்கண்குளிர்ந்தனவே. ()

மண்டலத்தொளியைவிலக்கியானுகர்ந்தமருந்தையென்மாறிலாமணியைப்
பண்டலரயன்மாற்கரிதயாயடியார்க்கெளியதோர்பவளமால்வரையை
விண்டலர்மலர்வாய்வேரிவார்பொழில்சூழ்திருவீழிமிழலையூராளுங்
கொண்டலங்கண்டத்தெங்குருமணியைக்குறுகவல்வினைகுறுகாவே. (௧௩)

கணம்விரிகுடுமிச்செம்மணிக்கவைநாக்கறையணற்கட்செவிப்பகுவாய்ப்
பணம்விரிதுத்திப்பொறிகொள்வெள்ளெயிற்றுப்பாம்பணிபரமர்தங்கோயின்
மணம்விரிதருதேமாம்பொழின்மொழுப்பின்மழைதவழ்வளரிளங்கமுகந்
திணர்நிரையரும்புபெரும்பற்றப்புலியூர்த்திருவளர்திருச்சிற்றம்பலமே (௧௪)

புவனநாயகனேயகவுயிர்க்கமுதேபூரணாவாரணம்பொழியும்
பவளவாய்மணியேபணிசெய்வார்க்கிரங்கும்பசுபதீபன்னகாபரணா
வவனிஞாயிறுபோன்றருள்புரிந்தடியேனகத்திலுமுகத்தலைமூதூர்த்
தவளமாமணிப்பூங்கோயிலுமமர்ந்தாய்தனியனேன்றனிமைநீக்குதற்கே. (௧௫)

அன்னமாய்விசும்புபறந்தயன்றேடவங்ஙனேபெரியநீசிறிய
வென்னையாள்விரும்பியென்மனம்புகுந்தவெளிமையையென்றுநான்மறக்கே
முன்னமாலறியாவொருவனாமிருவாமுக்கணாநாற்பெருந்தடந்தோட் [ன்
கன்னலேதேனேயமுதமேகங்கைகொண்டசோளேச்சரத்தானே. (௧௬)

சுருதிவானவனாந்திருநெடுமாலாஞ்சுந்தரவிசும்பினிந்திரனும்
பரிதிவானவனும்படர்சடைமுக்கட்பகவனுமகவுயிர்க்கமுதா
மெருதுவாகனனுமெயில்கண்மூன்றெரித்தவேறுசேவகனுமாம்பின்னுங்
கருதுவார்கருதுமுருவமாங்கங்கைகொண்டசோளேச்சரத்தானே. (௧௭)

திருவருள்புரிந்தாளாண்டுகொண்டிங்ஙன்சிறியனுக்கினியதுகாட்டிப்
பெரிதருள்புரிந்தானந்தமேதருநின்பெருமையிற்பெரியதொன்றுளதே
மருதரசிருங்கோங்ககின்மாஞ்சாடிவரைவளங்கவர்ந்திழிவைகைப்
பொருதிரைமருங்கோங்காவணவீதிப்பூவணங்கோயில்கொண்டாயே. (௧௮)

உலகெலாந்தொழவந்தெழுகதிர்ப்பரிதியொன்றுநூறாயிரகோடி
யலகெலாம்பொதிந்ததிருவுடம்பச்சோவங்ஙனேயழகிதோவரணம்
பலகுலாம்படைசெய்நெடுநிலைமாடம்பருவரைஞாங்கர்வெண்டிங்க
ளிலகுலாம்பதணத்திஞ்சிசூழ்தஞ்சையிராசராசேச்சரத்திவர்க்கே. (௧௯)

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சேந்தனாரருளிச்செய்த

# திருப்பல்லாண்டு.

மன்னுகதில்லைவளர்கநம்பத்தர்கள்வஞ்சகர்போயகலப்
பொன்னின்செய்மண்டபத்துள்ளேபுகுந்துபுவனியெல்லாம்விளங்க
அன்னநடைமடவாளுமைகோனடியோமுக்கருள்புரிந்து
பின்னைப்பிறவியறுக்கநெறிதந்தபித்தற்குப்பல்லாண்டுகூறுதுமே. (௧)

மிண்டுமனத்தவர்போமின்கண்மெய்யடியார்கள்விரைந்துவம்மின்
கொண்டுங்கொடுத்துங்குடிகுடியீசற்காட்செய்மின்குழாம்புகுந்
தண்டங்கடந்தபொருளளவில்லதோரானந்தவெள்ளப்பொருள்
பண்டுமின்றுமென்றுமுள்ளபொருளென்றேபல்லாண்டுகூறுதுமே. (௨)

நிட்டையிலாவுடனீத்தென்னையாண்டநிகரிலாவண்ணங்களுஞ்
சிட்டன்சிவனடியாரைச்சீராட்டுந்திறங்களுமேசிந்தித்
தட்டமூர்த்திக்கென்னகநெகவூறுமமிர்தினுக்காலநிழற்
பட்டனுக்கென்னைத்தன்பாற்படுத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௩)

சொல்லாண்டசுருதிப்பொருள்சோதித்ததூய்மனத்தொண்டருள்ளீர்
சில்லாண்டிற்சிதையுஞ்சிலதேவர்சிறுநெறிசேராமே
வில்லாண்டகனகத்திரண்மேருவிடங்கன்விடைப்பாகன்
பல்லாண்டென்னும்பதங்கடந்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௪)

புரந்தரன்மாலயன்பூசலிட்டோலமிட்டின்னம்புகலரிதா
யிரந்திரந்தழைப்பவென்னுயிராண்டகோவினுக்கென்செயவல்லமென்றுங்
கரந்துங்கரவாதகற்பகனாகிக்கரையில்கருணைக்கடல்
பரந்துநிரந்தும்வரம்பிலாப்பாங்கற்கேபல்லாண்டுகூறுதுமே. (௫)

சேவிக்கவந்தயனிந்திரன்செங்கண்மாலெங்குந்திசைதிசையாக்
கூவிக்கவர்ந்துநெருங்கிக்குழாங்குழாமாய்நின்றுகூத்தாடு
மாவிக்கமுதையென்னார்வத்தனத்தினையப்பனையொப்பமரர்
பாவிக்கும்பாவகத்தப்புறத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௬)

சீருந்திருவும்பொலியச்சிவலோகநாயகன்சேவடிக்கீ
ழாரும்பெறாதவறிவுபெற்றேன்பெற்றதார்பெறுவாருலகி
லூருமுலகுங்கழறவுழறியுமைமணவாளனுக்காட்
பாரும்விசும்புமறியும்பரிசுநாம்பல்லாண்டுகூறுதுமே. (௭)

சேலுங்கயலுந்திளைக்குங்கண்ணாரிளங்கொங்கையிற்செங்குங்குமம்
போலும்பொடியணிமார்பிலங்குமென்றுபுண்ணியர்போற்றிசைப்ப
மாலுமயனுமறியாநெறிதந்துவந்தென்மனத்தகத்தே
பாலுமமுதமுமொத்துநின்றானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௮)

பாலுக்குப்பாலகன்வேண்டியழுதிடப்பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச்சக்கரமன்றருள்செய்தவன்மன்னியதில்லைதன்னு
ளாலிக்குமந்தணர்வாழ்கின்றசிற்றம்பலமேயிடமாகப்
பாலித்துநட்டம்பயிலவல்லானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௯)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# புராணம்.

## சிவபெருமான்.

உலகெலாமுணர்ந்தோதற்கரியவ
னிலவுலாவியநீர்மலிவேணிய
னலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம். (க)

ஆதியாய்நடுவுமாகியளவிலாவளவுமாகிச்
சோதியாயுணர்வுமாகித்தோன்றியபொருளுமாகிப்
பேதியாவேகமாகிப்பெண்ணுமாயாணுமாகிப்
போதியாநிற்குந்தில்லைப்பொதுநடம்போற்றிபோற்றி. (உ)

கற்பனைகடந்தசோதிகருணையேயுருவமாகி
யற்புதக்கோலநீடியருமறைச்சிரத்தின்மேலாஞ்
சிற்பரவியோமமாகுந்திருச்சிற்றம்பலத்துணின்று
பொற்புடனடஞ்செய்கின்றபூங்கழல்போற்றிபோற்றி. (ங)

வேதநாயகனேபோற்றிவிண்ணவர்தலைவாபோற்றி
மாதொருபாகாபோற்றிமறுசமயங்கண்மாளப்
பேதகஞ்செய்வாய்போற்றிபிஞ்ஞகாபோற்றியான்செய்
பாதகமனைத்துந்தீர்க்கும்பராபராபோற்றிபோற்றி. (ச)

நாரணனென்னுந்தேவுநான்முகத்தவனுமுக்கட்
பூரணன்றானுமாகிப்புவிபடைத்தளித்துமாற்றி
யாரணமுடிவுந்தேறுவநாதியாயுயிர்கட்கெல்லாங்
காரணனாயமேலோன்கழலிணைகருத்துள்வைப்பாம். (ரு)

ஏகனேபோற்றியார்க்குமீசனேபோற்றியம்மை
பாகனேபோற்றிமேலாம்பரஞ்சுடருருவேபோற்றி
மேகமார்களனேபோற்றிவிடைமிசைவருவாய்போற்றி
மோகமார்தக்கன்வேள்விமுடித்திடுமுதல்வாபோற்றி. (சு)

ஐந்துபேரறிவுங்கண்களேகொள்ளவளப்பருங்கரணங்கணான்குஞ்
சிந்தையேயாகக்குணமொருமூன்றுந்திருந்துசாத்துவிகமேயாக
விந்துவாழ்சடையானாடுமானந்தவெல்லையிறனிப்பெருங்கூத்தின்
வந்தபேரின்பவெள்ளத்துட்டிளைத்துமாறிலாமகிழ்ச்சியின்மலர்ந்தார். (எ)

சொல்லுவதறியேன்வாழிதோற்றியதோற்றம்போற்றி
வல்லைவந்தருளியென்னைவழித்தொண்டுகொண்டாய்போற்றி
யெல்லையிலின்பவெள்ளமெனக்கருள்செய்தாய்போற்றி
தில்லையம்பலத்துளாடுஞ்சேவடிபோற்றியென்னா. (அ)

## உமாதேவியார்.

செறிதருமுயிர்தொறுந்திகழ்ந்துமன்னிய
மறுவறுமாணிடமரபின்மேவியே



யறுவகைநெறிகளும்பிறவுமாக்கிய
விறைவிதன்மலரடியிறைஞ்சியேத்துவாம். (கூ)

பரந்தெழுந்தசமண்முதலாம்பரசமயவிருணீங்கச்
சிரந்தழுவுசைவநெறித்திருநீற்றினொளிவிளங்க
வரந்தைகெடப்புகலியர்கோனமுதுசெயத்திருமுலைப்பால்
சுரந்தளித்தசிவகாமசுந்தரிபூங்கழல்போற்றி. (க0)

மன்றின்மணிவிளக்கெனலாமருவுமுககளைபோற்றி
யொன்றியமங்கலநாணினொளிபோற்றியுலகும்பர்
சென்றுதொழவருள்சுரக்குஞ்சிவகாமசுந்தரித
னின்றதிருநிலைபோற்றிநிலவுதிருவடிபோற்றி. (கக)

## விநாயகக்கடவுள்.

திருவுங்கல்வியுஞ்சீருந்தழைக்கவுங்
கருணைபூக்கவுந்தீமையைக்காய்க்கவும்
பருவமாய்நமதுள்ளம்பழுக்கவும்
பெருகுமாழத்துப்பிள்ளையைப்பேணுவாம். (கஉ)

நல்லசொற்பொருணுணாடாத்தவு
மெல்லைகாணரும்பேரின்பமெய்தவும்
வெல்லும்யானைமுகத்தினைமேவிவாழ்
வல்லபைக்குரியானைவழுத்துவாம். (கங)

திங்களங்குழவியென்னத்திகழொருமருப்பிற்சோதி
தங்குகிம்புரிவயங்கத்தடமணிமகுடந்தாங்கித்
துங்கநல்வரங்கணல்குந்தூயசிரிராமசேதுப்
புங்கவர்வணங்கும்யானைமுகத்தனைப்போற்றல்செய்வாம். (கச)

## வயிரவக்கடவுள்.

பரமனைமதித்திடாப்பங்கயாசன
னொருதலைகிள்ளியேயொழிந்தவானவர்
குருதியுமகந்தையுங்கொண்டுதண்டமுன்
புரிதருவடுகனைப்போற்றிசெய்குவாம். (கரு)

வெஞ்சினப்பரியழன்மீதுபோர்த்திடு
மஞ்சனப்புகையெனவாலமாமெனச்
செஞ்சுடர்ப்படிவமேற்செறித்தமாமணிக்
கஞ்சுகக்கடவுள்பொற்கழல்களேத்துவாம். (கசு)

## வீரபத்திரக்கடவுள்.

அடைந்தவியுண்டிடுமமரர்யாவரு
முடிந்திடவெருவியேமுனிவர்வேதிய
ருடைந்திடமாமகமொடியத்தக்கனைத்
தடிந்திடுசேவகன்சரணம்போற்றுவாம். (கஎ)

## சுப்பிரமணியக்கடவுள்.

பன்னிருகரத்தாய்போற்றிபசும்பொன்மாமயிலாய்போற்றி
முன்னியகருணையாறுமுகப்பரம்பொருளேபோற்றி
கன்னியரிருவர்நீங்காக்கருணைவாரிதியேபோற்றி
யென்னிருகண்ணேகண்ணுளிருக்குமாமணியேபோற்றி. (கஅ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறிருமுகங்கள்போற்றிமுகம்பொழிகருணைபோற்றி
யேவருந்துதிக்கநின்றவீராறுதோள்போற்றிகாஞ்சி
மாவடிவைகுஞ்செவ்வேண்மலரடிபோற்றியன்னான்
சேவலுமயிலும்போற்றிதிருக்கைவேல்போற்றிபோற்றி. (௧௯)

ஐந்தநமவைந்துமுகர்தந்தமுருகேசநமகங்கையுமைதன்
மைந்தநமபன்னிருபுயத்தநமநீபமலர்மாலைபுனையுந்
தந்தைநமவாறுமுகவாதிநமசோதிநமதற்பரமதா
மெந்தைநமவென்றுமிளையோய்நமகுமாரநமவென்றுதொழுதார். ()

ஆறிருதடந்தோள்வாழ்கவறுமுகம்வாழ்கவெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்ககுக்குடம்வாழ்கசெவ்வே
ளேறியமஞ்ஞைவாழ்கயானைதன்னணங்குவாழ்க
மாறிலாவள்ளிவாழ்கவாழ்கசீரடியரெல்லாம். (௨௧)

விரிஞ்சன்மாதேவராலும்வெலற்கரும்விறலோனாகிப்
பெருஞ்சுரர்பதமும்வேதவொழுக்கமும்பிறவுமாற்றி
யருஞ்சிறையவர்க்குச்செய்தவவுணர்கோனாவிகொள்வான்
பரஞ்சுடருருவாய்வந்தகுமரனைப்பணிதல்செய்வாம். (௨௨)

## விஷ்ணு.

மீனமாகியுங்கமடமதாகியுமேருவையெடுக்குந்தா
ளேனமாகியுநரவரியாகியுமெண்ணருங்குறளாயுங்
கூனல்வாய்மழுத்தரித்தகோவாகியுமரக்கரைக்கொலைசெய்த
வானநாயகனாகியுநின்றமால்மலரடிமறவேனே. (௨௩)

மீனமைகோலநெடுநரசிங்கமாகிநிலம்விரகாலளந்தகுறளா
யானதுசீறுமழுவல்வில்லுவெல்லுமுனையலமுற்றசெங்கையவராய்
வானுடர்வந்துதொழமண்ணுடர்யாவரையுமடிவிக்கவந்தவடிவாய்
நானிலவிதங்கொள்பரியாளாகநின்றருணாராயணாயநமவே. (௨௪)

## இலக்குமி.

செங்கமலப்பொலந்தாதிற்றிகழ்ந்தொளிருமெழின்மேனித்திருவேவேலை
யங்கணுலகிருடீரக்குமலர்கதிராய்வெண்மதியாயமரர்க்கூட்டும்
பொங்கழலாயுலகளிக்கும்பூங்கொடியேநெடுங்கானிற்பொருப்பின்மண்ணில்
எங்குளைநீயவணன்றேமல்லல்வளஞ்சிறந்தோங்கியிருப்பதம்மா. (௨௫)

## சரசுவதி.

தாவறுமுலகெலாந்தந்தநான்முகத்
தேவுதன்றுணைவியாய்ச்செறிந்தபல்லுயிர்
நாவுதொறிருந்திடுகலைக்கொள்வாணிதன்
பூவடிமுடிமிசைப்புனைந்துபோற்றுவாம். (௨௬)

## ஐயனார்.

பையராவமணியானும்பரம்பொருண்முதலுநல்கு
மையனேயோலம்விண்ணோர்க்காதியேயோலஞ்செண்டார்
கையனேயோலமெங்கள்கடவுளேயோலமெய்யர்
மெய்யனேயோலந்தொல்சீர்வீரனேயோலமோலம். (௨௭)



## திருநந்திதேவர்.

ஐயிருபுராணநூலமலற்கோதியுஞ்
செய்யபன்மறைகளுந்தெரிந்துமாயையான்
மெய்யறுசூள்புகல்வியாதனீட்டிய
கையடுநந்திதன்கழல்களேத்துவாம். (௨௮)

## வேற்படை.

அந்தமிலொளியின்சீராலறுமுகம்படைத்தபண்பா
லெந்தைகணின்றும்வந்தவியற்கையாற்சத்தியாம்பேர்
தந்திடும்பனுவல்பெற்றதன்மையாற்றனிவேற்பெம்மான்
கந்தனேயென்னநின்னைக்கண்டுளக்கவலைதீர்ந்தேம். (௨௯)

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண்டைவல்வினையினாற்பாயுடுத்துழல்
குண்டரைவென்றுமுன்கூடல்வைகியே
வெண்டிருநீற்றொளிவிளங்கச்செய்திடு
தண்டமிழ்விரகன்மெய்த்தாள்கள்போற்றுவாம். (௩௰)

## திருநாவுக்கரசுநாயனார்.

பொய்யுரைநூல்சிலபுகலுந்தீயமண்
கையர்கள்பிணித்துமுன்கடலகத்திடும்
வெய்யகற்றோணியாய்மிதப்பமேற்படு
துய்யசொல்லரசர்தாடொழுதுபோற்றுவாம். (௩௧)

## சுந்தரமூர்த்திநாயனார்.

வறந்திடுபொய்கைமுன்னிரம்பமற்றவ
ணுறைந்திடுமுதலைவந்துதிப்பவன்னதா
லிறந்திடுமகன்வரத்தெய்தப்பாடலொன்
றறைந்திடுசுந்தரனடிகள்போற்றுவாம். (௩௨)

## மாணிக்கவாசகசுவாமிகள்.

கந்தமொடுயிர்படுங்கணபங்கமெனச்
சிந்தைகொள்சாக்கியர்தியங்கமூகராய்
முந்தொருமூகையைமொழிவித்தெந்தைபால்
வந்திடுமடிகளைவணக்கஞ்செய்குவாம். (௩௩)

## திருத்தொண்டர்.

அண்டருநான்முகத்தயனும்யாவருங்
கண்டிடவரியதோர்காட்சிக்கண்ணவா
யெண்டகுசிவனடியெய்திவாழ்திருத்
தொண்டர்தம்பதமலர்தொழுதுபோற்றுவாம். (௩௪)

## சண்டேசுரர்.

பொன்னனக்கடுக்கைமுடிவேய்ந்தபுனிதற்கமைக்கும்பொருளன்றி
மின்னுங்கலனுடைகள்பிறவும்வேறுதனக்கென்றமையாமே
மன்னுந்தலைவன்பூசனையின்மல்கும்பயனையடியார்கள்
துன்னும்படிபூசனைகொள்ளுந்தூயோனடித்தாமரைதொழுவாம். (௩௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## அருணகிரிநாதசுவாமிகள் அருளிச்செய்த

# திருப்புகழ்.

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
யீசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொரு ணீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்தபெரு மானே.

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ கற்பக மெனவினை கடிதேகு
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன் மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை யுத்தமி புதல்வனை மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனின் முற்பட வெழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த வச்சிவ னுறைரத மச்சது பொடிசெய்த வதிதீர
வத்துய ரதுகொடு சுப்பிர மணிபடு மப்புன மதனிடை யிபமாகி
யக்குற மகளுட னச்சிறு முருகனை யக்கண மணமருள் பெருமானே. ()

முத்தைத்தரு பத்தித்திருநகை யத்திக்கிறை சத்திச்சரவண
முத்திக்கொரு வித்துக்குருபர னெனவோது
முக்கட்பர மற்குச்சுருதியின் முற்பட்டது கற்பித்திருவரு
முப்பத்துமு வர்க்கத்தமரரு மடிபேணப்
பத்துத்தலை தத்தக்கணைதொடு மொற்றைக்கிரி மத்தைப்பொருதொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியி லிரவாகப்
பத்தற்கிர தத்தைக்கடவிய பச்சைப்புயன் மெச்சித்தருபொருள்
பட்சத்தொடு ரட்சித்தருளுவ தொருநாளே
தித்தித்திசை யொக்கப்பரிபுர நிர்த்தப்பதம் வைத்துப்பயிரவி
திக்கொக்கந டிக்கக்கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி வட்டக்கலைகொடு சித்ரப்பவு ரிக்குத்திகுதிகு
திக்குத்திகு திக்குத்தரிகட வெனவோதுங்
கொத்துப்பறை கொட்டக்களமிசை குக்குக்குகு குக்குக்குகுகுகு
குத்திப்புதை புக்குப்பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற்றவுணரை வெட்டிப்பலியிட்டுக்குலகிரி
குத்துப்பட வொத்துப்பொரவல பெருமானே. (௨)

அருக்குமங்கையர் மலரடிவருடியுங் கருத்தறிந்துபி னரைதனிலுடைதனை
யவிழ்த்துமங்குள வரசிலைதடவியு மிருதோளுற்
றணைத்துமங்கையி னடிதொறுநகமெழ வுதட்டைமென்றுப லிடுகுறிகளுமி
வடிக்களந்தனின் மயில்குயில்புறவென மிகவாய்விட் (ட



டுருக்குமங்கியின் மெழுகெனவுருகிய சித்தமிஞ்சிடு மனுபவமுறுபல
முறைக்கையின்கனி நிகரெனவிலகிய முலைமேல்வீழ்ந்
திருக்கலங்கிமெ யுருகிடவமுதகு பெருத்தவுந்தியின் முழுகிமெயுணர்வற
வுழைத்திடுங்கன கலவியைமகிழ்வது தவிர்வேனோ
இருக்குமந்திர மெழுவகைமுனிபெற வுரைத்தசம்ப்ரம சரவணபவகுக
விதத்தவிங்கித மிலகியவறுமுக வெழில்வேளென்
றிலக்கணங்களு மியலிசைகளுமிக விரிக்குமம்பல மதுரிதகவிதனை
யியற்றுசெந்தமிழ் விதமொடுபுயமிசை புனைவோனே
செருக்குமம்பல மிசைதனிலசைவுற நடித்தசங்கரர் வழிவழியடியவர்
திருக்குருந்தடி யருள்பெறவருளிய குருநாதர்
திருக்குழந்தையு மெனவவர்வழிபடு குருக்களின்றிற மெனவருபெரியவ
திருப்பரங்கிரி தனிலுறைசரவண பெருமானே. (௩)

கறுக்குமஞ்சன விழியிணையயில்கொடு நெருக்கிநெஞ்சற வெறிதருபொழுதொ
கனிக்குளின்சுவை யமுதகுமொருசிறு நகையாலே (ரு
களக்கொடுங்கலி வலைகொடுவிசிறியெ மனைக்கெழுந்திரு மெனமனமுருக
கவற்சிகொண்டிட மனைதனிலழகொடு கொடுபோகி (வொர்
நறைத்தபஞ்சணை மிசைதனின்மனமுற வளைத்தனந்தலி னிணைமுலையெதிர்
நகத்தழுந்திட வமுதிகழ்பருகியு மிடறூடே (பொர
நடித்தெழுங்குரல் குமுகுமுகுமுவென விசைத்துநன்கொடு மனமதுமறுகி
நழுப்புநஞ்சன சிறுமியடியாற வருள்வாயே (ட
நிறைத்ததெண்டிரை மொகுமொகுமொகுவென வுரைத்தகஞ்சுகி முடிநெறு
நிரைத்தவண்டமு கடுகிடுகிடுவெனவரைபோலும் (நெறுவென
நிவர்த்ததிண்கழ னிசிசரருரமொடு சிரக்கொடுங்குலை மலைபுரைதரவிரு
நிணக்குழம்பொடு குருதிகள்சொரிதர வடுதீரா
திறற்கருங்குழ லுமையவளருளுறு புழைக்கைமும்மத கயமுகமிகவுள
சிவக்கொழுந்தன கணபதியுடன்வரு மிளையோனே
சினத்தொடுஞ்சம னுதைபடநிறுவிய பரற்குளன்புறு புதல்வநன்மணியுரு
திருப்பரங்கிரி தனிலுறைசரவண பெருமானே. (௪)

சருவும்படி வந்தன னிங்கித மதனின்றிட அம்புலியுஞ்சுடு
தழல்கொண்டிட மங்கையர்கண்களின் வசமாகிச்
சயிலங்கொளு மன்றல்பொருந்திய பொழிலின்பயில் தென்றலுமொன்றிய
தடவஞ்சுனை துன்றியெழுந்திடு திறமான
இரவும்பக லந்தியுநின்றிடு குயில்வந்திசை தெந்தனவென்றிட
விருகண்கள் துயின்றிடலின்றியு மயலான
விவனெஞ்சுப தன்பதனென்றிட மயல்கொண்டுவ ருந்தியவஞ்சக
னினியுன்றன்ம லர்ந்திலகும்பத மடைவேனோ
திருவென்றிவி ளங்கியவண்டர்கள் மனையின்றயி ருண்டவனெண்டிசை
திகழும்புகழ் கொண்டவன்வண்டமிழ் பயில்வோர்பின்
திரிகின்றவன் மஞ்சுநிறம்புனை பவன்மிஞ்சுதி றங்கொளவென்றடல்
செயதுங்கமு குந்தன்மகிழ்ந்தருள் மருகோனே
மருவுங்கட றுந்துமியுங்குட முழவங்கள்கு மின்குமினென்றிட
வளமொன்றிய செந்திலில்வந்தருள் முருகோனே
மதியுங்கதி ரும்புயலுந்தின மறுகும்படி யண்டமிலங்கிட
வளர்கின்றப ரங்கிரிவந்தருள் பெருமானே. (௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலமாதுட னிந்திரையுஞ்சரி சொலவொணுதம டந்தையர்சந்தன
களபசீதள கொங்கையிலங்கையி லிருபோதே
களவுநூல்தெரி வஞ்சனையஞ்சன விழியின்மோகித கந்தசுகந்தரு
கரியவோதியி லிந்துமுகந்தனின் மருளாதே
அமலமாகிய சிந்தையடைந்தகல் தொலைவிலாதவ றம்பொருளின்பமு
மடையவோதி யுணர்ந்துதணிந்தபி னருள்தானே
யறியுமாறுபெ றும்படியன்பினி னினியநாதசி லம்புபுலம்பிடு
மருணவாடக கிண்கிணிதங்கிய வடிதாராய்
குமரிகாளிப யங்கரிசங்கரி கவுரிநீலிப ரம்பரையம்பிகை
குடிலையோகினி சண்டினிகுண்டலி யெமதாயி
குறைவிலாளுமை மந்தரியந்தரி வெகுவிதாகம சுந்தரிதந்தருள்
குமரமூஷிக முந்தியவைங்கர கணராயன்
மமவிநாயக னஞ்சுமிழ்கஞ்சுகி யணிகஜானன விம்பனொரம்புலி
மவுலியானொரு சிந்தையுகந்தரு ளிளையோனே
வளரும்வாழையு மஞ்சளுமிஞ்சியு மிடைவிடாதுநெ ருங்கியமங்கல
மகிமைமாநகர் செந்திலில்வந்தருள் பெருமாளே. (சு)

கருவினுரு வாகிவந்து வயதளவிலே வளர்ந்து
கலைகள்பல வேதெரிந்து மதனாலே
கரியகுழன் மாதர்தங்க ளடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகிநொந்து மிகவாடி
அரகரசி வாயவென்று தினமுநினை யாமனின்று
மறுசமய நீதியொன்று மறியாம
லசனமிடு வார்கடங்கள் மனைகடலை வாசனின்று
மனுதினமு நாணமின்றி யழிவேனோ.
உரகபட மேல்வளர்ந்த பெரியபெரு மாளரங்க
ருலகளவு மான்மகிழ்ந்த மருகோனே
யுபயகுல தீபதுங்க விருதுகவி ராஜசிங்க
முறைபுகலி யூரிலன்று வருவோனே
பரவைமனை மீதிலன்று வொருபொழுது தூதுசென்ற
பரமனரு ளால்வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனைகொன்று வமரர்சிறை மீளவென்று
பழனிமலை மீதினின்ற பெருமாளே. (எ)

குமாரகுரு பாமுருக குகனே குறச்சிறுமி
கணவசர வணநிருதர் கலகா பிறைச்சடையர்
குருவெனந லுரையுதவு மயிலா வெனத்தினமு முருகாதே
குயின்மொழிநன் மடவியர்கள் விழியா லுருக்குபவர்
தெருவிலன வரதமன மெனவே நடப்பர்நகை
கொளுமவர்க ளுடைமைமன முடனே பறிப்பவர்க ளனைவோருந்
தமதுவச முறவசிய முகமே மினுக்கியர்கள்
முலையிலுறு துகில்சரிய நடுவீதி நிற்பவர்கள்
தனமிலியர் மனமுறிய நழுவா வழைப்பியர்கண் வலையாலே
சதிசெய்பவ ரவர்மகிழ வணைமீ துருக்கியர்கள்
வசமுழுகி யவரடிமை யெனமாத ரிட்டதொழில்
தனிலுழலு மசடனையு னடியே வழுத்தவரு டருவாயே



சமரமொடு மசுரர்படை களமீ தெதிர்த்தபொழு
தொருநொடியி லவர்கள்படை கெடவே லெடுத்தவனி
தனினிருதர் சிரமுருள ரணமீதுள் படுத்திவிடு செருமீதே
தவனமொடு மலைகளிடமிடவீர பத்திரர்க
ளதிரவினை மொடுகுகுகு குடிகாளி கொக்கரிசெய்
தசையுணவு தனின்மகிழ விடுபேய் நிரைத்திரள்கள் பலகோடி
திமிதமிட நரிகொடிகள் கழுகாட ரத்தவெறி
வயிரவர்கள் சுழலவொரு தனியாயு தத்தைவிடு
திமிரதின கரவமரர் கதிவாழ்வு பெற்றுலவு முருகோனே
திருமருவு புயனயனொ டயிராவ தக்குரிசி
லடிபரவு பழநிமலை கதிர்காம முற்றுயவர்
சிவசமய வறுமுகவ திருவேர கத்திலுறை பெருமாளே. (அ)

மருவேசெறித்த குழலார்மயக்கின் மதனாகமத்தின் விரகாலே
மயலேயெழுப்பி யிதழேயருத்த மலைநேர்முலைக்கு ளுறவாகி
பெறுகாதலுற்ற தமியேனைநித்தல் பிரியாதுபட்ச முடனேயென்
பிழையேபொறுத்து னிருதாளினுற்ற பெருவாழ்வுபற்ற வருள்வாயே
குருவாயரற்கு முபதேசம்வைத்த குகனேகுறத்தி மணவாளா
குளிர்கான்மிகுத்த வளர்பூகமெத்த குடகாவிரிக்கு வடபால்வாழ்
திருமாறனுக்கு மருகாவுமைக்கோர் சிறுவாகரிக்கு மிளையோனே
திருவேரகத்தி லுறைவாயமர்க்க ரிபமேதுணித்த பெருமாளே. (கூ)

கோமளவெற்பினை யொத்ததனத்தியர் காமனையொப்பவர் சித்தமுருக்கியர்
கோவையிதழ்க்கனி நித்தமும்விற்பவர் மயில்காடை
கோகிலநற்புற வத்தொடுகுக்குட வாரணியப்புள்வ கைக்குரல்கற்றியர்
கோலவிழிக்கடை யிட்டுமருட்டியர் விரகாலே
தூமமலர்ப்பளி மெத்தைபடுப்பவ ராரையுமெத்தி மனைக்குளழைப்பவர்
சோலைவனக்கிளி யொத்தமொழிச்சியர் நெறிகூடா
தூசுநெகிழ்த்தரை சுற்றியுடுப்பவர் காசுபறிக்கம நித்தமுயக்கியர்
தோதகவித்தை படித்துநடிப்பவ ருறவாமோ
மாமரமொத்தும லைக்குநெருக்கிய சூரனைவெட்டிநி ணக்குடலைக்கொடு
வார்புவிமெச்சவ ழித்தவிலட்சண கதிர்காம
மாமலையிற்பழ நிப்பதியிற்றனி மாகிரியிற்றணி கைக்கிரியிற்பர
மாகிரியிற்றிரை சுற்றிவளைத்திடு மலைவாயில்
ஏமவெயிற்பல வெற்பினிநற்பதி ஞாலகத்துள பத்தர்கள்சித்தம
தேதுநினைத்தது மெத்தவளித்தரு ளிளையோனே
யோகவெற்பெனு மற்புதமிக்கசு வாமிமலைப்பதி மெச்சியசற்சன
ராசதலட்சண வுத்தமிபெற்றருள் பெருமாளே. (க0)

வஞ்சகலோபமூடர் தம்பொருளூர்கடேடி மஞ்சரிகோவை தூது பலபாவின்
வண்புகழ்பாரிகாரி யென்றியைவாதுகூறி வந்தியர்போலவீணி லழியாதே
செஞ்சரணநாதகீத கிண்கிணிநூபமாலை திண்டிறல்வேல்மயூர முகமாறும்
செந்தமிழ்நாளுமோதி யுய்ந்திடஞானமூறு செங்கனிவாயிலோர்சொ லருள்வாயே
பஞ்சவனீடுகூனு மொன்றிடுதாபமோடு பைந்தமிழ்வாதுகூறு சமணர்மூகர்
பண்பறுபீலியோடு வெங்கழுவேறவோது பண்டிதஞானநீறு தருவோனே
குஞ்சரம்யாளிமேவு பைம்புன மீதுலாவு குன்றவர்சாதிகூடி வெறியாடி
கும்பிடகாடிவாழ்வு தந்தவரோடுவீறு குன்றுதொறாடன்மேவு பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரணமு கங்கிழிந்து வீழவும ரும்பலர்ந்து
மால்வரைய சைந்தனங்கன் முடிசாய
வாளகிரி யண்டரண்ட கோளமுற கின்றெழுந்து
மாதவம றந்திருந்து நிலைபேர
பூரணகு டங்கடிந்து சேகள பம்புனைந்து
பூசலைவி ரும்புகொங்கை மடவார்தம்
போகசய னந்தவிர்ந்து நாடகப தம்பணிந்து
பூசனைசெய் தொண்டனென்ப தொருநாளே
ஆரணமு ழங்குகின்ற வாயிரம டந்தவங்க
ளாகுதியி டங்கள்பொங்கு நிறைவீதி
யாயிரமு கங்கள்கொண்ட நூபுரமி ரங்குகங்கை
யாறமர வந்தலம்பு துறைசேரத்
தோரணம லங்குதுங்க கோபுரநெ ருங்குகின்ற
சூழ்மணிபொன் மண்டபங்கள் ரவிபோலச்
சோதியின்மி குந்தசெம்பொன் மாளிகைவி ளங்குகின்ற
சோலைமலை வந்துகந்த பெருமாளே. (கஉ)

வேனின்மதனைந்து பாணம்விடநொந்து வீதிதொறுநின்று மடவார்பால்
வேளையெனவந்து தாளினில்விழுந்து வேடைகெடநண்பு பலபேசி
தேனினுமணந்த வாயமுதமுண்டு சீதளதனங்க ளினின்மூழ்கி
தேடியதனங்கள் பாழ்படமுயன்று சேர்க்தியதின்றி யுழல்வேனோ
ஆனிரைதுரந்து மாநிலமளந்தோ ராலிலையிலன்று துயின்மாய
னயர்மனைசென்று பாறயிரளைந்த வாரணமுகுந்தன் மருகோனே
வானவர்புகழ்ந்து தானவர்பயங்கொள் மானொடிவிளங்கு மணிமார்பா
மாமறைமுழங்கு சீபுருடமங்கை மாநகரமர்ந்த பெருமாளே. (கங)

ஆலம்வைத்தவி ழிச்சிகள்சித்தச ஞகமக்கலை கற்றசமர்த்திக
ளார்மனத்தையு மெத்திவளைப்பவர் தெருவூடே
யாரவட்டமு லைக்குவிலைப்பண மாயிரக்கல மொட்டியளக்கினு
மாசையைப்பொரு ளொக்கநடிப்பவ ருடன்மாலாய்
மேலிளைப்புமு சிப்புமவத்தையு மாயெடுத்தகு லைப்பொடுபித்தமு
மேல்கொளத்தலை யிட்டவிதிப்படி யெனமாறும்
வேன்கணைக்கிரை யிட்டுடலெத்தனை பாடுபட்டபு முக்குமலக்குகை
வீடுகட்டியி ருக்குமெனக்குநி னருள்தாராய்
பீலிமிக்கம யிற்றுரகத்தினி லேறிமுட்டிவ ளைத்துவயிற்றுடல்
பீறிலக்கறும் யுத்தகளத்தினில் மடியாத
பேரரக்கரெ திர்த்தவரெத்தனை பேரையுக்ரக ளப்பலியிட்டுடர்
பேய்கைகொட்டி நடித்துமணிக்கழு குடனூட
வெம்மைவைத்தபு யத்திலணைத்தொரு வேலெடுத்தச மர்த்தையுரைப்பவர்
யாவருக்குமனத்தினினைப்பவை யருள்வோனே
ஏழிசைத்தமி ழிற்பயனுற்றவெ ஞவலூற்றடி யிற்பயிலுத்தம
னீசன்முக்கணி ருத்ரனளித்தருள் பெருமாளே. (கச)

அளக பாரம லைந்து சரிந்திட வதன வேர்வுது லங்கிந லங்கமழ்
வதிக மோகம்வி ளைந்துக லந்துறை குயில்காடை
யளிபு ருமயி லென்றுசொ லுங்குரல் மிடற தாதுதி பங்கவி தஞ்செயு
மகளிர் தோதக வன்பினி னின்றுள மறுகாதே



உளம்வி டாதுபு கழ்ந்து பணிந்திட வறிவி லாதம னங்கொடு நின்றினி
யுலையு ருமலு வங்தெனை நண்பொடு சிவயோகத்
தருகு ஞானப ரம்பர மந்திர மணுநொ ஞுதப தந்தரு சிந்தூர
வுபய சீதள பங்கய நின்கழ லருள்வாயே
இளகி டாவகை சந்தன குங்கும களப பூரண கொங்கைந லம்புனை
யிரதி வேள்பணி தந்தை யுகந்தரு ளிளையோனே
யினிய தாயெதி ரிந்திர ரண்டரு மரகராசிவ சங்கர சங்கர
வெனமி காவரு நஞ்சினை யுண்டவ ரருள்பாலா
வளர்கி சாசரர் தங்கள்சி ரம்பொடி படவி ரோதமி டுங்குல சம்ப்ரம
மகர வாரிக டைந்தநெ டும்புயல் மருகோனே
மதுர வாசக மிஞ்சிய கிஞ்சுக விதழி மாதுமை மைந்தவி ரும்பொழில்
மயிலை மீதினில் வந்துறை யிந்திர பெருமாளே. (கரு)

மலரணி கொண்டைச் சொருக்கிலேயவள்
சொலுமொழி யின்பச் செருக்கிலேகொடு
மையுமடர் நெஞ்சத் திருக்கிலேமுக மதியாலே
மருவுநி தம்பத் தடத்திலேநிறை
பரிமள கொங்கைக் குடத்திலேமிக
வலியவும் வந்தொத் திடத்திலேவிழி வலையாலே
நிலவெறி யங்கக் குலுக்கிலேயெழில்
வளைபுனை செங்கைக் கிலுக்கிலேகன
நிதிபறி யந்தப் பிலுக்கிலேசெயு மொயிலாலே
நிதமிய லுந்தூர்க் குணத்திலேபர
வசமுட னன்புற் றிணக்கிலேயொரு
நிமிஷமி ணங்கிக் கணத்திலேவெகு மதிகேடாய்
அலையநி னைந்துற் பனத்திலேயநு
தினமிரு மென்சொற் பனத்திலேவர
வறிவும ழிந்தற் பனத்திலேநித முலைவேனோ
வசடனை வஞ்சச் சமர்த்த னாகிய
கசடனை யுன்கிற் கடைக்கணாடியு
மலர்கொடு நின்பொற் பதத்தை யேதொழ வருடாராய்
பலபல பைம்பொற் பதக்க மாரமு
மடிமைசொ லுஞ்சொற் றமிழ்ப்ப னீரொடு
பரிமள மிஞ்சக் கடப்ப மாலையு மணிவோனே
பதியினின் மங்கைக் கதித்த மாமலை
யொடுசில குன்றிற் றரித்து வாழ்வுயர்
பழனியி லன்புற் றிருக்கும் வானவர் பெருமாளே. (கசு)

தோத கப்பெரும்ப யோத ரத்தி யங்கு தோகை யர்க்கு நெஞ்ச மழியாதே
சூலை வெப்ப டர்ந்த வாத பித்த மென்று சூழ்பி ணிக்கு ணங்க ளணுகாதே
பாத கச்ச மன்றன் மேதியிற்பு குந்து பாசம் விட்டெ றிந்து பிடியாதே
பாவ லர்க்கி ரங்கி நாவினுக்கி சைந்த பாடன் மிக்க செஞ்சொ றரவேணும்
வேதமிக்க விந்து நாதமெய்க் கடம்ப வீர பத்ர கந்த முருகோனே
மேரு வைப்பி ளந்து சூரனைக்க டிந்து வேலை யிற்று ளைந்த கதிர்வேலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானதை பொற்கு நீஞ்சி மாது கச்ச ணிந்த கோமளக்கு ரும்பை புணர்வோனே
கோல முற்று யர்ந்த சோண வெற்பி லங்கு கோபு ரத்த மர்ந்த பெருமானே.

மதவெங்க ரிக்கிரண்டு வலுகொம்பெ னத்திரண்டு
வளருந்த னத்தணிந்த பணியாரம்
வளர்செங்க திர்க்குவிந்து வொளிகண்டெ னத்துலங்கி
நாருந்தி கைத்திரங்க வருமானார்
இதமிங்கி தப்ரியங்கொ ணகைகொஞ்சு நற்குணங்க
ளிணையின்றெ னக்கலங்கி விளையாடி
யிடுசங்கை யற்றுணர்ந்து வலம்வந்து னைப்புகழ்ந்து
தொழவின்று பொற்பதங்க டரவேணும்
நதியுந்தி ருக்கரந்தை மதியுஞ்ச டைக்கணிந்த
நடநம்ப ருற்றிருந்த கயிலாய
நவநங்கை யைப்பிடுங்கு மசுரன்சி ரத்தொடங்கை
நவதுங்க வெற்றிமுந்து திரடோளுஞ்
சிதையும்ப டிக்கொரம்பு வனைமுன்றொ டுத்தகொண்டல்
வளர்செங்க ணச்சுதன்றன் மருகோனே
தினமுங்க ருத்துணர்ந்து சுரர்நின்று னைப்பணிந்த
திருவம்ப லத்தமர்ந்த பெருமானே. (௧௮)

காதன்மோ கந்தருங் கோதைமார் கொங்கைசிங்
காரநா தஞ்செழுங் கனிவாய்கண்
காளகூ டங்கொடுங் காலரூ பம்பொருங்
காமபா ணஞ்சுரும் பினம்வாழும்
ஓதிகார் செஞ்சொன்மென் பாகுதே னென்றெழுந்
தோகமோ கந்தவென் றுரையாதே
பூசலா டும்புலன் றூரியே சென்றுநின்
றேயுமா றென்றையுங் கருதாதே
தாதகீ சண்பகம் பூகமார் சந்தமந்
தாரவா சந்திசந் தனநீடுஞ்
சாமவே தண்டவெங் கோபகோ தண்டசந்
தானமா தெங்கள்பைம் புனமேவுந்
தீதிலா வஞ்சியின் பாதமே கொண்டிடுஞ்
சேகரா தென்குடந் தையில்வாழுந்
தேவிடா கம்பொருந் தாதிகா தன்றொழுந்
தேசிகா வும்பர்தம் பெருமானே. (௧௯)

ஆலமேற்ற விழியினர் காலைநீட்டி யழுதழு
தாகமாய்த்து முறைமுறை பறைமோத
வாடல்பார்க்க நிலையெழு பாடைகூட்டி விலரயம
யானமேற்றி யுறவின ரயலாகக்
காலமாச்சு வருகென வோலைகாட்டி யமபடர்
காவலாக்கி யுயிரது கொடுபோகக்
காமயாக்கை பொடிபடு நாளில்வாய்த்த கழலிணை
காதலாற்க ருதுமுணர் தருவாயே



வேலகீர்த்தி விதரண சீலபார்த்தி பகனக
வியாழகோத்ர மருவிய முருகோனே
வேதனுட்டில் விளைவுள வேனல்காத்த சிறுமியை
வேடனுட்டில் வழிபடு மிளையோனே
ஞாலமேத்த வழிபடு மாறுபோர்க்கு மகவென
நாணல்பூத்த படுகையில் வருவோனே
நாதபோற்றி யெனமுது காதைகேட்ப வனுபவ
வானவார்த்தை யருளிய பெருமானே. (௨௦)

விடமத வேள்வாளியின் விசைபெறு கோலாகல
விழிகொடு போவாவென வுரையாடும்
விரகுடை னூறுயிர மனமுடை மாபாவிகள்
மிர்கமத கோலாகல முலைதோய
வடையவு மாசாபர வசமுறு கோமளியை
யவனியு மாகாசமும் வசைகூற
மசடனை ஞசாரனை யவலனை யாபாசனை
யடியவ ரோடாள்வது மொருநாளே
வடகுல கோபாலர்த மொருபதி னாறாயிரம்
வனிதையர் தோடோய்தரு மபிராம
மரகத நாராயணன் மருமக சோணாசல
வதிபச தாசாலமு மிளையோனே
யடுபதி சாயாபதி சுரர்பதி வாழ்வேபெற
வுயர்மயின் மேலேறியே வறிதாக
வுயுரிய மாநாகமும் நீருதனு நீறாய்விழ
வொருதனி வேலேவிய பெருமானே. (௨௧)

யாதிமதிநதி போதுமணிசடை நாதனருளிய குமரேசா
பாகுகனிமொழி மாதுகுறமகள் பாதம்வருடிய மணவாளா
காதுமொருவிழி காகமுறவருண் மாயன்றிரு மருகோனே
காலனெனையணு காமலுனதிரு காலின்வழிபட வருள்வாயே
ஆதியயனொடு தேவர்சுரருல காளும்வகைதரு சிறைமீளா
வாடுமயிலினி லேறியமரர்கள் சூழவலம்வரு மிளையோனே
சூதமிகவளர் சோலைமருவுசு வாமிமலைதனி லுறைவோனே
சூரனுடலற வாரிசுவறிட வேலைவிடவல பெருமானே. (௨௨)

நலமயிர் கொக்குக் கொக்க நரைத்துக் கலகலெனப்பற் கட்டது விட்டுத்
தளர்நடை பட்டுத் தத்தடி யிட்டுத் தடுமாறி
தடிகொடு தத்திக் கக்கல் பெருத்திட் டசனமும் விக்கிச் சத்தி யெடுத்துச்
சளியு மிகுத்துப் பித்தமு முற்றிப் பலகாலும்
நில ...லத்திட் டொக்க வெரிக்கத் திரிபலை சுக்குத் திப்பிலி யிட்டுத்
தெளிய வடித்துத் துற்றுட லுற்றிட் டுயிர்போமுன்
திகழ்புகழ் கற்றுச் சொற்கள் பயிற்றித் திருவடியைப்பற் றித்தொழு துற்
சென்ன மறுக்கைக் குப்பா முத்திக் கருள்வாயே [றுச்
கலனைவி சித்துப் பற்கறை யிட்டுப் புரவிசெ லுத்திக் கற்கொடு வெற்பைக்
கடுகக டத்தித் திட்டென வெட்டிப் பொருசூரன்

கனபடை கெட்டுத் தட்டறவிட்டுக் குரைகடல் குக்குக் குக்கிட வெற்றிக்
களிமயி லேச்சித் ரத்தினடத்திப் பொருகோவே
குலிசன் மகட்குப் பொற்புய முற்றுக் குறவர் மகட்குச் சித்தமு முற்றுக்
குளிர்தினை மெத்தத் தத்து புனத்திற் றிரிவோனே
கொடிய பொருப்பைக் குத்திமு றித்தாச் சயரம் விளைத்துத் தற்பரமுற்றுக்
குலகிரி யிற்சித் தத்தொ டிருக்கும் பெருமானே. (௨௩)

துள்ளுமதவேள்கைக் கணையாலே தொல்லைநெடுநீலக் கடலாலே
மெள்ளவருசோலைக் குயிலாலே மெய்யுருகுமானைத் தழுவாயே
தெள்ளுதமிழ்பாடத் தெளிவோனே செய்யகுமரேசத் திறலோனே
வள்ளல்தொழுஞானக் கழலோனே வள்ளிமணவாளப் பெருமானே . (௨௪)

சரணகம லாலயத்தை யரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதி யானம்வைக்க வறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யான்மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ன மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
வரியதமிழ் தானளித்த மயில்வீரா
வதிசயம னேகமுற்ற பழனிமலை மீதுதித்த
வழகுதிரு வேரகத்தின் முருகோனே. (௨௫)

மருக்குலாவிய மலரணை கொதியாதே வளர்த்த தாய்தமர் வசையது மொழியாதே, கருக்குலாவிய வயலவர் பழியாதே கடப்பமாலையை யினிவர விடவேணும், தருக்குலாவிய கொடியிடை மணவாளா சமர்த்தனேமணி மரகத மயில்வீரா, திருக்குராவடி நிழறனி லுறைவோனே திருக்கைவேல்வடி வழகிய பெருமானே. (௨௬)

கருப்பத்தூறிப் பிறவாதே கனக்கப் பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தனுபூதி சிறக்கப் பாவித் தருள்வாயே
பரப்பற் றருக் குரியோனே பரத்தைப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே செகத்திற் சோதிப் பெருமானே.

கிரியினோர்வளர் முலைமிசை துகிலிடு கபடநாடக முயல்பவ ரசடிகள்
கெடுதியாளர்க ளிடமுடை யுடலினர் விரகாலே
கிளரதேகசை யணைமிசை தழுவிகள் அமுதகாறிய லளிதமென் [illegible]சனிகள்
கிடையின்மேன்மன முருகிடுபடிறிகள் பொருளாலே
பரிவிலாமயல் கொடுசமர் புரிபவர் அதிகமாயொரு பொருள்தரு பவரொடு
பழையபேரென விதமுற வணைபவர் விழியாலே
பகழிபோல்விடு வினைகவர் திருடிகள் தமையெணுவகை யுறுகதி பெறும்வ
பகரமாமயின் மிசைவர நினைவது மொருநாளே [கை



அரியராதியர் மலரய னிமையவர் நிலைபெறுதிடர் படவுடன் முழுகிய
வசுரர்தாமிற வயில்விடு மறுமுக விளையோனே
அரியகானக முறைகுற மகளது கணவனுகிய வறிவுள விதரண
வமரர்நாயக சரவண பவதிற லுடையோனே
தருமநீதியர் சதுர்வித மறையுளர் தறுவனுநிலை பெறுதவ முடையவர்
தளர்விலாமன முடையவ ரறிவினர் பராசர்
சகலலோகமு முடையவர் நினைபவர் பரவுதாமரை மலரடி யினிதுறு
தணிகைமாமலை மணிமுடி யழகிய பெருமானே. (௨௮)

மாயவாடை திமிர்ந்திடு கொங்கையின் மூடுசேலை திறந்த மழுங்கிகள்
வாசல்தோறு கடந்துசி ணுங்கிகள் பழையோர்மேல்
வாலநேச நினைந்தழு வம்பிக ளாசைநோய்கொண் மருந்திடு சண்டிகள்
வாறபேர்பொருள் கண்டுவிரும்பிக ளெவரேனும்
நேயமேகவி கொண்டுசொல் மிண்டிகள் காசிலாதவர் தங்களை யன்பற
நீதிபோல நெகிழ்ந்த பறம்பிக ளவர்தாய்மார்
நீலிநாடக மும்பயில் மண்டைகள் பாளையூறுக ளுண்டிடு தொண்டிகள்
நீசரோடுமி ணங்குக டம்பிக ளுறவாமோ
பாயுமாமத தந்திமு கங்கொடு மாதிபாரத மென்ற பெருங்கதை
பாரமேருவி னன்று வரைந்தவ னிளையோனே
பாலினேர்மொழி வஞ்சி யிளம்பிடி தேவயானை பெருந்தன குங்கும
பாரமான்மத சந்தனமுங்கிய மணிமார்பா
சீயமாயுரு வங்கொடு வந்தசு ரேசன்மார்பை யிடந்து பசுங்குடர்
சேரவாரி யணிந்த நெடும்புயன் மருகோனே
தேனுலாவு கடம்ப மணிந்தகி ரீடசேகர சங்கரர் தந்தருள்
தேவர்நாயக செந்திலு வந்தருள் பெருமானே. (௨௯)

பரிமள களபசு கந்தச்சந்தத் தனமாதர்
படையமர் படையென வஞ்சிக்குங்கட் கடையாலே
வரியளி நிரைமுரல் கொங்குக்கங்குற் குழலாலே
மறுகிடு மருளனை யின்புற்றன்புற் றருள்வாயே
யரிதிரு மருகக டம்பத்தங்கத் திருமார்பா
வலைதிகு திகுவென வெம்பிக்கண்டித் தெறிவேலா
திரிபுர தகனரும் வந்திக்குஞ்சற் குருநாதா
செயசெய செயசெய செந்திற்கந்தப் பெருமானே. (௩௦)

தொந்திசரிய மயிரே வெளிற நிறை தந்தமலைய முதுகே வளையவிதழ்
தொங்கவொருகை தடிமேல் வரமகளிர் நகையாடி
தொண்டுகிழவ னிவனுரென விருமல் கிண்கிணெனமு னுரையே குழறவி
துஞ்சுகுருடு படவே செவிடுபடு செவியாகி (௩…
வந்த[illegible]யு மதிலே மிகடையுமொரு பண்டிதனுமெ யுறுவே தனையுமிள
மைந்தருடைமை கடனே தெனமுடுகு துயர்மேவி
மங்கையழுது விழவே யமபடர்கள் நின்றுசருவ மலமே யொழுகவுயிர்
மங்குபொழுது கடிதே மயிலின்மிசை வருவாயே
எந்தைவருக ரகுநா யகவருக மைந்தவருக மகனே யினிவருக
வென்கண்வருக வெனதா ருயிர்வருக வபிராம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விங்குவருக வரசே வருகமுலை யுண்கவருக மலர்சூடுகவருக்
வென்றுபரிவி னெடுகோ சலைபுகல வருமாயன்
சிக்கைமகிழு மருகா குறவரிள வஞ்சிமருவு மழகா வமரர்சிறை
சிந்தவசுரர் கிளைவே ரொடுமடிய வடுதீரா
திங்களரவு நதிசூ டியபரமர் தந்தகும்ர வலையே கரைபொருத
செந்தினகரி லினிதே மருவிவளர் பெருமாளே. (௬௧)

விதிபோலுமுந்த விழியாலுமிந்து நுதலாலும்வென்றி யிளையோர்தம்
விரிவானசிந்தை யுருவாகநொந்து விறல்வேறுசிந்தை வினையாலே
விதமாடியின்ப மதுபோதவுண்டு விருநாளுமொன்று முளமாத
ரிருளாயதின்ப மருண்மாயம்வந்து வெமையீர்வதென்று மொழியாதோ
மதிசூடியண்டர் பதிவாழமண்டி வருமாலமுண்டு மறமாரன்
வடிவாகமைந்து கணையோடுசிந்தும் வகைநாடுமெந்தை பெருவாழ்வே
யதிமாயமொன்றி வருசூரர்பொன்ற வயில்வேல்கொடன்று பொரும்வீரா
வழகானசெம்பொன் மயின்மேலமர்ந்து அலைவாயுகந்த பெருமாளே. (௬௨)

விறன்மாரனைந்து மலர்வாளிசிந்த மிகவானலிந்து வெயில்காய
மிகவானடைவந்து புலவேலையொன்ற வினைமாதர்தந்தம் வசைகூறல்
குறவாணர்குன்றி லுறைபேதைகொண்ட கொடிதானதுன்ப மயல்தீரக்
குளிர்மாலையின்க ணளிர்மாலைதந்து குறைதீரவந்து குறுகாயோ
மறிமானுகந்த விறையோன்மகிழ்ந்து வழிபாடுகந்த மதியாளா
மலைமார்புசிந்த வலைவேலையஞ்ச வடிவேலையுந்து மதிகோபா
வறிவாலறிந்து னிருதாளிறைஞ்சு மடியாரிடைஞ்சல் களைவோனே
வழகானசெம்பொன் மயில்மேலமர்ந்து அலைவாயுகந்த பெருமாளே. (௬௩)

இருவினையின் மதிமயங்கித் திரியாதே எழுநரகி லுழலு நெஞ்சத் தலையாதே
பரமகுருவருணினைந்திட்டுணர்வாலேபாவுதரிசனையையென்றெற்கருள்வாயே
தெரிதமிழையுதவுசங்கப்புலவோனேசிவனருளுமுருகசெம்பொற்கழலோனே
கருணைநெறிபுரியுமன்பர்க்கெளியோனே கனகசபைமருவுகந்தப்பெருமாளே.

அபசார நிந்தைபட் டுழலாதே யறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே உனைநா னினைந்தருள் பெறுவேனோ
இபமா முகன்றனக் கிளையோனே இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா திருவாவி னன்குடிப் பெருமாளே. (௬௫)

வங்கார மார்பிலணி தாரொடுயர் கோடசைய
கொந்தார மாலைகுழ லாரமொடு தோள்புரள
வண்காதி லோலைகதிர் போலவொளி வீசஇதழ் மலர்போல
மஞ்சாடு சாபநுதல் வாளனைய வேல்விழிகள்
கொஞ்சார மோககிளி யாகநகை பேசியுற
வந்தாரை வாருமிரு நீருறவெ னாசைமய விடுமாதர்
சங்காளர் சூதுகொலை காரர்குடி கேடர்சுழல்
சிங்கார தோழர்பண ஆசையுளர் சாதியிலர்
சண்டாளர் சீசியவர் மாயவலை யோடடியெ னுழலாமல்
சங்கோதை நாதமொடு கூடிவெகு மாயையிருள்
வெந்தோட மூலஅழல் வீசவுப தேசமது
தண்காதி லோதியிரு பாதமலர் சேரஅருள் புரிவாயே



சிங்கார ரூபமயில் வாகநம யோகமென
கந்தாகு மாரசிவ தேசிகந மோநமென
சிந்தூர பார்வதிசு தாகரந மோநமென விருதோதை
சிந்தான சோதிகதிர் வேலவந மோநமென
கங்காள வேணிகுரு வானவந மோமென
திண்சூர ராழிமலை தூள்படவை வேலவிடு முருகோனே
இங்கீத வேதபிர மாவைவிழ மோதியொரு
பெண்காத லோடுவன மேவிவளி நாயகியை
யின்பான தேனிரச மார்முலைவி டாதகர மணிமார்பா
எண்டோளர் காதல்கொடு காதல்கறி யேபருகு
செங்காடு மேவுபிர காசமயில் மேலழகொ
டென்காதல் மாலைமுடி ஆறுமுக வாஅமரர் பெருமாளே. (௬௬)

மலடி வயிற்றில் மகன்போ லேயொரு
புதைய லெடுத்த தனம்போ லேயொளிர்
வயிர மடுத்த களம்போ லேயிள முலைமாதர்
வலிய வணைத்த சுகம்போ லேகதி
ரொளிவிடு ரத்ந வடம்போ லேபரி
மளமிகு புட்ப வனம்போ லேசுர நதிபோலே
அலைகடல் பெற்றிடு பெண்போ லேவரு
புலவர் தமக்கிரு கண்போ லேகரை
யருகி லடுத்த சலம்போ லேயுன தழகாமோர்
அமுது புசித்த ரசம்போ லேதிரை
கடன்மடை விட்ட சலம்போ லேதின
மதிசய முத்தமி ழன்பா லோதநி னருடாராய்
கலக லெனச்செல் சிலம்பா சீர்பெறு
மலைமகள் பெற்ற குழந்தாய் மாமத
கரிமுக னுக்கொரு தம்பீ கானவர் மகளாமோர்
கடிமலர் மெய்த்த சுரும்பே ஞானிகண்
மனது ருசித்த கரும்பே வானவர்
கவலை தணித்தரு ளன்பே மாயவன் மருகோனே
குலிசன் மகட்கொரு நண்பா வேழிசை
யளிகள் சுவைத்த கடம்பா போய்வரு
குரைகட லுக்கொரு சம்பா ஞய்வரு வடிவேலா
கொடிய பிணிக்கு மருந்தே தாள்பணி
யடியர் தமக்கு விருந்தே தோகைகொள்
குருகு நடத்து துரங்கா வேரக முருகோனே. (௬௭)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை.
திருச்சிற்றம்பலம்.

# தாயுமானசுவாமிபாடல்.

அங்கிங்கெனாதபடியெங்கும்ப்ரகாசமாயானந்தபூர்த்தியாகி [லாங்
அருளொடுநிறைந்ததெது தன்னருள்வெளிக்குளேயகிலாண்டகோடியெல்
தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்தழைத்ததெது மனவாக்கினிற்
றட்டாமனின்றதெது சமயகோடிகளெலாந்தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது வெங்கணும்பெருவழக்காய்
யாதினும்வல்லவொருசித்தாகியின்பமாயென்றைக்குமுள்ளதெது மேற்
கங்குல்பகலறநின்றவெல்லையுளதெது வது கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாம்மோனவுருவெளியதாகவுங்கருதியஞ்சலிசெய்குவாம். (௧)

ஊரனந்தம்பெற்றபேரனந்தஞ்சுற்றுமுறவனந்தம்வினையினால்
உடலனந்தஞ்செயும்வினையனந்தங்கருத்தோவனந்தம்பெற்றபேர்
சீரனந்தஞ்சொர்க்கநரகமுமனந்தநற்றெய்வமுமனந்தபேதந்
திகழ்கின்றசமயமுமனந்தமதனால்ஞானசித்தியாலுணர்ந்து
காரணந்தங்கோடிவருஷித்ததெனவன்பர்கண்ணும்விண்ணுந்தேக்கவே
கருதரியவானந்தமழைபொழியுமுகிலைநங்கடவுளைத்துரியவடிவைப்
பேரனந்தம்பேசிமறையனந்தஞ்சொலும்பெரியமௌனத்தின்வைப்பைப்
பேசருமனந்தபதஞானவானந்தமாம்பெரியபொருளைப்பணிகுவாம். (௨)

வாசகயிங்கரியமன்றியொருசாதனமனோவாயுநிற்கும்வண்ணம்
வாலாயமாகவும்பழகியறியேன்றுறவுமார்க்கத்தினிச்சைபோல
நேசானுசாரியாய்விவகரிப்பேனந்தநினைவையுமறந்தபோது
நித்திரைகொள்வேன்றேகநீங்குமெனவெண்ணிலோநெஞ்சந்துடித்தயரு
பேசாதவானந்தநிட்டைக்குமறிவிலாப்பேதைக்கும்வெகுதூரமே [வேன்
பேய்க்குணமறிந்திந்தநாய்க்குமொருவழிபெரியபேரின்பநிட்டையருள்வாய்
பாசாடவிக்குளேசெல்லாதவர்க்கருள்பழுத்தொழுகுதேவதருவே
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்றபரிபூரணானந்தமே. (௩)

தெரிவாகவூர்வனநடப்பனபறப்பனசெயற்கொண்டிருப்பனமுதற்
றேகங்களத்தனையுமோகங்கொள்பௌதிகஞ்சென்மித்தவாங்கிறக்கும்
விரிவாயபூதங்களொன்றொடொன்றாயழியுமேற்கொண்டசேடமதுவே
வெறுவெளிநிராலம்பநிறைசூன்யமுபசாந்தவேதவேதாந்தஞானம்
பிரியாதபேரொளிபிறக்கின்றவருளருட்பெற்றோர்கள்பெற்றபெருமை
பிறவாமையென்றைக்குமிறவாமையாய்வந்துபேசாமையாகுமெனவே
பரிவாயெனக்குநீயறிவிக்கவந்ததேதபரிபாககாலமலவோ
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்றபரிபூரணானந்தமே. (௪)

சந்ததமுமெனதுசெயனினதுசெயலியானெனுந்தன்மைநினையன்றியில்லாத்
தன்மையால்வேறலேன்வேதாந்தசித்தாந்தசமரசசுபாவமிதுவே
இந்தநிலைதெளியநானெக்குருகிவாடியவியற்கைதிருவுளமறியுமே
இந்நிலையிலேசற்றிருக்கவென்றான்மடமையிதசதருவாகவந்து



சிந்தைகுடிகொள்ளுதேமலமாயைகன்மந்திரும்புமோதொடுவழக்காய்ச்
சென்மம்வருமோவெனவும்யோசிக்குதேயனதுசித்தத்தையெனும்வாளுமுத
பந்தயறவெய்ஞ்ஞானதீரமுந்தந்தெனைப்பாதுகாத்தருள்செய்குவாய் [விப்
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்றபரிபூரணானந்தமே. (௫)

பூதலயமாகின்றமாயைமுதலென்பர்சிலர்பொறிபுலனடங்குமிடமே [லபேர்
பொருளென்பர்சிலர்கரணமுடிவென்பர்சிலர்குணம்போனவிடமென்பர்சி
நாதவடிவென்பர்சிலர்விந்துமயமென்பர்சிலர்நட்டநடுவேயிருந்த
நாமென்பர்சிலருருவமாமென்பர்சிலர்கருதிநாடிலருளென்பர்சிலபேர்
பேதமறவுயிர்கெட்டநிலயமென்றிடுவர்சிலர்பேசிலருவென்பர்சிலபேர்
பின்னுமுன்னுங்கெட்டசூனியமதென்பர்சிலர்பிறவுமேமொழிவரிவையாற்
பாதரசமாய்மனதுசஞ்சலப்படுமலாற்பரமசுகநிட்டைபெறுமோ
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்றபரிபூரணானந்தமே. (௬)

ஆழாழிகரையின்றிநிற்கவிலையோகொடியவாலமமுதாகவிலையோ
அக்கடலின்மீதுவடவனனிற்கவில்லையோவந்தரத்தகிலகோடி
தாழாமனிலைநிற்கவில்லையோமேருவுந்தனுவாகவளையவிலையோ
சத்தமேகங்களும்வச்ரதரனாணையிற்சஞ்சரித்திடவில்லையோ
வாழாதுவாழவேயிராமனடியாற்சிலையுமடமங்கையாகவிலையோ
மணிமந்த்ரமாதியால்வேண்டுசித்திகளுலகமார்க்கத்தில்வைக்கவிலையோ
பாழானவென்மனங்குவியவொருதந்திரம்பண்ணுவதுனக்கருமையோ
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்றபரிபூரணானந்தமே. (௭)

ஆசைக்கோரளவில்லையகிலமெல்லாங்கட்டியாளினுங்கடன்மீதிலே
ஆணைசெலவேநினைவரளகேசநிகராகவம்பொன்மிகவைத்தபேரும்
நேசித்துரசவாதவித்தைக்கலைந்திடுவர்நெடுநாளிருந்தபேரும்
நிலையாகவேயினுங்காயகற்பந்தேடிநெஞ்சுபுண்ணாவரெல்லாம்
யோசிக்கும்வேளையிற்பசிதீரவுண்பதுமுறங்குவதுமாகமுடியும்
உள்ளதேபோதுநானெனக்குளறியேயொன்றைவிட்டொன்றுபற்றிப்
பாசக்கடற்குளேவீழாமன்மனதற்றபரிசுத்தநிலையையருள்வாய்
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்றபரிபூரணானந்தமே. (௮)

ஆக்கையெனுமிடிகரையைமெய்யென்றபாவிநானத்துவிதவாஞ்சையாதல்
அரியகொம்பிற்றேனைமுடவனிச்சித்தபடியாகுமறிவவிழவின்பந்
தாக்கும்வகையேதிநாட்சரியைகிரியாயோகசாதனம்விடுத்ததெல்லாஞ்
சன்மார்க்கமல்லவிவைநிற்கவென்மார்க்கங்கள்சாராதபேரறிவதாய்
வாக்குமனமணுகாதபூரணப்பொருள்வந்துவாய்க்கும்படிக்குபாயம்
வருவித்துவட்டாதபேரின்பமானசுகவாரியினைவாய்மடுத்துத்
தேக்கித்திளைக்கநீமுன்னிற்பதென்றுகாண்சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியேசின்மயானந்தகுருவே. (௯)

பத்திநெறிநிலைநின்றநவகண்டபூமிப்பரப்பைவலமாகவந்தும்
பரவையிடைமூழ்கியுந்நதிகளிடைமூழ்கியும்பசிதாகமின்றியெழுநா
மத்தியிடைநின்றுமுதிர்சருகுபுனல்வாயுவினைவன்பசிதனக்கடைத்து
மௌனத்திருந்துமுயர்மலைநுழைவுபுக்கியுமன்னுதசநாடிமுற்றுஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திசெய்தம்மூலப்ராணனோடங்கியைச்சோமவட்டத்தடைத்தும்
சொல்லரியவமுதுண்டுமற்பவுடல்கற்பங்கடோறுநிலைநிற்கவீறு
சித்திசெய்திஞ்ஞானமலதுகதிகூடுமோசித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியேசின்மயானந்தகுருவே. (௧௦)

போனகமிருக்கின்றசாலையிடைவேண்டுவபுசித்தற்கிருக்குமதுபோற்
புருஷர்பெறுதர்மாதிவேதமுடனாகமம்புகலுமதினாலாம்பயன்
ஞானநெறிமுக்யநெறிகாட்சியனுமானமுதனானாவிதங்கடேர்ந்து
நானென்னக்குளறுபடைபுடைபெயர்த்திடவுநான்குசாதனமுமோர்ந்திட்
டானநெறியாஞ்சரியையாதிசோபானமுற்றனுபக்ஷசம்புபக்ஷ
மாமிருவிகற்பமுமாயாதிசேவையுமறிந்திரண்டொன்றென்றுமோர்
மாணதவிகற்பமறவென்றுநிற்பதுநமதுமரபென்றபரமகுருவே
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன்மரபில்வருமௌனகுருவே. (௧௧)

கல்லாதவறிவுமேற்கேளாதகேள்வியுங்கருணைசிறிதேதுமில்லாக்
காட்சியுங்கொலைகளவுகட்காமமாட்சியாக்காதலித்திடுநெஞ்சமும்
பொல்லாதபொய்ம்மொழியுமல்லாதுநன்மைகள்பொருந்துகுணமேதுமறியே
புருஷர்வடிவானதேயல்லாதுகனவிலும்புருஷார்த்தமேதுமில்லேன் [ன்
எல்லாமறிந்தநீயறியாததல்லவேனக்கெவ்வண்ணமுய்வண்ணமோ
விருளையிருளென்றவர்க்கொளிதாரகம்பெறுமெனக்குநின்னருடாரகம்
வல்லானெனும்பெயருனக்குள்ளதேயிந்தவஞ்சகனையாளநினையாய்
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன்மரபில்வருமௌனகுருவே (௧௨)

மண்ணாதியைந்தொடுபுறத்திலுளகருவியும்வாக்காதிசோத்ராதியும்
வளர்கின்றசப்தாதிமனமாதிகலையாதிமன்னுசுத்தாதியுடனே
தொண்ணூற்றொடாறுமற்றுள்ளனவுமௌனியாய்ச்சொன்னவொருசொற்
[கொண்டதே
தூவெளியதாயகண்டானந்தசுகவாரிதோற்றுமதையென்சொல்லுவேன்
பண்ணாருமிசையினொடுபாடிப்படித்தருட்பான்மைநெறிநின்றுதவறாப்
பக்குவவிசேஷராய்நெக்குநெக்குருகிப்பணிந்தெழுந்திருகைகூப்பிக்
கண்ணாறுகரைபுரளநின்றவன்பரையெலாங்கைவிடாக்காட்சியுறவே
கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடுகருணாகரக்கடவுளே. (௧௩)

பண்ணேனுனக்கானபூசையொருவடிவிலேபாவித்திறைஞ்சவாங்கே
பார்க்கின்றமலரூடுநீயேயிருத்தியப்பனிமலரெடுக்கமனமும்
நண்ணேனலாமலிருகைதான்குவிக்கவெனினாணுமென்னுளநிற்றிநீ
நான்கும்பிடும்போதரைக்கும்பிடாதலாநான்பூசைசெய்யன்முறையோ
விண்ணேவிணாதியாம்பூதமேநாதமேவேதமேவேதாந்தமே
மேதக்ககேள்வியேகேள்வியாம்பூமிக்குள்வித்தேயவித்தின்முளையே
கண்ணேகருத்தேயெனெண்ணேயெழுத்தேகதிக்கானமோனவடிவே
கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடுகருணாகரக்கடவுளே. (௧௪)

சாயிலையுதிர்ந்தகனிசருகுபுனன்மண்டியகடும்பசிதனக்கடைத்துங்
கார்வரையின்முழையிற்கருங்கல்போலசையாதுகண்மூடிநெடிதிருந்தும்
தீயினிடைவைகியுந்தோயமதின்மூழ்கியுந்தேகங்களென்பெலும்பாய்த்
தெரியநின்றுஞ்சென்னிமயிர்கள்கூடாக்குருவிதெற்றவெயிலூடிருந்தும்



வாயுவையடக்கியுமனதினையடக்கியுமௌனத்திலேயிருந்து
மதிமண்டலத்திலேகனல்செல்லவமுதுண்டுவனமூடிருந்துமறிஞர்
ஆயுமறைமுடிவானவருணாடிஞானாடிமையகிலத்தைநாடன்முறையோ
வண்டபகிரண்டமுமடங்கவொருநிறைவாகியானந்தமானபரமே. (௧௫)

[யாப்
பொய்யினேன்புலையினேன்கொலையினேனின்னருள்புலப்படவறிந்துநிலை
புன்மையேன்கல்லாதவன்மையேனன்மைபோற்பொருளலாப்பொருளைநாடும்
வெய்யனேன்வெகுளியேன்வெறியனேன்சிறியனேன்வினையினேனென்
[றென்னைநீ
விட்டுவிடநினைவையேற்றட்டழிவதல்லாதுவேறுகதியேதுபுகலாய்
துய்யனேமெய்யனேயுயிரினுக்குயிரானதுணைவனேயிணையொன்றிலாத்
துரியனேதுரியமுங்காணவநிதனேசுருதிமுடிமீதிருந்த
ஐயனேயப்பனேயெனுமறிஞரறிவைவிட்டகலாதகருணைவடிவே
யண்டபகிரண்டமுமடங்கவொருநிறைவாகியானந்தமானபரமே. (௧௬)

எத்தனைவிதங்கடான்கற்கினுங்கேட்கினுமென்னிதயமுமொடுங்கவில்லை
யானெனுமகந்தைதானெள்ளளவுமாறவில்லையாதினும்மபிமானமென்
சித்தமிசைகுடிகொண்டதீகையொடிரக்கமென்சென்மத்துநானறிகிலேன்
சீலமொடுதவவிரதமொருகனவிலாயினுந்தெரிசனங்கண்டுமறியேன்
பொய்த்தமொழியல்லான்மருந்துக்குமெய்ம்மொழிபுகன்றிடேன்பிறர்கேட்க
போதிப்பதல்லாதுசும்மாவிருந்தருள்பொருந்திடாப்பேதைநானே [வே
அத்தனைகுணக்கேடர்கண்டதாக்கேட்டதாவவனிமிசையுண்டோசொலா
யண்டபகிரண்டமுமடங்கவொருநிறைவாகியானந்தமானபரமே. (௧௭)

கல்லேனுமையவொருகாலத்திலுருகுமென்கன்னெஞ்சமுருகவிலையே
கருணைக்கிணைக்காதவன்மையையுநான்முகன்கற்பிக்கவொருகடவுளோ
வல்லான்வகுத்ததேவாய்க்காலெனும்பெருவழக்குக்கிழுக்குமுண்டோ
வானமாய்நின்றின்பமழையாயிரங்கியெனைவாழ்விப்பதுன்பரங்காண்
பொல்லாதசேயெனிற்றாய்தள்ளனீதமோபுகலிடம்பிறிதுமுண்டோ
பொய்வார்த்தைசொல்லிலோதிருவருட்கயலுமாய்ப்புன்மையேனைவனந்தோ
சொல்லான்முழக்கிலோசுகமில்லைமௌனியாய்ச்சும்மாவிருக்கவருளாய்
சுத்தநிர்க்குணமானபரதெய்வமேபரஞ்சோதியேசுகவாரியே. (௧௮)

அண்டமுடிதன்னிலோபகிரண்டமதனிலோவலரிமண்டலநடுவிலோ
அனனடுவிலோவமிர்தமதிநடுவிலோவன்பரகமுருகிமலர்கடூவித்
தெண்டமிடவருமூர்த்திநிலையிலோதிக்குத்திகந்தத்திலோவெளியிலோ
திகழ்விந்துநாதநிலைதன்னிலோவேதாந்தசித்தாந்தநிலைதன்னிலோ
கண்டபலபொருளிலோகாணாதநிலையெனக்கண்டசூனியமதனிலோ
காலமொருமூன்றிலோபிறவிநிலைதன்னிலோகருவிகரணங்களோய்ந்த
தொண்டர்களிடத்திலோநீவீற்றிருப்பதுதொழும்பனேற்குளவுபுகலாய்
சுத்தநிர்க்குணமானபரதெய்வமேபரஞ்சோதியேசுகவாரியே. (௧௯)

அவனன்றியோரணுவுமசையாதெனும்பெரியவாப்தர்மொழியொன்றுகண்டா
லறிவாவதேதுசிலவறியாமையேதிவையறிந்தார்களறியார்களார்
மௌனமொடிருந்ததாரென்போலுடம்பெலாம்வாயாய்ப்பிதற்றுமவரார்
மனதெனவுமொருமாயையெங்கேயிருந்துவரும்வன்மையொடிரக்கமெங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனம்படைப்பதென்கர்த்தவியமெவ்விடம்பூதபேதங்களெவ்விடம் [வ்விடம்
பொய்மெய்யிதமகிதமேல்வருநன்மைதீமையொடுபொறைபொறாமையுமெ
எவர்சிறியரெவர்பெரியரெவருறவரெவர்பகைஞர்யாதுமுனையன்றியுண்டோ
விகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகியெங்குநிறைகின்றபொருளே. ()

சொல்லானதிற்சற்றும்வாராதபிள்ளையைத்தொட்டில்வைத்தாட்டியாட்டித்
தொடையினைக்கிள்ளல்போற்சங்கற்பமொன்றிற்றொடுக்குந்தொடுத்தழிக்
பொல்லாதவாதனையெனுஞ்சப்தபூமியிடைபோந்துதலைசுற்றியாடும் [கும்
புருஷனிலடங்காதபூவைபோற்றானேபுறம்போந்துசஞ்சரிக்குங்
கல்லோடிரும்புக்குமிகவன்மைகாட்டிடுங்காணாதுகேட்டவெல்லாங்
கண்டதாக்காட்டியேயணுவாச்சுருக்கிடுங்கபடநாடகசாலமோ
எல்லாமும்வலதிந்தமனமாயையேழையாமென்னாலடக்கவசமோ
விகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகியெங்குநிறைகின்றபொருளே. ()

காகமானதுகோடிகூடிநின்றாலுமொருகல்லின்முன்னெதிர்நிற்குமோ
கர்மமானதுகோடிமுன்னேசெய்தாலுநின்கருணைப்ரவாகவருளைத்
தாகமாய்நாடினரைவாதிக்கவல்லதோதமியனேற்கருட்டாகமோ
சற்றுமிலையென்பதுவும்வெளியாச்சுவினையெலாஞ்சங்கேதமாய்க்கூடியே
தேகமானதைமிகவும்வாட்டுதேதுன்பங்கள்சேராமல்யோகமார்க்க
சித்தியோவரவில்லைசகசநிட்டைக்குமென்சிந்தைக்குமெவெகுதூரநா
னேகமாய்நின்னோடிருக்குநாளெந்தநாளிந்நாளின்முற்றுறாதோ
விகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகியெங்குநிறைகின்றபொருளே. ()

இனியேதெமக்குனருள்வருமோவெனக்கருதியேங்குதேநெஞ்சமையோ
வின்றைக்கிருந்தாரைநாளைக்கிருப்பரென்றெண்ணவோதிடமில்லையே
யனியாயமாயிந்தவுடலைநானென்றுவருமந்தகற்காளாகவோ
வாடித்திரிந்தநான்கற்றதுங்கேட்டதுமவலமாய்ப்போதனன்றோ
கனியேனும்வறியசெங்காயேனுமுதிர்சருகுசந்தமூலங்களேனுங்
கனல்வாதைவந்தெய்தினள்ளிப்புசித்துநான்கண்மூடிமௌனியாகித்
தனியேயிருப்பதற்கெண்ணினேனெண்ணமிதுசாமீநீயறியாததோ
சர்வபரிபூரணவகண்டதத்துவமானசச்சிதானந்தசிவமே. (௨௩)

காயாதமரமீதுகல்லேறுசெல்லுமோகடவுளேயாங்களடியேங்
கர்மபந்தத்தினாற்சன்மபந்தம்பெறக்கற்பித்ததுன்னதருளே
வாயாரவுண்டபேர்வாழ்த்துவதுநொந்தபேர்வைவதுவுமெங்களுலக
வாய்பாடுநிற்கநின்வைதிகவொழுங்குநினைவாழ்த்திநற்பெறுபேறுதா
னேயாதுபெறுவரெனமுறையிட்டதாற்பின்னருளாறுவதுகருமமன்று
முபயநெறியீதென்னினுஞ்சிதநெறியெந்தநெறியுலகிலேபிழைபொறுக்குந்
தாயானகருணையுமுனக்குண்டெனக்கினிச்சஞ்சலங்கெடவருள்செய்வாய்
சர்வபரிபூரணவகண்டதத்துவமானசச்சிதானந்தசிவமே. (௨௪)

கொந்தவிழ்மலர்ச்சோலைநன்னீழல்வைகினுங்குளிர்தீம்புனற்கையள்ளிக்
கொள்ளுகினுமந்நீரிடைத்திளைத்தாடினுங்குளிர்சந்தவாடைபடவார்
வந்துலவுகின்றதெனமுன்றிலிடையுலவவேவசதிபெறுபோதும்வெள்ளை
வட்டமதிபட்டப்பகற்போலநிலவுதரமகிழ்போதும்வேலையமுதம்



விந்தைபெறவறுசுவையில்வந்தெனவமுதுண்ணும்வேளையிலுமாலைசந்தம்
வெள்ளிலைபடைக்காய்விரும்பிவேண்டியவண்ணம்விளையாடிவிழிதுயிலி
சந்ததமுநின்னருளைமறவாவரந்தந்துதமியேனைரக்ஷைபுரிவாய் (ஞ
சர்வபரிபூரணவகண்டதத்துவமானசச்சிதானந்தசிவமே. (௨௫)

தந்தைதாய்தமர்தாரமகவென்னுமிவையெலாஞ்சந்தைபிற்கூட்டமிதிலோ
சந்தேகமில்லைமணிமாடமாளிகைமேடைசதுரங்கசேனையுடனே
வந்ததேதார்வாழ்வுமோரிந்த்ரசாலக்கோலம்வஞ்சனைபொறாமைலோபம்
வைத்தமனமாங்கிருமிசேர்ந்தமலபாண்டமோவாஞ்சனையிலாதகனவே
யெய்தநானுஞ்சரியெனத்தேர்ந்துதேர்ந்துமேயிரவுபகலில்லாவிடத்
தேகமாய்நின்றநின்னருள்வெள்ளமீதிலேயானென்பதறவுமூழ்கிச்
சிந்தைதான்றெளியாதுசுழலும்வகையென்கொலோதெரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமேதேசோமயானந்தமே. (௨௬)

பாடாதுபாடிப்படித்தளவில்சமயமும்பஞ்சுபடுசொல்லனிவனைப்
பார்மினோபார்மினோவென்றுசபைகூடவும்பரமார்த்தமிதுவென்னவே
யாடாதுமாடிநெஞ்சுருகிநெக்காடவேயமலமேயேகமேயெம்
பாதியேசோதியேயெங்குநிறைகடவுளேயரசேயெனக்கூவிநான்
வாடாதுவாடுமென்முகவாட்டமுங்கண்டுவாடாவெனக்கருணைநீ
வைத்திடாவண்ணமேசங்கேதமாவிந்தவன்மையைவளர்ப்பித்ததார்
தேடாதுதேடுவோர்தேட்டற்றதேட்டமேதெரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமேதேசோமயானந்தமே. (௨௭)

ஆராரெனக்கென்னபோதித்துமென்னவென்னறிவினைமயக்கவசமோ
வண்டகோடியையெலாங்கருப்பவறைபோலவுமடுக்கடுக்காவமைத்துப்
பேராமனின்றபரவெளியிலேமனவெளிபிறங்குவதலாதொன்றினும்
பின்னமுறமருவாதுநன்னயத்தாலினிப்பேரின்பமுத்திநிலையுந்
தாராதுதள்ளவும்போகாதுனாலதுதள்ளினும்போகேனியான்
றனடயேதமில்லையாண்டவனடிமையென்னுமிருதன்மையிலுமென்வழக்
தீராதுவிடுவதிலைநடுவானகடவுளேதெரியசத்தாகியென் [குத்
சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமேதேசோமயானந்தமே. (௨௮)

தெட்டிலேவலியமடமாதர்வாய்வெட்டிலேசிற்றிடையிலேநடையிலே
சேலொத்தவிழியிலேபாலொத்தமொழியிலேசிறுபிறைநுதற்கீற்றிலே
பொட்டிலேயவர்கட்டுபட்டிலேபுனைகந்தபொடியிலேயடியிலேமேற்
பூரித்தமுலையிலேநிற்கின்றநிலையிலேபுந்திதனைநுழையவிட்டு
நெட்டிலேயலையாமலறிவிலேபொறையிலேநின்னடியர்கூட்டத்திலே
நிலைபெற்றவன்பிலேமலைவற்றமெய்ஞ்ஞானநேயத்திலேயுனிருதாண்
மட்டிலேமனதுசெலநினதருளுமருள்வையோவளமருவுதேவையரசே
வரைராசனுக்கிருகண்மணியாயுதித்தமலைவளர்காதலிப்பெண்ணுமையே. ()

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# பட்டணத்துப்பிள்ளையார்பாடல்.

## திருவேகம்பமாலை.

அறந்தானியற்றுமவனிலுங்கோடியதிகமில்லத்
துறந்தானவனிற்சதகோடியுள்ளத்துறவுடையோன்
மறந்தானறக்கற்றறிவோடிருந்திருவாதனையற்
றிறந்தான்பெருமையையென்சொல்லுவேன்கச்சியேகம்பனே. (௧)

கட்டியணைத்திடும்பெண்டிருமக்களுங்காலத்தச்சன்
வெட்டிமுறிக்குமரம்போற்சரீரத்தைவீழ்த்திவிட்டாற்
கொட்டிமுழக்கியழுவார்மயானங்குறுகியப்பா
லெட்டியடிவைப்பரோவிறைவாகச்சியேகம்பனே. (௨)

கைப்பிடிநாயகன் றூங்கையிலேயவன் கையையெடுத்
தப்புறந்தன்னிலசையாமன்முன்வைத்தயல்வளவி
லொப்புடன்சென்றுதுயினீத்துப்பின்வந்துறங்குவளை
யெப்படிநானம்புவேனிறைவாகச்சியேகம்பனே. (௩)

நன்னாரிற்பூட்டியசூத்திரப்பாவைநன்னார்தப்பினாற்
றன்னாலுமாடிச்சலித்திடுமோவந்தத்தன்மையைப்போ
லுன்னாலியானுந்திரிவதல்லான்மற்றுனைப்பிரிந்தா
லென்னாலிங்காவதுண்டோவிறைவாகச்சியேகம்பனே. (௪)

நல்லாரிணக்கமுநின்பூசைநேசமுஞானமுமே
யல்லாதுவேறுநிலையுளதோவகமும்பொருளு
மில்லாளுஞ்சுற்றமுமைந்தரும்வாழ்வுமெழிலுடம்பு
மெல்லாம்வெளிமயக்கேயிறைவாகச்சியேகம்பனே. (௫)

பொல்லாதவனெறிநில்லாதவனைப்புலன்கடமை
வெல்லாதவன்கல்விகல்லாதவன்மெய்யடியவர்பாற்
சொல்லாதவனுண்மைசொல்லாதவனின்றிருவடிக்கன்
பில்லாதவன்மண்ணிலேன்பிறந்தேன்கச்சியேகம்பனே. (௬)

பிறக்கும்பொழுதுகொடுவந்ததில்லைப்பிறந்துமண்மே
லிறக்கும்பொழுதுகொடுபோவதில்லையிடைநடுவிற்
குறிக்குமிச்செல்வஞ்சிவன்றந்ததென்றுகொடுக்கறியா
திறக்குங்குலாமருக்கென்சொல்லுவேன்கச்சியேகம்பனே. (௭)

அன்னவிசாரமதுவேவிசாரமதுவொழிந்தாற்
சொன்னவிசாரந்தொலையாவிசாரநற்றோகையரைப்
பன்னவிசாரம்பலகால்விசாரமிப்பாவிநெஞ்சுக்
கென்னவிசாரம்வைத்தாயிறைவாகச்சியேகம்பனே. (௮)

கல்லாப்பிழையுங்கருதாப்பிழையுங்கசிந்துருகி
நில்லாப்பிழையுநினையாப்பிழையுநின்னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந்துதியாப்பிழையுந்தொழாப்பிழையு
மெல்லாப்பிழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே. (௯)



மாயநட்போரையுமாயாமலமெனுமாதரையும்
வீயவிட்டோட்டிவெளியேபுறப்பட்டுமெய்யருளாந்
தாயுடன்சென்றுபின்றாதையைக்கூடிப்பின்றாயைமறந்
தேயுமதேநிட்டையென்றானெழிற்கச்சியேகம்பனே. (௧௦)

வரிக்கோலவேல்விழியாரநுராகமயக்கிற்சென்று
சரிக்கோதுவேனெழுத்தஞ்சுஞ்சொலேன்றமியேனுடலம்
நரிக்கோகழுகுபருந்தினுக்கோவெய்யநாய்தனக்கோ
வெரிக்கோவிரையெதுக்கோவிறைவாகச்சியேகம்பனே. (௧௧)

காதென்றுமூக்கென்றுகண்ணென்றுகாட்டியென்கண்ணெதிரே
மாதென்றுசொல்லிவருமாயைதன்னைமறவிவிட்ட
தூதென்றெண்ணாமற்சுகமென்றுநாடுமித்துர்ப்புத்தியை
யேதென்றெடுத்துரைப்பேனிறைவாகச்சியேகம்பனே. (௧௨)

ஊருஞ்சதமல்லவுற்றார்சதமல்லவுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்லபெண்டீர்சதமல்லபிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்லசெல்வஞ்சதமல்லதேசத்திலே
யாருஞ்சதமல்லநின்றாள்சதங்கச்சியேகம்பனே. (௧௩)

சீறும்வினையதுபெண்ணுருவாகித்திரண்டுருண்டு
கூறுமுலையுமிறைச்சியுமாகிக்கொடுமையினாற்
பீறுமலமுமுதிரமுஞ்சாயும்பெருங்குழிவிட்
டேறுங்கரைகண்டிலேனிறைவாகச்சியேகம்பனே. (௧௪)

பொருளுடையோரைச்செயலினும்வீரரைப்போர்க்களத்துந்
தெருளுடையோரைமுகத்தினுந்தேர்ந்துதெளிவதுபோ
லருளுடையோரைத்தவத்திற்குணத்திலருளிலன்பி
லிருளறுசொல்லினுங்காணத்தகுங்கச்சியேகம்பனே. (௧௫)

வாதுக்குச்சண்டைக்குப்போவர்வருவர்வழக்குரைப்பர்
தீதுக்குதவியுஞ்செய்திடுவார்தினந்தேடியொன்று
மாதுக்களிந்துமயங்கிடுவார்விதியாளுமட்டு
மேதுக்கிவர்பிறந்தாரிறைவாகச்சியேகம்பனே. (௧௬)

ஓயாமற்பொய்சொல்வர்நல்லோரைநிந்திப்பருற்றுப்பெற்ற
தாயாரைவைவர்சதியாயிரஞ்செய்வர்சாத்திரங்க
ளாயார்பிறர்க்குபகாரஞ்செய்யார்தமையண்டினர்க்கொன்
றீயாரிருந்தென்னபோயென்னகாண்கச்சியேகம்பனே. (௧௭)

நாயாய்ப்பிறந்திடினல்வேட்டையாடிநயம்புரியுந்
தாயார்வயிற்றினராய்ப்பிறந்துபின்சம்பன்னராய்க்
காயாமரமும்வறளாங்குளமுங்கல்லாவுமென்ன
வீயாமனிதரையேன்படைத்தாய்கச்சியேகம்பனே. (௧௮)

பெண்ணாகிவந்தொருமாயப்பிசாசம்பிடித்திட்டென்னைக்
கண்ணால்வெருட்டிமுலையான்மயக்கிக்கடிதடத்துப்
புண்ணாங்குழியிடைத்தள்ளியென்போதப்பொருள்பறிக்க
வெண்ணாதுனைமறந்தேனிறைவாகச்சியேகம்பனே. (௧௯)

நாவாரவேண்டும்விதஞ்சொல்லுவாருனைநான்பிரிந்தாற்
சாவேனென்றேயிருந்தொக்கவுண்பார்கள்கைதான்வறண்டாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்வாருமென் றடுத்தலைக்கேகுட்டும்பூவையருக்
கீவார் தலைவிதியோவிறைவாகச்சியேகம்பனே. (௨௰)

கல்லார்சிவகதைநல்லோர் தமக்குக்கனவிலுமெய்
சொல்லார்பசித்தவர்க்கன்னங்கொடார்குருசொன்னபடி
நில்லாரறத்தைநினையார்நின்னாமநினைவிற்சற்று
மில்லாரிருந்தென்னிறந்தென்புகல்கச்சியேகம்பனே (௨௧)

சொல்லால்வருங்குற்றஞ்சிந்தனையால்வருந்தோடஞ்செய்த
பொல்லாததீவினைபார்வையிற்பாவங்கள்புண்ணியநூ
லல்லாதகேள்வியைக்கேட்டிடுந்தீங்குகளாயவுமற்
றெல்லாப்பிழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே. (௨௨)

முட்டற்றமஞ்சளையெண்ணெயிற்கூட்டிமுகமினுக்கி
மெட்டிட்டுப்பொட்டிட்டுப்பித்தளையோலைவிளக்கியிட்டுப்
பட்டப்பகலில்வெளிமயக்கேசெயும்பாவையர்மே
லிட்டத்தைநீதவிர்ப்பாயிறைவாகச்சியேகம்பனே. (௨௩)

பொன்னைநினைந்துவெகுவாகத்தேடுவர்பூவையன்ன
டன்னைநினைந்துவெகுவாயுருகுவர்தாரணியி
லுன்னைநினைந்திங்குனைப்பூசியாதவுலுத்தரெல்லா
மென்னையிருந்துகண்டாயிறைவாகச்சியேகம்பனே. (௨௪)

கடுஞ்சொல்லின்வம்பரையீனரைக்குண்டரைக்காமுகரைக்
கொடும்பவமேசெயும்நிர்மூடர்தம்மைக்குவலயத்தி
னெடும்பனைபோலவளர்ந்துநல்லோர்தநெறியறியா
விடும்பரையேன்வகுத்தாயிறைவாகச்சியேகம்பனே. (௨௫)

## திருவேகம்பவிருத்தம்.

அன்னையெத்தனையெத்தனையன்னையோவப்பனெத்தனையெத்தனையப்
பனோ, பின்னையெத்தனையெத்தனைபெண்டிரோபிள்ளையெத்தனையெத்தனை
பிள்ளையோ, முன்னையெத்தனையெத்தனைசென்மமோமூடனாயடியேனுமறிந்
திலே, னின்னமெத்தனையெத்தனைசென்மமோவென்செய்வேன்கச்சியேகம்
பநாதனே. (௨௬)

## திருத்தில்லை.

ஓடாமற்பாழுக்குழையாமலோரமுரைப்பவர்பாற்
கூடாமனல்லவர்கூட்டம்விடாமல்வெங்கோபநெஞ்சி
னாடாமனன்மைவழுவாமலின்றைக்குநாளைக்கென்று
தேடாமற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே. (௨௭)

கொல்லாமற்கொன்றதைத்தின்னாமற்குத்திரங்கோள்களவு
கல்லாமற்கைதவரோடிணங்காமற்கனவினும்பொய்
சொல்லாமற்சொற்களைக்கேளாமற்றோகையர்மாயையிலே
செல்லாமற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே. (௨௮)

முடிசார்ந்தமன்னருமற்றுமுள்ளோருமுடிவிலொரு
பிடிசாம்பராய்வெந்துமண்ணாவதுங்கண்டுபின்னுமிந்தப்
படிசார்ந்தவாழ்வைநினைப்பதல்லாற்பொன்னினம்பலவ
ரடிசார்ந்துநாமுய்யவேண்டுமென்றேயறிவாரில்லையே. (௨௯)



காலையுபாதிமலஞ்சலமாமன்றிக்கட்டுச்சியிற்
சாலவுபாதிபசிதாகமாகுழற்சஞ்சிதமா
மாலையுபாதிதுயில்காமமாமிவைமாற்றிவிட்டே
யாலமுகந்தருளம்பலவாவென்னையாண்டருளே. (௩௰)

பிறவாதிருக்கவரம்பெறல்வேண்டும்பிறந்துவிட்டா
லிறவாதிருக்கமருந்துண்டுகாணிதுவெப்படியோ
வறமார்புகழ்த்தில்லையம்பலவாணரடிக்கமல
மறவாதிருமனமேயதுகாணன்மருந்துனக்கே. (௩௧)

ஆற்றோடுதும்பையணிந்தாடுமம்பலவாணர்தமைப்
போற்றாதவர்க்கடையாளமுண்டேயிந்தப்பூதலத்திற்
சோற்றாவியற்றுச்சுகமற்றுச்சுற்றத்தணியுமற்றே
யேற்றாலும்பிச்சைகிடையாமலேக்கற்றிருப்பார்களே. (௩௨)

## திருவொற்றியூர்.

ஐயுந்தொடர்ந்துவிழியுஞ்சொருகியறிவழிந்து
மெய்யும்பொய்யாகிவிடுகின்றபோதொன்றுவேண்டுவன்யான்
செய்யுந்திருவொற்றியூருடையீர்திருநீறுமிட்டுக்
கையுந்தொழப்பண்ணியைந்தெழுத்தோதவுங்கற்பியுமே. (௩௩)

## திருவிடைமருதூர்.

காடேதிரிந்தென்னகாற்றேபுசித்தென்னகந்தைசுற்றி
யோடேயெடுத்தென்னவுள்ளன்பிலாதவரோங்குவிண்ணோர்
நாடேயிடைமருதீசர்க்குமெய்யன்பர்நாரியர்பால்
வீடேயிருப்பினுமெய்ஞ்ஞானவீட்டின்பமேவுவரே. (௩௪)

## திருக்கழுக்குன்றம்.

காடோசெடியோகடற்புறமோகனமேமிகுந்த
நாடோநகரோநகர்நடுவோநலமேமிகுந்த
வீடோபுறத்திண்ணையோதமியேனுடல்வீழுமிட
நீடோய்கழுக்குன்றிலீசாவுயிர்த்துணைநின்பதமே. (௩௫)

## திருக்காளத்தி.

பத்தும்புகுந்துபிறந்துவளர்ந்துபட்டாடைசுற்றி
முத்தம்பவளம்பூண்டோடியாடிமுடிந்தபின்பு
செத்துக்கிடக்கும்பிணத்தருகேயினிச்சாம்பிணங்கள்
கத்துங்கணக்கென்னகாண்கயிலாபுரிக்காளத்தியே. (௩௬)

பொன்னாற்பிரயோசனம்பொன்படைத்தாற்குண்டுபொன்படைத்தோன்
றன்னாற்பிரயோசனம்பொன்னுக்கங்கேதுண்டத்தன்மையைப்போ
லுன்னாற்பிரயோசனம்வேணதெலாமுண்டுனைப்பணியு
மென்னாற்பிரயோசனமேதுண்டுகாளத்தியீசனே. (௩௭)

முப்போதுமன்னம்புசிக்கவுந்தூங்கவும்மோகத்தினாற்
செப்போதிளமுலையாருடன்சேரவுஞ்சீவன்விடு
மப்போதுகண்கலக்கப்படவும்மமைத்தாயையனே
யெப்போதுகாணவல்லேன்றிருக்காளத்தியீசனே. (௩௮)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாறுங்குருதிச்சலதாரைதோற்புரைநாடொறுஞ்சீ
யூறுமலக்குழிகாமத்துவாரமொளித்திடும்புண்
டேறுந்தசைப்பிளப்பந்தரங்கத்துளசிற்றின்பம்விட்
டேறும்பதந்தருவாய்திருக்காளத்தியீசரனே. (௫௯)

மதுரை.

விடப்படுமோவிப்பிரபஞ்சவாழ்க்கையைவிட்டுமனங்
கிடப்படுமோநின்னருளின்றியேதினமேயலையக்
கடப்படுமோவற்பர்வாயிலிற்சென்றுகண்ணீர்ததும்பிப்
படப்படுமோசொக்கநாதசவுந்தரபாண்டியனே. (௬௦)

பொது.

உடைகோவணமுண்டுறங்கப்புறந்திண்ணையுண்டுணவிங்
கடைகாயிலையுண்டருந்தத்தண்ணீருண்டருந்துணைக்கே
விடையேறுமீசர்திருநாமமுண்டிந்தமேதினியில்
வடகோடுயர்ந்தென்னதென்கோடுசாய்ந்தென்னவான்பிறைக்கே. ()

வீடுநமக்குத்திருவாலங்காடுவிமலர்தந்த
வோடுநமக்குண்டுவற்றாதபாத்திரமோங்குசெல்வ
நாடுநமக்குண்டுகேட்டதெல்லாந்தரநன்னெஞ்சமே
யீடுநமக்குச்சொலவோவொருவருமிங்கில்லையே. (௬௨)

கையொன்றுசெய்யவிழியொன்றுநாடக்கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்றுவஞ்சகநாவொன்றுபேசப்புலால்கமழு
மெய்யொன்றுசாரச்செவியொன்றுகேட்கவிரும்புமியான்
செய்கின்றபூசையெவ்வாறுகொள்வாய்வினைதீர்த்தவனே. (௬௩)

கண்ணுண்டுகாணக்கருத்துண்டுநோக்கக்கசிந்துருகிப்
பண்ணுண்டுபாடச்செவியுண்டுகேட்கப்பல்பச்சிலையா
லெண்ணுண்டுசாத்தவெதிர்நிற்கவீசனிருக்கையிலே
மண்ணுண்டுபோகுதையோகெடுவீரிந்தமானுடமே. (௬௪)

சொல்லினுஞ்சொல்லின்முடிவிலும்வேதச்சுருதியிலு
மல்லிலுமாசற்றவாகாயந்தன்னிலுமாய்ந்துவிட்டோ
ரில்லிலுமன்பரிடத்திலுமீசனிருக்குமிடங்
கல்லிலுஞ்செம்பிலுமோவிருப்பானெங்கள்கண்ணுதலே. (௬௫)

வினைப்போகமேயொருதேகங்கண்டாய்வினைதானொழிந்தாற்
றினைப்போதளவுநில்லாதுகண்டாய்சிவன்பாதநினை
நினைப்போரைமேவுநினையாரைநீங்கிநெறியினின்று
லினைப்போலொருவருண்டோமனமேயெனக்குற்றவரே. (௬௬)

பட்டைக்கிழித்துப்பருவூசிதன்னைப்பரிந்தெடுத்து
முட்டச்சுருட்டியென்மொய்குழலாள்கையின்முன்கொடுத்துக்
கட்டியிருந்தகனமாயக்காரிதன்காயமெல்லாம்
விட்டுப்பிரியவென்றோவிங்ஙனேசிவன்மீண்டதுவே. (௬௭)

சூதற்றகொங்கையுமானார்கலவியுஞ்சூழ்பொருளும்
போதற்றபூசலுக்கென்செயலாஞ்செய்தபுண்ணியத்தா



றீதற்றமன்னவன்சிந்தையினின்றுதெளிவதற்கோ
காதற்றவூசியைத்தந்துவிட்டானென்றன்கைதனிலே. (௬௮)

வாதுற்றதிண்புயரண்ணாமலையர்மலர்ப்பதத்தைப்
போதுற்றெப்போதும்புகலுநெஞ்சேயிந்தப்பூதலத்திற்
றீதுற்றசெல்வமென்றேடிப்புதைத்ததிரவியமென்
காதற்றவூசியும்வாராதுகாணுங்கடைவழிக்கே. (௬௯)

வேதத்தினுட்பொருண்மண்ணாசைமங்கையைவிட்டுவிடப்
போகித்தவன்மொழிகேட்டிலையோசெய்தபுண்ணியத்தா
லாகித்தன்சந்திரன்போலேவெளிச்சமதாம்பொழுது
காதற்றவூசியும்வாராதுகாணுங்கடைவழிக்கே. (௭௦)

மனையாளுமக்களும்வாழ்வுந்தனமுந்தன்வாயின்மட்டே
யினமானசுற்றமயானமட்டேவழிக்கேதுதுணை
தினையாமளவெள்ளளவாகினுமுன்புசெய்ததவந்
தனையாளவென்றும்பரலோகஞ்சித்திக்குஞ்சத்தியமே. (௭௧)

அத்தமும்வாழ்வுமகத்துமட்டேவிழியம்பொழுக
மெத்தியமாதரும்வீதிமட்டேவிம்மிவிம்மியிரு
கைத்தலைமேல்வைத்தழுமைந்தருஞ்சுடுகாடுமட்டே
பற்றித்தொடருமிருவினைப்புண்ணியபாவமுமே. (௭௨)

சீயுங்குருதிச்செழுநீர்வழும்புஞ்செறிந்தெழுந்து
பாயும்புடவையொன்றில்லாதபோதுபகலிரவா
யீயுமெறும்புமுகுகின்றயோனிக்கிரவுபகன்
மாயுமனிதரைமாயாமல்வைக்கமருந்தில்லையே. (௭௩)

சீதப்பனிக்குண்டுசிக்கெனக்கந்தைதினம்பசித்தால்
நீதுய்க்கச்சோறுமனைதோறுமுண்டுநினைவெழுந்தால்
வீதிக்குணல்லவிலைமாதருண்டிந்தமேதினியி
லேதுக்குநீசலித்தாய்மனமேயென்றும்புண்படவே. (௭௪)

மையாடுகண்ணியுமைந்தரும்வாழ்வுமனையுஞ்செந்தீ
யையாநின்மாயையுருவெளித்தோற்றமகிலத்துள்ளே
மெய்யாயிருந்ததுநாட்செலநாட்செலவெட்டவெறும்
பொய்யாய்ப்பழங்கதையாய்க்கனவாய்மெல்லப்போனதுவே. (௭௫)

மாடுண்டுகன்றுண்டுமக்களுண்டென்றுமகிழ்வதெல்லாங்
கேடுண்டெனும்படிகேட்டுவிட்டோமினிக்கேண்மனமே
யோடுண்டுகந்தையுண்டுள்ளேயெழுந்தைந்துமோதவுண்டு
தோடுண்டகண்டனடியார்நமக்குத்துணையுமுண்டே. (௭௬)

பூணும்பணிக்கல்லபொன்னுக்குத்தாணல்லபூமிதனைக்
காணும்படிக்கல்லமங்கையர்க்கல்லநற்காட்சிக்கல்ல
சேணுங்கடந்தசிவனடிக்கல்லவென்சிந்தைகெட்டுச்
சாணும்வளர்க்கவடியேன்படுந்துயர்சற்றல்லவே. (௭௭)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# இராமலிங்கசுவாமிபாடல்.

## விருத்தம்.

உலகநிலைமுழுதாகியாங்காங்குள்ளவுயிராகியுயிர்க்குயிராமொளிதானாகிக்
கலகநிலையறியாதகாட்சியாகிக்கதியாகிமெய்ஞ்ஞானக்கண்ணதாகி
யிலகுசிதாகாசமதாய்ப்பரமாகாசவியல்பாகியிணையொன்றுமில்லாதாகி
யிலகிலறிவானந்தமாகிச்சச்சிதானந்தமயமாகியமர்ந்ததேவே. (௧)

## கட்டளைக்கலித்துறை.

நான்படும்பாடுசிவனேயுலகர்நவிலும்பஞ்சு
தான்படுமோசொல்லத்தான்படுமோவெண்ணத்தான்படுமோ
கான்படுகண்ணியின்மான்படுமாறுகலங்கிநின்றே
னென்படுகின்றனையென்றிரங்காயென்னிலென்செய்வனே. (௨)

நான்செய்தபுண்ணியமியாதோசிவாயநமவெனவே
யூன்செய்தநாவைக்கொண்டோதப்பெற்றேனெனையொப்பவரார்
வான்செய்தநான்முகத்தோனுந்திருநெடுமாலுமற்றைத்
தேன்செய்தகற்பகத்தேவனுந்தேவருஞ்செய்யரிதே. (௩)

காற்றுக்குமேல்விட்டபஞ்சாகியுள்ளங்கறங்கச்சென்றே
சோற்றுக்குமேற்கதியின்றெனவேற்றகந்தோறுமுண்போர்
தூற்றுக்குமேற்பெருந்தூரிலையாங்கென்றுயரமெனுஞ்
சேற்றுக்குமேற்பெருஞ்சேறிலைகாணருட்செவ்வண்ணனே. (௪)

## விருத்தங்கள்.

ஊதியம்பெறுவொர்நியனேன்மதிபோயுழலும்பாவியேனுண்மையொன்றறி
வாதியம்புறும்வஞ்சகருடனேவாயிழுக்குறவன்மைகள்பேசி (யேன்
யாதியெம்பெருமானுனைமறந்தேனன்பிலாதவென்வன்பினைநினைக்கி
நீதியம்பியநஞ்சமுங்கலங்குந்திகழுமொற்றியூர்த்தியாகமாமணியே. (௫)

வானைநோக்கிமண்வழிநடப்பவன்போல்வயங்குநின்னருள்வழியிடைநட
ப்பா, னூனைநோக்கினேனுயினுமடியேனுய்யும்வண்ணநீயுவந்தருள்புரிவாய்,
மானைநோக்கியநோக்குடைமலையாண்மகிழமன்றிடைமாநடம்புரிவோய், தே
னைநோக்கியகொன்றையஞ்சடையோய்திகழுமொற்றியூர்த்தியாகநாயகனே.()

அஞ்செழுத்தோதியுய்ந்திடாப்பிழையையயன்றிருவுளத்தெண்ணி
வெஞ்சமென்றையோகைவிடிற்சிவனேவேறுநான்யாதுசெய்வேனே
கஞ்சன்மான்முதலோருயிர்பெறவிடத்தைக்களத்திருத்தியவருட்கடலே
சஞ்சிதமறக்குஞ்சண்முகமுடையோன்றந்ததயேயொற்றியெந்தவமே. (௭)

தன்னையறிந்தின்பமுறவெண்ணிலாவே - ஒரு
தந்திரநீசொல்லவேண்டும்வெண்ணிலாவே. (௮)

நாதமுடிமேலிருந்தவெண்ணிலாவே - அங்கே
நானும்வரவேண்டுகின்றேன்வெண்ணிலாவே. (௯)

சச்சிதானந்தக்கடலில்வெண்ணிலாவே - நானுந்
தாழ்ந்துவிழவேண்டுகின்றேன்வெண்ணிலாவே. (௧௦)



இராப்பகலில்லாவிடத்தேவெண்ணிலாவே - நானும்
இருக்கவெண்ணிவாடுகின்றேன்வெண்ணிலாவே. (௧௧)

தேசுநீறமாய்நிறைந்தவெண்ணிலாவே - நானுஞ்
சிவமயமதாய்விளங்கேதன்வெண்ணிலாவே. (௧௨)

போதநடுவூடிருந்தவெண்ணிலாவே - மலப்
போதமறவேண்டுகின்றேன்வெண்ணிலாவே. (௧௩)

ஆருமறியாமலிங்கேவெண்ணிலாவே - அரு
ளாளர்வருவாரோசொல்வாய்வெண்ணிலாவே. (௧௪)

## கீர்த்தனைகள்

இராகம்- தோடி. தாளம் - ஆதி.

பல்லவி.

தெண்டனிட்டே னென்று சொல்லடி - சுவாமிக்குநான்
தெண்டனிட்டே னென்று சொல்லடி.

அனுபல்லவி.

தண்டலைவிளங்குந்தில்லைத்தலத்திற்பொன்னம்பலத்தே
கண்டவர்மயங்கவேடங்கட்டியாடுகின்றவர்க்குத் தெண்ட-

சரணங்கள்.

கற்பூரவாசம்வீசும்பொற்பார்திருமுகத்தே
கனிந்தபுன்னகையாடக்கருணைக்கடைக்கணுட
அற்பார்பொன்னம்பலத்தேயானந்தத்தாண்டவ
மாடிக்கொண்டேயென்னையாட்டங்கண்டாருக்குத் தெண்ட-

இழிந்தாலுநம்மையிங்கேயேற்றுவாரென்றடைந்தால்
எற்றுவார்போலேபின்னுமிழியவைப்பாருக்குப்
பழந்தாநழுவிமெல்லப்பாலில்விழுந்ததென்னப்
பசப்பிப்பசப்பியன்பர்பண்டம்பறிப்பவர்க்குத் தெண்ட-

சுட்டதிருநீறுபூசித்தொந்தோவென்றாடுவார்க்குத்
தோன்றுதலைமாலையணிதோள்விளங்கவருவார்க்குப்
பிட்டுக்காசைப்பட்டுமாறன்பிரம்படிபட்டவர்க்குப்
பிள்ளைக்கறிக்காசைகொண்டகள்ளத்தவவேடருக்குத் தெண்ட-

வாழ்ந்தாரைமேன்மேலும்வாழச்செய்பவருக்கு
மாசுபறித்தவர்கையிற்காசுபறிக்கின்றவர்க்குத்
தாழ்ந்தாரையடிக்கடிதாழக்காண்பவருக்குத்
தானுகிநானுகித்தனியேநின்றவருக்குத் தெண்ட-

ஆதியந்தநடுவில்லாவானந்தநாடருக்கு
அண்டருயிர்காத்தமணிகண்டசசிகண்டருக்குச்
சோதிமயமாய்விளங்குந்தூயவடிவாளருக்குத்
தொண்டர்குடிகெடுக்கதுவஜங்கட்டிக்கொண்டவர்க்குத் தெண்ட-

பாட்டுக்காசைப்பட்டுமுன்னம்பரவைதன்வாயிலிற்போய்ப்
பண்புரைத்துத்தூதனென்றேபட்டங்கட்டிக்கொண்டவர்க்கு
வீட்டுக்காசைப்படுவாரைவீட்டைவிட்டுத்துரத்தியே
வேட்டாண்டியாயுலகிலோட்டாண்டியாக்குவார்க்குத் தெண்ட-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்வயிற்றிற்பிறவாத தானேமூளைத்தவர்க்குச்
சாதிகுலமறியாத தாண்டவஞ்செய்கின்றவர்க்கு
ஐயதொழிலருளுமென்பிராணநாயகர்க்கு
எமர்ந்தவரையெல்லாமேமாத்துமீசருக்குத் தெண்ட- (௧௫)

இராகம்- காம்போதி. தாளம்- ஆதி.

பல்லவி.

இன்னந்தயவுவரவில்லையா - உனக்கென்மீதி
லென்னவர்மஞ்சொல்லையா.

சரணங்கள்.

அன்னம்பாலிக்குந்தில்லைப்பொன்னம்பலத்திலாடும்
அரசேஅரசேஅரசேயென்றலறவும் இன்னந்-

சின்னஞ்சிறுவயதிலென்னையடிமைகொண்ட
சிவமேசிவமேசிவமேயென்றலறவும் இன்னந்-

முன்னம்பிழைபொறுத்தாயின்னம்பொறுத்துவிட்டான்
முறையோமுறையோமுறையோவென்றலறவும் இன்னந்-

தன்னையறியாவென்னையின்னலுறச்செய்தாயே
தகுமோதகுமோதகுமோவென்றலறவும் இன்னந்-

பண்டுமகிழ்ந்தென்னையாட்கொண்டுகருணைசெய்த
பரமேபரமேபரமேயென்றலறவும் இன்னந்-

கொண்டுகுலம்பேசுவாருண்டோவுலகிலெங்கள்
குருவேகுருவேகுருவேயென்றலறவும் இன்னந்- (௧௬)

## விருத்தங்கள்.

கற்றவர்தங்கருத்தினின்முக்கனிரசம்போலினிக்குங் கழலடிகள்வருந்தியிடக்கடிதுநடந்திரவின், மற்றவர்காணுதெளியேனிருக்குமிடத்தடைந்து மனைக்கதவுதிறப்பித்துவலிந்தெனையங்கழைத்து, நற்றவர்க்குமரிதெனைவாங்கெனவென்கரத்தேதந்தியநின்பெருங்கருணைநட்பினையென்னென்பேன், னற்றவர்க்கும்பற்றவர்க்கும்பொதுவினிலேநடஞ்செயருட்குருவே சச்சிதானந்தபரம்பொருளே. (௧௭)

உலர்ந்தமரந்தழைக்குமொருதிருவுருவந்தாங்கியுணர்விலியேன்முன்னருவந்துறுகருணைதுளும்ப, மலர்ந்தமுகங்காட்டிநின்றுதிருநீற்றுப்பையை மலர்க்கரத்தாலவிழ்த்தங்குவதிந்தவர்கட்கெல்லா, மலர்ந்ததிருநீறளித்துப்பின்னரென்றன்கரத்திலருண்மணப்பூவளித்தனைநின்னருட்குறிப்பேதறியேன், கலந்தவரைக்கலந்துமணிக்கனகமன்றிநடஞ்செய்கருணைநெடுங்கடலேயென்கண்ணமர்ந்தவொளியே. (௧௮)

மருளுறுமனமுங்கொடியவெங்குணமுமதித்தறியாததன்மயி
மிருளுறுநிலையுநீங்கிநின்னடியையெந்தநாளடைகுவனெளியே
னருளுறுமொளியாயவ்வொளிக்குள்ளேயமர்ந்தசிற்பரவொளிநிறைவே
வெருளுறுசமயத்தறியொணுச்சித்திவிநாயகவிக்கினேச்சுரனே. (௧௯)

திருவுங்கல்வியுஞ்சீருஞ்சிறப்புமுன் திருவடிப்புகழ்பாடுந்திறமுநல்
லுருவுஞ்சீலமுமூக்கமுந்தாழ்வுறாவுணர்வுந்தென துள்ளத்தமர்ந்தவா



குருவுந்தெய்வமுமாகியன்பானர்தங்குறைதவிர்க்குங்குணப்பெருங்குன்றமே
வெருவுஞ்சிந்தைதவிலக்குகஜானனம்விளங்குஞ்சித்திவிநாயகவள்ளலே. (௨௦)

கும்பமாமுனியின்கரகநீர்க்கவிழ்த்துக்குளிர்மலர்நந்தனங்காத்துச்
செம்பொனுட்டிறைவற்கருளியநினது திருவருட்பெருமையைமறவேன்
நம்பினூர்க்கினியவருண்மகப்பேறேநற்குணத்தோர்பெருவாழ்வே
வம்பறுமலர்த்தார்மழைமுகிற்கூந்தல்வல்லபைக்கணேசமாமணியே. (௨௧)

வல்லிருட்பவந்நீர்மருந்தெனுநினதுமலரடிமனமுறவழுத்தாப்
புல்லர்தம்பிடம்புப்பொய்யனேன்புகுதல்பொறுக்கிலன்பொறுக்கிலன்கண்டா
யொல்லையினெனைமீட்டுன்னடியவர்பாலுற்றுவாழ்ந்திடச்செயினுய்வேன்
சல்லமற்றவர்கட்கருடரும்பொருளேதணிகைவாழ்சரவணபவனே. (௨௨)

தேகமுறுபூதநிலைத்திறஞ்சிறிதுமறியேன் சித்தாந்தநிலையறியேன் சித்திநிலையறியேன், யோகமுறுநிலைசிறிதுமுணர்ந்தறியேன்சிறியேனுலகநடையிடைக்கிடந்தேயுழைப்பாரிற்கடையேன், ஆகமுறுதிருநீற்றிலொளிவிளங்கவசைந்தேயம்பலத்திலாடுகின்றவடியையறிவேனோ, ஏகவனுபவமறியேனெனக்கனாள்புகுவேன்யார்க்குரைப்பேனென்னசெய்வேனேதுமறிந்திலனே. ()

கட்டவிழ்ந்தகமலமெனக்கருத்தவிழ்ந்துநினையேகருதுகின்றேன்வேறொன்றுங்கருதுகிலேனிதுதான், சிட்டருளங்திகழ்கின்றசிவபதியேநினதுதிருவுளமேயறிந்ததுநான்செப்புதலென்புவிமேல், விட்டகுறைதொட்டகுறையிரண்டுநிறைந்தனனீவிரைந்துவந்தேயருட்சோதிபுரிந்தருளுந்தருணந், தொட்டநான்றுணிந்துரைத்தேனீயுணர்த்தவுணர்ந்தே சொல்வதலாலென்னறிவாற்சொல்லவல்லேனன்றே. (௨௪)

படமுடியாதினித்துயரம்படமுடியாதரசே பட்டதெல்லாம்போதுமிந்தப்பயந்தீர்த்திப்பொழுதென், னுடலுயிராதியவெல்லாம்நீயெடுத்துக்கொண்டுனுடலுயிராதியவெல்லாமுவந்தெனக்கேயளிப்பாய், வடலுறுசிற்றம்பலத்தேவாழ்வாயென்கண்ணுண்மணியேயென்குருமணியேமாணிக்கமணியே, நடனசிகாமணியேயென் நவமணியேஞானநன்மணியேபொன்மணியே நடராஜமணியே. (௨௫)

வாழையடிவாழையெனவந்ததிருக்கூட்டமரபினில்யானொருவனன்றோவகையறியேனிந்த, வேழைபடும்பாடுனக்குத்திருவுளச்சம்மதமோ விதுதகுமோவிதுமுறையோவிதுதருமந்தானோ, மாழைமணிப்பொதுநடஞ்செய்வள்ளால்யானுனக்குமகனலனோநீயெனக்குவாய்த்ததந்தையலையோ, கோழையுலகுயிர்த்துயரமினிப்பொறுக்கமாட்டேன் கொடுத்தருணின்னருளொளியைக்கொடுத்தருளிப்பொழுதே. (௨௬)

படமாட்டேன்றுயர்சிறிதும்படமாட்டேனினிநான் பயப்படவுமாட்டேனும்பதத்துணையேபிடித்தேன், விடமாட்டேனெமாந்துவிடமாட்டேன்கண்டாய்மெய்ம்மயிது நம்மாணைவிளம்பினனும்மடியேன், கெடமாட்டேன்பிறர்மொழிகள்கட்டிடவுமாட்டேன் கிளரொளியம்பலத்தாடல்வளரொளிநும்மல்லால், மாட்டேனென்னுளத்தேநான்சாகமாட்டேனல்லதிருவருளாலோன்றுணேனே. (௨௭)

கல்லார்க்குங்கற்றவர்க்குங்களிப்பருளுங்களிப்பே காணார்க்குங்கண்டவர்க்குங்கண்ணளிக்குங்கண்ணே, வல்லார்க்குமாட்டார்க்கும்வரமளிக்கும்வரமே மதியார்க்கும்மதிப்பவர்க்கும்மதிகொடுக்குமதியே, நல்லார்க்கும்பொல்லார்க்குநடுநின்றநடுவேநரர்களுக்குஞ்சுரர்களுக்கும்நலங்கொடுக்குநலமே, யெல்லாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பொதுவில்நடமிடுகின்றசிவமே யென்னரசேயான்புகலுமிசையுமணிந்தருளே. (உஅ)

எண்ணுதமந்திரமேயெழுதாதமறையேயேறாதமேனிலைநின்றிறங்காதநிறைவே, பண்ணுதபூசையிலேபடியாதபடிப்பேபாராதபார்வையிலே பதியாதபதிப்பே, நண்ணுதமனத்தகத்தேயெண்ணுதநலமேநாடாதநாட்டகத்தே நடவாதநடப்பே, யண்ணுவென்னப்பாவென்னையாவென்னரசேயடியிணைக்கென்சொன்மாலையணிந்துமகிழ்ந்தருளே. (உகூ)

ஆணவமாமிருட்டறையிற்கிடந்தசிறியேனையணிமாயைவிளக்கறையி லமர்த்தியறிவளித்து, நீணவமாந்தத்துவப்பொன்மேடையிசையேற்றி நிறைந்தவருளமுதளித்துநித்தமுறவளர்த்து, மாணுறவெல்லாநலமுங்கொடுத்துலகமறியமணிமுடியுஞ்சூட்டியவென்வாழ்முதலாம்பதியே, யேணுறுசிற்சபையிடத்தும்பொற்சபையினிடத்துமிலங்குநடத்தரசேயென்னிசையுமணிந்தருளே.

அடுத்தானையடியேனையஞ்சேலென்றிங்கண்டானைச் சிறுநெறிகளடையாதென்னைத், தடுத்தானைப்பெருநெறிக்குத்தடைதீர்த்தானைத் தன்னருளுந்தன்பொருளுந்தானேயென்பாற், கொடுத்தானைக்குற்றமெலாங்குணமாக்கொள்ளுங்குணத்தானைச்சமயமதக்குழிநின்றென்னை, யெடுத்தானையெல்லாஞ்செய்வல்லசித்தையீந்தானைக்கண்டுகளித்திருக்கின்றேனே. (ஙக)

அறிந்தானையறிவறிவுக்கறிவானானையருட்பெருஞ்சோதியினானையடியேனன்பிற், செறிந்தானையெல்லாஞ்செயவல்லசித்தாய்ச்சிறந்தானைச்சிறுநெறியிற்சென்றார்தம்மைப், பிறிந்தானையென்னுளத்திற்கலந்துகொண்டபிரியமுள்ளபெருமானைப்பிறவிதன்னை, யெறிந்தானையெனையெறியாதெடுத்தாண்டானையெம்மானைக்கண்டுகளித்திருக்கின்றேனே. (ஙஉ)

பாலானைத்தேனானைப்பழத்தினானைப்பலனுறுசெங்கரும்பானைப்பாய்ந்துவேகாக், காலானைக்கலைசாகாத்தலையினானைக்காலென்றுந்தலையென்றுங்கருதற்கெய்தா, மேலானைமேனிலைமேலமுதானானைமேன்மேலுமெனதுளத்தேவிளங்கலன்றி, யேலானையென்பாடலேற்றுக்கொண்டவெம்மானைக்கண்டுகளித்திருக்கின்றேனே. (ஙங)

அம்பலத்தாடுமமுதமேயென்கோவடியனேனுருயிரென்கோ
எம்பலத்தெல்லாம்வல்லசித்தென்கோவென்னிருகண்மணியென்கோ
நம்பிடிலணைக்குநற்றுணையென்கோநான்பெற்றபெருஞ்செல்வமென்கோ
இம்பரிப்பிறப்பேமெய்ப்பிறப்பாக்கியென்னையாண்டருளியநினையே. (ஙச)

அம்மையேயென்கோவப்பனேயென்கோவருட்பெருஞ்சோதியேயென்கோ, செம்மையேயெல்லாம்வல்லசித்தென்கோதிருச்சிற்றம்பலத்தமுதென்கோ, தம்மையேயுணர்ந்தாருளத்தொளியென்கோதமியனேன்றரித்துணையென்கோ, இம்மையேயழியாத்திருவுருவளித்திங்கென்னையாண்டருளியநினையே. (ஙரு)

பதியேயெம்பரனேயெம்பரம்பரனேயெமது பராபரனேயானந்தப்பதந்தருமெய்ஞ்ஞான, நிதியேமெய்ந்நிறைவேமெய்ந்நிலையேமெய்யின்பநிருத்தமிடுந்தனித்தலைமைநபுணமணிவிளக்கேகதியேயென்கண்ணேயென்கண்மணியேயெனதுகருத்தேயென்கருத்திலூற்றகனிவேசெங்கனியே, துதியேயென்னுரையேயென்றேழாவென்னுளத்தேசுத்தநடம்புரிகின்றசித்தசிகாமணியே. ()



## கீர்த்தனைகள்.

இராகம்- கல்யாணி. அடதாளம்.

பல்லவி.

இதுநல்லதருணம் - அருள்செய்ய
இதுநல்லதருணம்.

அநுபல்லவி.

பொதுநல்லநடம்வல்லபுண்ணியரேகேளும்
பொய்யேதுஞ்சொல்லிலேன்மெய்யேபுகல்கின்றேன் இது-

சரணங்கள்.

மதித்தசமயமதவழக்கெல்லா மாய்ந்தது
வருணாச்சிரமமெனுமயக்கமுஞ் சாய்ந்தது
கொதித்தலோகாசாரக்கொதிப்பெல்லா மொழிந்தது
கொலையுங்களவுமற்றைப்புலையு மழிந்தது இது-
குறித்தவேதாகமக்கூச்சலு மடங்கிற்று
கொதித்தமனமூட்டக்குரங்கு மடங்கிற்று
வெறித்தவெவ்வினைகளும்வெந்து குலைந்தது
விந்தைசெய்கொடுமாயைச்சந்தையுங் கலைந்தது இது-
கோபமுங்காமமுங்குடிகெட்டுப் போயிற்று
கொடியவோராங்காரம்பொடிபொடி யாயிற்று
தாபமுஞ்சோபமுந்தான்றானே சென்றது
தத்துவமெல்லாமென் றன்வசநின்றது இது-
கரையாவெனதுமனக்கல்லுங் கரைந்தது
கலந்துகொளற்கென்கருத்தும் விரைந்தது
புரையாநிலையிலென்புந்தியுந் தங்கிற்று
பொய்ப்படாக்காதல்ததும்பிமேற் பொங்கிற்று இது-(ஙஎ)

இராகம்- பைரவி. தாளம்-ரூபகம்.

பல்லவி.

இவர்க்குமெனக்கும்பெருவழக்கிருக்கின்றது
என்றுந்தீராவழக்குக்காணடி.

அநுபல்லவி.

எவர்க்கும்பெரியவர்பொன்னம்பலத்தேநடம்
இட்டாரெனக்குமாலையிட்டாரிதோவந்தார். இவர்-

சாணங்கள்.

அன்றிதோவருகின்றேனென்றுபோனவ ரங்கே
யார்செய்ததடையாலோவிருந்தாரென்கையிற் சங்கே
இன்றுதன்கையிற்கொண்டேவந்துநிற்கின்று ரிங்கே
யிந்தக்கதவைமூடுஇவர்போவதினி யெங்கே இவர்-
அவரவருந்தேதயறிந்தலர்தூற்றப் பட்டே
னன்றுபோனவரின்றுவந்துநிற்கின்றார் கெட்டேன்
இவருதைதயறியாதேமுன்னமேமாந்து விட்டே
னிந்தக்கதவைமூடுஇனியெங்கும்போக வொட்டேன் இவர்-
சின்னவயதிலென்னைச்சேர்ந்தார்புன்னகை யோடு
சென்றார்தயவாலின்றுவந்தாரிவற்கா ரீடு
என்னைவிட்டினியிவரெப்படிப்போவா ரோடு
இந்தக்கதவைமூடுஇரட்டைத்தாட்கோலைப் போடு இவர்-(ஙஅ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்- எதுகுலகாம்போதி. அடதாளம்.

பல்லவி.

ஆணிப்பொன்னம்பலத்தேகண்டகாட்சிகள்
அற்புதக்காட்சியடி- அம்மா அற்புதக்காட்சியடி

சரணங்கள்.

சோதிமலையொன்றுதோன்றிற்றதிலொரு
வீதியுண்டாச்சுதடி- அம்மா வீதியுண்டாச்சுதடி ஆணி-

வீதியிற்சென்றேனவ்வீதிநடுவொரு
மேடையிருந்ததடி - அம்மா மேடையிருந்ததடி ஆணி-

மேடைமேலேறினேன்மேடைமேலங்கொரு
கூடமிருந்ததடி - அம்மா கூடமிருந்ததடி ஆணி-

கூடத்தைநாடவக்கூடமேலேழ்நிலை
மாடமிருந்ததடி - அம்மா மாடமிருந்ததடி ஆணி-

ஏழ்நிலைக்குள்ளுமிருந்தவதிசயம்
என்னென்றுசொல்வனடி - அம்மா என்னென்றுசொல்வனடி ஆணி-

ஓர்நிலைதன்னிலொளிர்முத்துவெண்மணி
சீர்நீலமாச்சுதடி -அம்மா சீர்நீலமாச்சுதடி ஆணி-

பாரோர்நிலையிற்கருநீலஞ்செய்ய
பவளமதாச்சுதடி - அம்மா பவளமதாச்சுதடி ஆணி-

மற்றோர்நிலையில்மரகதப்பச்சைசெம்
மாணிக்கமாச்சுதடி - அம்மா மாணிக்கமாச்சுதடி ஆணி-

பின்னோர்நிலையிற்பெருமுத்துவச்சிரப்
போர்மணியாச்சுதடி - அம்மா போர்மணியாச்சுதடி ஆணி-

வேற்றோர்நிலையில்மிகும்பவளத்திரள்
வெண்மணியாச்சுதடி - அம்மா வெண்மணியாச்சுதடி ஆணி-

புகலோர்நிலையிற்பொருந்தியபன்மணி
பொன்மணியாச்சுதடி - அம்மா பொன்மணியாச்சுதடி ஆணி-

பதியோர்நிலையிற்பகர்மணியெல்லாம்
படிகமதாச்சுதடி - அம்மா படிகமதாச்சுதடி ஆணி-

ஏழ்நிலைமேலேயிருந்ததோர்தம்ப
மிசைந்தபொற்றம்பமடி - அம்மா விசைந்தபொற்றம்பமடி ஆணி-

பொற்றம்பங்கண்டேறும்போதுநான்கண்ட
புதுமையென்சொல்வனடி- அம்மா புதுமையென்சொல்வனடி ஆணி-

ஏறும்போதங்கேயெதிர்ந்தவகைசொல
வென்னளவல்லவடி - அம்மா என்னளவல்லவடி ஆணி-

ஆங்காங்கேசத்திகளாயிரமாயிர
மாகவந்தார்களடி - அம்மா ஆகவந்தார்களடி ஆணி-

வந்துமயக்கமயங்காமல்நானருள்
வல்லபம்பெற்றேனடி - அம்மா வல்லபம்பெற்றேனடி ஆணி-



வல்லபத்தாலந்தமாதம்பத்தேறி
மணிமுடிகண்டேனடி - அம்மா மணிமுடிகண்டேனடி ஆணி-

மணிமுடிமேலோர்கொடுமுடிநின்றது
மற்றதுகண்டேனடி - அம்மா மற்றதுகண்டேனடி ஆணி-

கொடுமுடிமேலாயிரத்தெட்டுமாற்றுப்பொற்
கோயிலிருந்ததடி - அம்மா கோயிலிருந்ததடி ஆணி-

கோயிலைக்கண்டங்கேகோபுரவாயிலிற்
கூசாதுசென்றேனடி - அம்மா கூசாதுசென்றேனடி ஆணி-

கோபுரவாயிலுட்சத்திகள்சத்தர்கள்
கோடிபல்கோடியடி - அம்மா கோடிபல்கோடியடி ஆணி-

ஆங்கவர்வண்ணம்வெள்வண்ணஞ்செவ்வண்ணமுன்
னைவண்ணமாகுமடி - அம்மா ஐவண்ணமாகுமடி ஆணி-

அங்கவரெல்லாமிங்காரியவென்னவ
மப்பாலேசென்றேனடி - அம்மா அப்பாலேசென்றேனடி ஆணி-

அப்பாலேசென்றேனங்கோர்திருவாயிலில்
ஐவரிருந்தாரடி - அம்மா ஐவரிருந்தாரடி ஆணி-

மற்றவர்நின்றுவழிகாட்டமேலோர்
மணிவாயிலுற்றேனடி - அம்மா மணிவாயிலுற்றேனடி ஆணி-

எண்ணுமவ்வாயிலிற்பெண்ணோடாணுக
இருவரிருந்தாரடி. - அம்மா இருவரிருந்தாரடி ஆணி-

அங்கவர்காட்டவணுக்கத்திருவாயில்
அன்போடுகண்டேனடி - அம்மா அன்போடுகண்டேனடி ஆணி-

அத்திருவாயிலிலானந்தவல்லியென்
னம்மையிருந்தாளடி - அம்மா அம்மையிருந்தாளடி ஆணி-

அம்மையைக்கண்டேனவளருள்கொண்டேன்
அமுதமுமுண்டேனடி - அம்மா அமுதமுமுண்டேனடி ஆணி-

தாங்குமவளருளாலேநடராஜர்
சந்நிதிகண்டேனடி - அம்மா சந்நிதிகண்டேனடி ஆணி-

சந்நிதியிற்சென்றுநான்பெற்றபேறது
சாமியறிவாரடி - அம்மா சாமியறிவாரடி ஆணி- (கக)

நாமாவளி.

அம்ப[illegible]த்தரசேயருமருந்தே யானந்தத்தேனேயருள்விருந்தே
பொ[illegible]டத்தரசேபுண்ணியனே புலவரெலாம்புகழ்கண்ணியனே
[illegible]சிவசிவசிவசின்மயதேஜாசிவசுந்தரகுஞ்சிதநடராஜா
மலைதருமகளேமடமயிலே மதிமுகவமுதேயிளங்குயிலே
ஆனந்தக்கொடியேயிளம்பிடியேயற்புதத்தேனேமலைமானே
படனவிவேகபரம்பரவேதா நடனசபேசசிதம்பரநாதா
அரிபிரமாதியர்தேடியநாதா அரகரசிவசிவஆடியபாதா
அந்தணவங்கணவம்பரபோகா அம்பலநம்பரவம்பிகைபாகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பரவிம்பசிதம்பரநாதா அஞ்சிதாஞ்சிதகுஞ்சிதபாதா
தந்திரமந்திரயந்திரபாதா சங்கரசங்கரசங்கரநாதா
கருணாநிதியேசபாபதியே கதிமாநிதியேபசுபதியே
சபாபதிபாதம்தபோபிரசாதம் தயாநிதிபோதம்சதோதயவேதம்
கனகசிதம்பரகங்காபுரகர அனகபரம்பரசங்கரஹரஹர
சகலகலாண்டசராசரகாரண சகுணசிவாண்டபராபரபூரண
சிதம்பரகாசாபரம்பிரகாசா சிதம்பரேசாசுயம்பிரகாசா
சோதிசோதிசோதிசுயஞ் சோதிசோதிசோதிபரஞ்
சோதிசோதிசோதியருட் சோதிசோதிசோதிசிவம்
அருட்பிரகாசம்பரப்பிரகாசம் அகப்பிரகாசம்சிவப்பிரகாசம்
நடப்பிரகாசம்தவப்பிரகாசம் நவப்பிரகாசம்சிவப்பிரகாசம்
போகஞ்சுகபோகஞ்சிவ போகம்மதுநித்யம்
ஏகஞ்சிவமேகஞ்சிவ மேகம்மிதுநித்யம்
இக்கரைகடந்திடலக்கரையே இருப்பதுசிதம்பரசர்க்கரையே
என்னுயிருடம்பொடுசித்தமதே இனிப்பதுநடராஜபுத்தமுதே
நலமங்கலமுறுமம்பல நடனம்மதுநடனம்
பலனன்கருள்சிவசங்கர படனம்மதுபடனம்
உயர்திருச்சபையாடகமே யாடுதலானந்தநாடகமே
கனகாகரபுரஹரசிரந்தா கருணாகரபரசுரவரஹரஹர
கனகசபாபதிபசுபதிசிவபதி அனகவுமாபதியதிபதிசிவபதி
உத்தரஞானசிதம்பரமே சித்தியெலாந்தருமம்பரமே
கருணாம்பரவரகரசிரபவபவ அருணாம்பரதரஹரஹரசிவசிவ
அம்பலவாசிவமாதேவா வம்பலவாவிங்குவாவாவா
நடராசனெல்லார்க்குநல்லவனே நல்லவெலாஞ்செயவல்லவனே
ஆநந்தநாடகங்கண்டோமேபர மானந்தபோனகங்கொண்டோமே
வேதாந்தபராம்பரசவுசய நாதாந்தநடாம்பரஜயஜய
ஏகாந்தசர்வேசசமோதய யோகாந்தநடேசநமோநம
ஆதாம்பரவாடகவதிசய பாதாம்புஜநாடகஜயஜய
போதாந்தபுரேசசிவகாம நாதாந்தநடேசநமோநம
சகளவுபகளநிட்களநாதா உகளசத்தளமங்களபாதா
சந்ததமுஞ்சிவசங்கரபஜனம் சங்கிதமென்பதுசற்சனவசனம்
சங்கரசிவசிவமாதேவா எங்களையாட்கொளவாவாவா
அரகரசிவசிவமாதேவா அருளமுதந்தரவாவாவா
சதபரிசதஉபசதமதவிதபவ சிதபரிகதபதசிவசிவசிவசிவ
அரகரவரசுரசுககரபவபவ சிரபுரசுரபரசிவசிவசிவசிவ
ஜாலகோலகனகாம்பரசாயக காலகாலவனகாம்பரநாயக
நடனசிகாமணிநவமணியே திடனகமாமணிசிவமணியே
நடமிடுமம்பலநன்மணியே புடமிடுசெம்பலபொன்மணியே
உவட்டாதுசித்திக்குமுள்ளமுதே தெவிட்டாதுதித்திக்குந்தெ[illegible]ளமுதே
நடராஜவள்ளலைநாடுதலே நந்தொழிலாம்விளையாடுதலே
அருட்பொதுநடமிடுதாண்டவனே யருட்பெருஞ்சோதியென்னுண்டவ
நடுநாடிநடுநாடிநடமாடுபதியே நடராஜநடராஜநடராஜநிதியே {னே
நடுநாடியொடுநாடிநடமாடுமுருவே நடராஜநடராஜநடராஜகுருவே
நடுநாடியிடைநாடிநடமாடுநலமே நடராஜநடராஜநடராஜபலமே. (௬௦)

---

உ

கணபதிதுணை

குமரகுருபரசுவாமிகளருளிச்செய்த

# சகலகலாவல்லிமாலை.

கலித்துறை.

வெண்டாமரைக்கன்றிநின்பதந்தாங்கவென்வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத்தகாதுகொலோசகமேழுமளித்
துண்டானுறங்கவொழித்தான்பித்தாகவுண்டாக்கும்வண்ணங்
கண்டான்சுவைகொள்கரும்பேசகலகலாவல்லியே. (௧)

நாடும்பொருட்சுவைசொற்சுவைதோய்தரநாற்கவியும்
பாடும்பணியிற்பணித்தருள்வாய்பங்கயாசனத்திற்
கூடும்பசும்பொற்கொடியேகனதனக்குன்றுமைம்பாற்
காடுஞ்சுமக்குங்கரும்பேசகலகலாவல்லியே. (௨)

அளிக்குஞ்செழுந்தமிழ்த்தெள்ளமுதார்ந்துன்னருட்கடலிற்
குளிக்கும்படிக்கென்றுகூடுங்கொலோவுளங்கொண்டுதெள்ளித்
தெளிக்கும்பனுவற்புலவோர்கவிமழைசிந்தக்கண்டு
களிக்குங்கலாபமயிலேசகலகலாவல்லியே. (௩)

தூக்கும்பனுவற்றுறைதோய்ந்தகல்வியுஞ்சொற்சுவைதோய்
வாக்கும்பெருகப்பணித்தருள்வாய்வடநூற்கடலுந்
தேக்குஞ்செழுந்தமிழ்ச்செல்வமுந்தொண்டர்செந்நாவினின்று
காக்குங்கருணைக்கடலேசகலகலாவல்லியே. (௪)

பஞ்சப்பிதந்தருசெய்யபொற்பாதபங்கேருகமென்
னெஞ்சத்தடத்தலராததென்னேநெடுந்தாட்கமலத்
தஞ்சத்துவசமுயர்த்தோன்செந்நாவுமகமும்வெள்ளைக்
கஞ்சத்தவிசொத்திருந்தாய்சகலகலாவல்லியே. (௫)

பண்ணும்பரதமுங்கல்வியுந்தீஞ்சொற்பனுவலும்யா
னெண்ணும்பொழுதெளிதெய்தநல்காயெழுதாமறையும்
விண்ணும்புவியும்புனலுங்கனலும்வெங்காலுமன்பர்
கண்ணுங்கருத்துநிறைந்தாய்சகலகலாவல்லியே. (௬)

பாட்[illegible]ம்பொருளும்பொருளாற்பொருந்தும்பயனுமென்பாற்
[illegible]டும்படிநின்கடைக்கணல்காயுளங்கொண்டுதொண்டர்
தீட்டுங்கலைத்தமிழ்த்தீம்பாலமுதந்தெளிக்கும்வண்ணங்
காட்டும்வெள்ளோதிமப்பேடேசகலகலாவல்லியே. (௭)

சொல்விற்பனமுமவதானமுங்கவிசொல்லவல்ல
நல்வித்தையுந்தந்தடிமைகொள்வாய்நளினாசனஞ்சேர்

2966

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்விக்கரிதன்றொருகாலமுஞ்சிதையாமைநல்கு
கல்விப்பெருஞ்செல்வப்பேறேசகலகலாவல்லியே. (௮)

சொற்கும்பொருட்குமுயிராமெய்ஞ்ஞானத்தின்றோற்றமென்ன
நிற்கும்பிராமியென்னவிலென்னேநின்றிலைபுழைக்கை
நற்குஞ்சரத்தின்பிடியோடரசன்னநாணநடை
கற்கும்பதாம்புயத்தாளேசகலகலாவல்லியே. (௯)

மண்கண்டவெண்குடைக்கீழாகமேம்பட்டமன்னருமென்
பண்கண்டளவிற்பணியச்செய்வாய்படைப்போன்முதலாம்
விண்கண்டதெய்வம்பலகோடியுண்டேனும்விளம்பிலுன்போற்
கண்கண்டதெய்வமுளதோசகலகலாவல்லியே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## தோத்திரக்கோவை முற்றிற்று.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரூரன்னடியானடித்தொண்டனுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்புகலூர். பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

தம்மையேபுகழ்ந்திச்சைபேசினுஞ்சார்வினுந்தொண்டர்தருகிலாப்
பொய்ம்மையாளரைப்பாடாதேயெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்காள்
இம்மையேதருஞ்சோறுங்கூறையுமேத்தலாமிடர்கெடலுமாம்
அம்மையேசிவலோகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௧)

மிடுக்கிலாதானைவீமனேவிறல்விசயனேவில்லுக்கிவனென்று
கொடுக்கிலாதானைப்பாரியேயென்றுகூறினுங்கொடுப்பாரிலை
பொடிக்கொண்மேனியெம்புண்ணியனெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்கள்
அடுக்குமேலமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௨)

காணியேற்பெரிதுடையனேகற்றுநல்லனேசுற்றநற்கிளை
பேணியேவிருந்தோம்புமேயென்றுபேசினுங்கொடுப்பாரிலை
பூணிபூண்டுழப்புட்சிலம்புந்தண்புகலூர்பாடுமின்புலவீர்காள்
ஆணியாயமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௩)

நரைகள்போந்துமெய்தளர்ந்துமூத்துடனடுங்கிநிற்குமிக்கிழவனை
வரைகள்போற்றிரடோளனேயென்றுவாழ்த்தினுங்கொடுப்பாரிலை
புரைவெள்ளேறுடைப்புண்ணியன்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அரையனாயமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௪)

வஞ்சநெஞ்சனைமாசழக்கனைப்பாவியைவழக்கில்லியைப்
பஞ்சதுட்டனைச்சாதுவேயென்றுபாடினுங்கொடுப்பாரிலை
பொன்செய்செஞ்சடைப்புண்ணியன்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
நெஞ்சினோயறுத்துஞ்சுபோவதற்கியாதுமையுறவில்லையே. (௫)

நலமிலாதானைநல்லனேயென்றுநரைத்தமாந்தரையிளையனே
குலமிலாதானைக்குலவனேயென்றுகூறினுங்கொடுப்பாரிலை
புலமெலாம்வெறிகமழும்பூம்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அலமராதமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௬)

நோயனைத்தடந்தோளனேயென்றுநொய்யமாந்தரைவிழுமிய
தாயன்றேபுலவோர்க்கெலாமென்றுசாற்றினுங்கொடுப்பாரிலை
போயுழன்றுகண்குழியாதேயெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்காள்
ஆயமின்றிப்போயண்டமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௭)

எள்விழுந்திடம்பார்க்குமாகிலுமீக்குமீகிலனாகிலும்
வள்ளலேயெங்கண்மைந்தனேயென்றுவாழ்த்தினுங்கொடுப்பாரிலை
புள்ளொலாஞ்சென்றுசேரும்பூம்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அள்ளற்பட்டழுந்தாதுபோவதற்கியாதுமையுறவில்லையே. (௮)

கற்றிலாதானைக்கற்றுநல்லனேகாமதேவனையொக்குமே
முற்றிலாதானைமுற்றனேயென்றுமொழியினுங்கொடுப்பாரிலை



பொத்திலாந்தைகள்பாட்டறாப்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அத்தனாயமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௯)

தையலாருக்கொர்காமனேயென்றுஞ்சாலநல்லழகுடையனே
கையுலாவியவேலனேயென்றுகழறினுங்கொடுப்பாரிலை
பொய்கைவாவியின்மேதிபாய்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
ஐயனாமமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௧௦)

செறுவினிற்செழுங்கமலமோங்குதென்புகலூர்மேவியசெல்வனை
நறவம்பூம்பொழில்நாவலூரன்வனப்பகையப்பன்சடையன்றன்
சிறுவன்வன்றொண்டனூரன்பாடியபாடல்பத்திவைவல்லவர்
அறவனடிசென்றுசேர்வதற்கியாதுமையுறவில்லையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருத்தொண்டத்தொகை. பண்-கொல்லிக்கவ்வாணம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன் றிருநீலகண்டத்துக்குயவனார்க்கடியே, னில்லையேயென்னாதவியற்பகைக்குமடியேனிளையான்றன்குடிமாறனடியார்க்குமடியேன், வெல்லுமாமிகவல்லமெய்ப்பொருளுக்கடியேன் விரிபொழில்சூழ்குன்றையார்விறன்மிண்டற்கடியே, னல்லிமென்முல்லையந்தாரமர்நீதிக்கடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. (௧)

இலைமலிந்தவேனம்பியெறிபத்தற்கடியேனேனாதிநாதன்றனடியார்க்குமடியேன், கலைமலிந்தசீர்நம்பிகண்ணப்பற்கடியேன்கடவூரிற்கலயன்றனடியார்க்குமடியேன், மலைமலிந்ததோள்வள்ளன்மானக்கஞ்சாறனெஞ்சாதவாட்டாயனடியார்க்குமடியேன், அலைமலிந்தபுனன்மங்கையானாயற்கடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. (௨)

மும்மையாலுலகாண்டமூர்த்திக்குமடியேன்முருகனுக்குமுருத்திரபசுபதிக்குமடியேன், செம்மையேதிருநாளைப்போவாற்குமடியேன்றிருக்குறிப்புத்தொண்டர்தம்மடியார்க்குமடியேன், மெய்ம்மையேதிருமேனிவழிபடாநிற்கவெகுண்டெழுந்ததாதைதாள்மழுவினாலெறிந்த, வம்மையானடிச்சண்டிப்பெருமானுக்கடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. (௩)

திருநின்றசெம்மையேசெம்மையாக்கொண்டதிருநாவுக்கரையன்றனடியார்க்குமடியேன், பெருநம்பிகுலச்சிறைதனடியார்க்குமடியேன்பெருமிழலைக்குறும்பற்கும்பேயார்க்குமடியே, னொருநம்பியப்பூதியடியார்க்குமடியேனொலிபுனல்சூழ்சாத்தமங்கைநீலநக்கற்கடியே, னருநம்பிநமிநந்தியடியார்க்குமடியேனாரூரனாரூரிலம்மானுக்காளே. (௪)

வம்பறாவரிவண்டுமணநாறமலருமதுமலர்நற்கொன்றையானடியலாற்பேணா, வெம்பிரான்சம்பந்தனடியார்க்குமடியேனேயர்கோன்கலிக்காமனடியார்க்குமடியே, னம்பிரான்றிருமூலனடியார்க்குமடியேனாட்டமிகுதண்டிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

139

# தோத்திரக்கோவை.

விலை ரூபா 1 சதம் 25.

தபாற்செலவுவேறு.

வேண்டியவர்கள் கீழ்க்காணப்படும் விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம். வி. பீ. போஸ்டிலும் அனுப்பலாம். தங்கள் விலாசமுதலியவைகளைத் தெளிவாயெழுதல் வேண்டும்.

விலாசம்:

| | |
|---|---|
| ...R. | ச. சிவஸ்வாமிப்பிள்ளை |
| ...SS. | [illegible] |
| ...EDRO. | பருத்தித் துறை. [illegible] |
| ...UOX. | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org